# ஞானச்சுடர்




மார்கழி

2021

288ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்.**

**பொருள் :** பேச முடியாதபடி நாவை அடக்கும் விக்கல் எழுமுன் தருமத்தை விரைந்து செய்யவேண்டும். சாவு வருமுன் தருமம் செய்ய வேண்டுமென்பது. (335)

**நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்**
**பெருமை யுடைத்துஇவ் வுலகு.**

**பொருள் :** ஒருவன் நேற்று உயிரோடிருந்தான், இன்று இறந்தான் என்று சொல்லும் நிலையற்ற தன்மையை இவ்வுலகம் உடையது. (336)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

## தன்னை யறிந்தேன் தானவ னானேன்

### கலிவிருத்தம்



அருவமு முருவமு மாகிய வமலன்
குருவாய் வந்தே குறித்தெனை யாண்டான்
இருபதும் நாலு மில்லா விடத்தில்
கருவாகி நின்றான் காரணன் றானே 05

அச்சந் தீர்த்தெனை யாண்ட சோதி
பொய்த்தவர் நெஞ்சிற் போகா நீதி
மெய்ச்சம யத்தில் விளங்கு மாதி
வைச்சனன் திருவடி வாழ்ந்தேன் யானே 06

அறுபதும் நாலு மறியா வாதி
உறுதுயர் தீர்க்கு முயர்ந்த சோதி
குறுமுனிக் கருள்முனாங் கொடுத்த வாதி
மறுவிலா வென்மனம் வாழ்ந்திருந் தானே 07

அஞ்சின் வழியை யடைத்தோ ரகத்தில்
பஞ்சின்மெல் லடியாள் பாக னிருக்கும்
வெஞ்சினம் வேட்ட வெறிய ரகத்தில்
அஞ்செழுத் துட்பொரு ளடையா தாமே 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3  சுடர் - 288

2021 **பொருளடக்கம்** மார்கழி


| | | |
|---|---|---|
| பிடிவாதத்தில் பிடிமானமா? | சி. நற்குணலிங்கம் | 01 - 03 |
| திருவாசகம் | சு. அருளம்பலவனார் | 04 - 07 |
| அஜபா | கு. சிவபாலராஜா | 08 - 13 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 14 - 16 |
| நலந்தருஞ் சொல்... | முருகவே பரமநாதன் | 17 - 19 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 20 - 21 |
| கருத்துப் பரிமாற்றத்துக்கு... | பூ.க. இராசரத்தினம் | 22 - 23 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 24 - 26 |
| ஜபம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 27 - 28 |
| ஆலயத் தொண்டாற்றி... | மூ. சிவலிங்கம் | 29 - 32 |
| திருமூலநாயனார் வரலாறு | திருமதி நா. சந்திரலீலா | 33 - 35 |
| ஆலயத்தின் உட்பொருளும்... | செல்வி ச. சரணியா | 36 - 37 |
| சிவபெருமான் புகழ்பாடும்... | திருமதி சி. யோகேஸ்வரி | 38 - 40 |
| கல்லில் உதித்த கருணா... | த. செல்வசோதி | 41 - 43 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 44 - 46 |
| குங்கும மகிமை | திருமதி பொ. திலகவதி | 47 - 48 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப் - பூமருவு 106

கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்து இனிதிருந்து - மேன்மைபெற 107

தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே - உள்ளம் உவந்து 108

ஆறுதிருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறும் அவர் சிந்தைகுடி கொண்டோனே - நாறுமலர்க் 109

கந்திப் பொதும்பர்எழு காரலைக்கும் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்கும் செவ்வேளே - சந்ததமும் 110

பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும் - பல்கோடி 111

பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசும் அடல்
பூதமும் தீ நீரும் பொருபடையும் - தீது அகலா 112

வெவ்விடமும் துட்ட மிருக முதலாம் எவையும்
எவ்விடம்வந்து எம்மை எதிர்த்தாலும் - அவ்விடத்தில் 113

பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும் - கச்சைத் 114

திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் - வந்திடுக்கண் 115

சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற - வந்திடுக்கண் 116

எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்து
உல்லாசமாக உளத்திலிருந்து - பல்விதமாம் 117

ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும் சீர்ப்
பேசும் இயல் பல்காப் பியத் தொகையும் - ஓசை 118

எழுத்துமுத லாம்ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து - ஒழுக்கமுடன் 119

இம்மைப் பிறப்பில் இருவா தனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோகித்துத் - தம்மைவிடுத்து 120

ஆயும் பழைய அடியா ருடன் கூட்டித்
தோயும் பரயோகம் துய்ப்பித்துச் - சேய 121

கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று - அருள் 122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

நாம் எல்லோரும் நம் வாழ்வு உயரவேண்டும் என்னும் சிந்தனையோடுதான் செயலாற்றி வருகின்றோம். ஆனால் உயர்வு பெற்றவர் - பெறுகின்றவர் ஒரு சிலரே ஆவர். அதற்கு என்ன காரணம்? உயர்வு அடைய வேண்டும் என்று எண்ணுகிறோமே தவிர அதற்குரிய வழிவகைகளை நாம் சிந்திக்கின்றோமில்லை. சிந்தித்து அதற்கு அமைவாக நாம் நடப்பதில்லை.

மனம்போல் வாழ்வு என்பார்கள். அதாவது எமது வாழ்வு எம் மன நினைவிற்கு தக்கவாறுதான் அமையும். நல்ல நினைவுடன் இருந்தால் அதாவது எம்மைச் சார்ந்தவர்களும், சமூகமும் நன்றாகவே வாழவேண்டும் என்னும் சிந்தனை நமதுள்ளத்தில் பதிந்து இருந்தால் எமது வாழ்வு சிறக்கும். உயரும். "கெடுவான் கேடு நினைப்பான்" என்பது முதுமொழி. பிறருக்குக் கேடு செய்ய எண்ணுபவன் தான் கெடுவதோடு தனது சந்ததியினருக்கும் அந்த எண்ணத்தை விதைத்து விடுகின்றான். எனவே நாம் ஒவ்வொருவரும் நம் மனத்தின் கண்ணே மாசு இல்லாத வகையில் வாழ முயற்சிக்க வேண்டும்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீரபிற"

என்ற வள்ளுவப் பெருமான் வாக்குப்படி மனதிலே மாசு இல்லாது இருத்தல் அனைத்து அறமும் ஆகும். அழுக்குத் துணியில் மேலும் மேலும் அழுக்குப் படிவதுபோல அற நூல்களைப் படிக்காத, அறிவுரைகளைக் கேளாதவர் மனதில் மாசு படியும். மாசு உடைய மனத்தை உடையவர்களது எண்ணங்கள் எதுவும் நிறைவேறாது. மாசில்லாத மனத்தை உடையவர் நினைத்த கருமங்கள் இறையருளால் இலகுவில் கைகூடும். மாசில்லா மனத்தவர் உள்ளத்தில் இறைவன் எழுந்தருளியிருப்பான்.

எனவே ஊரார் நலமாக வாழவேண்டும். உலகோர் நலமாக வாழ வேண்டும். உயிர்கள் யாவும் இன்பமுற வேண்டும் என்று நினைப்பதன்மூலம் எமது வாழ்வையும் வளமாக்குவோம். நமது உள்ளம் உயர்ந்தால் நாம் உயர்வுபெற முடியும். இவ்வகைச் சிந்தனைகளோடு நாமும் எமது சமூகமும் செயலாற்றும்பொழுது எல்லாவித நன்மையையும் அடைய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிய கந்தா! சந்நிதியாய்! அறைகுவாயே

கடுநடையி லொரு மகனைக் கனன்று தந்தை
கண்டித்தால் தண்டித்தால் காற்றா யோடி
கனிகுரலின் தாய் சென்று கையைக் காட்டி
கண்ணான தன்மகனை யணைத்துக் காப்பாள்
அடுநடையா லம்மகனை யணைத்த தாயும்
அவன்துட்டத் தனத்தினால் அடிக்கும் போது
அத்தந்தை யுடன்சென்று அடிபடாமல்
அம்மகனை யணைத்திடுவான் அதனைப்போல
முடிவடையா விவ்வுலகம் முழுவதற்கும்
முதல்வனாய் தந்தைதாய் போல நின்று
முன்வினைக்கா யெம்மையே யடித்தி டாமல்
முன்னணைத்தால் பிழையாமோ முருகா வுன்றன்
அடிபரவி யெப்போதும் முப்போதுமே
அடியார்க்கு வரமருளி ஆற்றங்கரை
அமைந்தவுயர் கோயில் வைகி யெழுந்தருளும்
அரிய கந்தா சந்நிதியாய் அறைகுவாயே.
கோடாமல் காத்தருளிக் குலாவு வாயே.
இளமுருகா சந்நிதியில் நீயிருந்தால்
எங்களுக் கென்னகுறை யென்றிருந்தோம்
ஏதேதோ நாமறியா தேதுங் குறை
இருந்ததோ இல்லையென ஏங்கவிட்டாய்
வளமுடைய தொண்டைமா னாற்றங்கரை
வள்ளிதெய் வானையொடு நீயிருக்க
வாழுகின்ற நின்குடைக்கீழ் நாமிருக்க
வராதகுறை யொன்றினாலே நாமும் வாட
உளமுடைந்து உள்ளெலும்பு முருகி நிற்க
ஒளிவீசுந் தேரேறி நீயுலாவ
உற்றவரோ மற்றவரோ உரிமை யாலே
உன்னடியை மறந்தேதும் உள்ளினர்
குளமான கண்ணோடு அடிய ரெல்லாம்
கும்பிட்டே யுன்னடியைக் குறித்து நின்றோம்
குழந்தையே சந்நிதியாய் எலாம் பொறுத்து
கோடாமல் காத்தருளிக் குலாவுவாயே.

-வை. க. சிற்றம்பலம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. தபேசன்**
(இரசாயனவியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
**மு. சுஸ்ருதன்**
(சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்)
**வே. சம்பந்தநாதன்**
(கிராமசேவகர், புன்னாலைக்கட்டுவன்)
**சி. முஜீபன்**
(இணுவில்)
**செல்வி க. பாமதி**
(கொக்குவில்)
**திருமதி திருச்செல்வம் விஜிதா**
(கூவில், புலோலி தெற்கு)
**செ. சின்னத்துரை**
(ஆசிரியர், மகாத்மாலேன், நெல்லியடி)
**சி. வீரசிங்கம்**
(நீதிமன்ற பதிவாளர், கரவெட்டி)
**த. வயித்திலிங்கம்**
(திருநெல்வேலி)
**சி. சந்திரசேகரம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**சி. தில்லைமணி**
(வட்டுக்கோட்டை)
**வ. அப்புத்துரை**
(வல்வெட்டித்துறை)
**மா. மகாலிங்கம்**
(பழைய பொலிஸ் ரேசன் வீதி, ஆனைக்கோட்டை)
**ச. தமிழ்ச்செல்வம்**
(கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்)
**திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்**
(சுழிபுரம் மேற்கு)
**S. சிவலிங்கராசா**
(முதுநிலை விரிவுரையாளர், பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருபைநாதன் அஜந்தன்
(இணுவில் மேற்கு)
வ. துரைராசலிங்கம்
(சுண்ணாகம் கிழக்கு)
கணேசராஜா நிர்மலராஜன்
(சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்)
திருமதி த. தவேந்திரன்
(ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி)
T. நாகராஜா
(கரந்தன், நீர்வேலி)
சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்
(நீர்வேலி)
அ. பஞ்சாபகேசசர்மா
(ஆவரங்கால்)
A.T. சிவனேசபிள்ளை
(ஞானத்தில்லை, இடைக்காடு)
சிதம்பரி சிவபாதம்
(மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை)
இ. வசந்தகுமார்
(மானிப்பாய் வடக்கு)
ச. சசிகரன்
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
பொ. சந்திரமோகன்
(யாழ்ப்பாணம்)
சி. நீலையினார்
(இடைக்குறிச்சி, வரணி)
இராஜேந்திரம் கஜீபன்
(சண்டிலிப்பாய்)
நா. விக்னேஸ்வரன்
(கோகுலம், சுதுமலை)
தி. சிவபாதசுந்தரம்
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
ந. சிவராஜா
(குமரக்கோட்டம், கோண்டாவில்)
சு. ஸ்ரீஸ்கந்தராசா
(பலாலி வீதி, திருநெல்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. இரத்தினசபாபதி
(கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
**சோம சூரியசிங்கம்**
(கோண்டாவில்)
**S.R. சரவணபவன்**
(பிள்ளையார் கோயிலடி, தாவடி)
**க. வாமதேவன்**
(பஜனைச்சபை, வழக்கம்பரை)
**திருமதி ச. செல்வரஞ்சனா**
(சுண்ணாகம் கிழக்கு)
**S. மனோகரன்**
(மாதா கோயிலடி, கோப்பாய்)
**த. ஜெயவதனா**
(அல்வாய்)
**நடராஜா சறோஜா**
(குடும்பநலசேவை உத்தியோகத்தர், தெல்லிப்பழை)
**த. சுகந்தன்**
(நீர்வேலி வடக்கு, நீர்வேலி)
**சி. சோமகுலசேகரம்**
(கரவெட்டி)
**சி. சரவணப்பெருமாள்**
(மாணிக்கவளவு, கரணவாய்)
**சிவலிங்கம் தேவமலர்**
(அச்சுவேலி)
**S. கணேசமூர்த்தி**
(கெருடாவில், தொண்டைமானாறு)
**S. சத்தியமூர்த்தி**
(காட்டுவளவு, வல்வெட்டித்துறை)
**சு. சிவலிங்கம்**
(குகன்குடிசை, பொலிகண்டி)
**பா. பாலச்சந்திரன்**
(சண்முகபவனம், மயிலணி)
**செ. அரியானந்தம்**
(வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு)
**அன்புமலர் சிதம்பரநாதன்**
(வட்டுக்கோட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. முருகானந்தன்
(கட்டுடைச்சந்தி, மானிப்பாய்)
செ. உலகநாதபிள்ளை
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
செ. இராசதுரை
(வட்டுக்கோட்டை)
இ. பாஸ்கரன்
(சுதுமலை வடக்கு)
N. குணரெட்ணம்
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
V. சிவனேசன்
(கமலை, மானிப்பாய் வீதி)
சே. புலேந்திரன்
(நீர்வேலி)
இ. நடராசா
(தாவடிச்சந்தி, கொக்குவில்)
பொ. செல்வகிருஷ்ணன்
(புலோலி தெற்கு, புலோலி)
சி. சிவசுப்பிரமணியம்
(ஆனந்தநிலையம், கரவெட்டி)
அ. பரமநாதன்
(தெல்லிப்பழை)
திருமதி கமலா குணரெத்தினம்
(வட்டுக்கோட்டை)
திருமதி சத்தியவாணி நந்தகுமார்
(நவாலி, மானிப்பாய்)
கந்தையா செல்வக்குமார்
(புத்தூர் கிழக்கு, புத்தூர்)
திருமதி அன்னலெட்சுமி
(சங்கானை)
சு. சண்முகரட்ணம்
(புத்தூர்)
சோமசுந்தரம் செல்வசுந்தரம்
(மீசாலை கிழக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடிவாதத்தில் பிடிமானமா?

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

வளையாமை, இணங்காமை, முரண்டு பிடித்தல் என்பன பிடிவாதத்தின் பொருளாகும். எப்படி இருக்கவேணுமோ அப்படி இருக்காது, இப்படித்தான் இருக்க முடியும், இதுதான் பிடிக்கும் என முரண்டுபண்ணுதல் மக்களிடம் அதிகம் உண்டு. திமிராகச் செய்தல், திமிராகப் பேசுதல் பிடிவாதத்தின் வெளிப்பாடாகும். மற்ற வர் சொல்வதை ஏற்றுக்கொள்ளாமல் தனது கருத்தை சரியென வலியுறுத்தி அதை எல் லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற மனநிலைதான் பிடிவாதம். நீ மட்டும் எனக்குச் சொந்தம் என்பது வாதம். நீ எனக்கு மட்டும் தான் என்பது பிடிவாதம். பிடித்த ஒன்று கிடைக்கும் இடத்தில் இருப்பினும் அதை தீங்கு எனக் கருதி கிடைக்காமல் தடுக்க நினைக்கும் நமது உரிமையானவர்களைக் கூட வெறுக்க நினைக்கும் கண்மூடித்தன மான முட்டாள்த்தனமே பிடிவாதமாகும். இத் தன்மையுள்ள பிடிவாதத்தில் பிடிமானமாக இருத்தல் வாழ்வைச் சிதைத்துவிடும்.

குழந்தைகளில் அதிகமானோர் பிடி வாதம் பிடித்து ஒரு பொருள் தேவையோ அல் லது ஒரு செயல் செய்யவேண்டும் என்றாலோ அவர்கள் அதில் அதிதீவிரமும், முரண்டு பிடிப்பதும் சில சமயங்களில் நமக்கு எரிச்சல் ஊட்டுவதுபோல் இருக்கும். குழந்தைகளின் மனதில் சிறுவயதிலேயே எதிர்ப்பு, கோபம், பிடிவாதம் உள்ளிட்ட உணர்வுகள் தோன்றி, அவை அவர்களின் இயல்பாகவும் மாற வாய்ப்புள்ளது. பிள்ளைகள் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுக்கும் முக் கிய பொறுப்பு பெற்றோர்களுக்கே உண்டு. சிறு வயது முதல் பிள்ளையின் பிடிவாத குணத்தில் பெற்றோர் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் பிள்ளை வளர, வளர பிள்ளைக்கு பிடிவாதத்தில் பிடிமானம் வரத்தொடங்கிவிடும். இதனால் பின்னுக்கு வருந்த நேரிடும்.

"வாதத்துக்கு மருந்து உண்டு. பிடி வாதத்துக்கு மருந்து இல்லை" என்ற முது மொழி ஒன்று உண்டு. "பிடித்த முயலுக்கு மூன்று கால்" என்ற மொழியையும் கிராமப் புறங்களில் அதிகம் பயன்படுத்துவர். தனது எண்ணம், பேச்சு, செயல் எல்லாவற்றையும் எவ்வித மாற்றுக்கருத்தும் கூறாமல் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென கட்டாயப்படுத் துவர். இது அவர்களது சிறுவயது முதலான பழக்கமேயாகும். பிடிவாதக் குணத்தால் சிலர் வெற்றியடையலாம். ஆனால் அது நிரந்தர மான வெற்றியல்ல. அத்துடன் சுற்றியிருப்பவர் கள் மத்தியில் இவருக்கு கெட்டபெயர் உண் டாகும். இருந்தாலும் தனது தவறை ஏற்காமல், தன் செயலுக்கு நியாயமான காரணங்களைத் தேடிக் கூறுவர்.

அடுத்தவரின் பிடிவாதத்தை திமிர் என் றும், தன்னுடைய பிடிவாதத்தை மன உறுதி என்றும் அழகாக சில மனிதர் பிரிக்கின்றனர். எதுவும் இல்லாமல் பிறந்து, எல்லாம் வேண் டும் என அலைந்து, எதுவும் நிரந்தரம் இல்லை எனத் தெரிந்தும், உயிரும் சொந்தம் இல்லை என உணர்ந்தும் பிடிவாதக் குணத்தைவிட சிலருக்கு விருப்பம் இல்லை. அதன்வழி வாழ் வதுதான் வாழ்க்கை என நினைத்து வாழ் கிறார்கள். அவர்கள் ஏனையோரால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. "உன்னை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லையே என்று நீ ஏங்கும்

*திட்டமிட்டுச் செயற்பட்டால் தடைக்கல் நம் பாதையின் படிக்கல் ஆகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தருணத்திலும் உன்னை நீ இழந்து கொண்டிருக்கிறாய்" கார்ல்மார்க்ஸ் கருத்து. மண்ணுக்குக் கீழே அடக்கமாகும்வரை மண்ணுக்கு மேலே அடக்கமாக இருக்காது பிடிவாதமாய் நடமாடுவது நல்லதுக்கு அல்ல. பிடிவாதம் மனிதனை உருக்குலையச் செய்யும் எதிலும் முன்னேற நினைப்பவனுக்கு அனைத்திலும் பொறுமைதான் தேவையே தவிர, பிடிவாதக் குணம் இருக்கவே கூடாது. வாழ்க்கையில் பிடிவாதமற்ற நல்லொழுக்கமே சிறந்த துணை. தம்மைத் தாமே சுய பரிசோதனை செய்பவர்கள் பிடிவாதக் குணத்திலிருந்து விலகிக்கொள்ள முடியும். உன் மனம் உடைக்கப்படும் ஒவ்வொரு தருணமும் பிடிவாதத்தை வரவழைக்காது நீ செதுக்கப்படுகிறாய் என்பதை உணர்ந்தால் விடுபடுவது இலகு.

பிடிவாதம் என்ற குணம் வாழ்க்கையில் பல சிக்கல்களை உண்டாக்கும். தனது பிடிவாதக் குணத்தால் ஒருவர் தவறான கருத்தை முன்வைப்பதால் உறவுகள், நட்புகள் பின்னடைவைச் சந்திக்க நேரிடும். பிடிவாதம் என்பது வேறு, விவாதம் என்பது வேறு. இரண்டுக்கும் அடிப்படை நோக்கம் ஒன்றே. ஆனாலும் பிடிவாதம் பெரும்பாலும் நெருங்கியவர்கள் மத்தியில்த்தான் செல்லுபடியாகும். விவாதம் என்பது பேச்சுத்திறனை வைத்து, பொருள் ஞானத்தை வைத்து எங்கும் செல்லுபடியாகும். பிடிவாதக்காரருக்கு மற்றவரின் பேச்சைப்பற்றி கவலையே கிடையாது. பிடிவாதத்தில் ஒரு கட்டத்தில் சர்வாதிகாரம் தலைதூக்கி இப்படித்தான் என முடித்துவிடுவர். பிடிவாதம் தன்னம்பிக்கையைப் பாதிக்கும். அடிப்படையில் பிடிவாதக் காரர் தைரியசாலிகள் அல்லர். வறட்டுக் கௌரவம் பார்ப்பவர்கள் எளிதில் கற்பனையாக எதையாவது நினைத்து வருத்தப்படுவார்கள். தன்னால் இது முடியாது என்ற தன்னம்பிக்கை இன்மையை மறைப்பதற்காகவே பிடிவாதம் என்ற வேடத்தை சிலர் போட்டுக்கொள்கிறார்கள். இவர்கள் தனித்து எதையும் வெற்றிகரமாகச் செய்ய முடியாததால்த்தான் பிறரது துணையை, ஆதரவை தனது பிடிவாதத்தால் பெற முயற்சிப்பர்.

பொதுவாக நமது வீடுகளில், பணி புரியும் அலுவலகங்களில் அல்லது நண்பர்களுடன், உறவினர்களுடன் உரையாடும்போது விவாதங்கள் நடைபெறலாம். குடும்பத்தினர் அல்லது குடும்பத்துக்கு அதிக அளவு பொருள் தருபவர் அல்லது குடும்பத்தில் மிக அதிகம் படித்தவர் என்ற நிலையில் நல்ல கருத்துக்களை பிடிவாதமாய்க் கூறுவதைவிட எல்லோருடைய கருத்தையும் கேட்டபின் தனது கருத்தைக் கூறினால் ஏற்றுக்கொள்வார்கள். அனைவருக்கும் உரிய அங்கீகாரம் கொடுக்கவேண்டும், சிறியவர்கள் ஆனாலும், கல்வி அறிவு இல்லாதவர்களாயினும் அவர்களுக்கும் திறமைகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொண்டு அவர்களது கருத்தையும் கேட்டு ஆலோசிக்க வேண்டும். நான்தான் இங்கு எல்லாமே என்ற தன்முனைப்பையும் விட வேண்டும். பிறர் கூறும் ஏற்கமுடிந்த கருத்துக்களை ஏற்கும் மனப்பக்குவமும் தவறு என்றால் அவர் மனம் புண்படாமல் தவறு எனக் கூறும் சாந்த நிலையும் பெறவேண்டும். பிடிவாதத்தை விட்டுவிட்டு பிறரது உணர்வுக்கு மதிப்புக்கொடுத்து அதனால் நமது தன்னம்பிக்கையுடன் மற்றவர்களுடைய தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வீண்பிடிவாதம், வறட்டுக்கோபம், தேவையற்ற சந்தேகம் இவற்றால் மகிழ்ச்சியான தருணங்களும், உண்மையான நேசங்களும், உயிருக்கு உயிரான பாசங்களும், அன்பான உறவுகளும், அருமையான நட்புகளும் தொலைந்துவிடுகின்றன. யாருக்கிடையிலும் சண்டை என்று ஒன்று வந்து

*முதுமையின் சுருக்கம் முகத்தில், முயலாமையின் சுருக்கம் அகத்தில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால், சிரித்தால் தீரும் சண்டைதான். ஆனால் யார் முதலில் சிரிப்பது என்பதுதான் பிரச்சினை. விட்டுக்கொடுங்கள் பிடிவாதத்தை விடுங்கள் வாழ்வில் பிடிமானம் வரும். நம்முடைய மொத்தப் பிடிவாதத்தையும் உடைக்கும் வலிமை நமக்குப் பிடித்தவரின் மௌனத்துக்கு மட்டுமே உண்டு. மனம்விட்டுப் பேசாத வரை கவலைகளும், கஷ்டங்களும் ஒரு முடிவுக்கு வருவதில்லை. பிடிவாதம் அதிகமானால் பிரிவின் தொடக்கம் ஆரம்பமாகும். சிலரது பிடிவாத மௌனங்கள் வார்த்தைகள் அற்ற வன்முறை.

பிடிவாதங்கள் பிடித்தவர்களுடன் மட்டும் செல்லுபடியாவதுபோல பிடிக்கவில்லை என்பதைக்கூட பிடிவாதம் பிடித்துத்தான் சிலருக்கு சொல்லவேண்டியிருக்கிறது. சிலரது பிடிவாதங்கள் எவரிடமும் செல்லுபடியாவதில்லை. பிடிவாதங்களுக்கு பிரியாவிடை கொடுத்துவிட்டால் நேசங்கள் ஆரம்பரிக்கும். பிடித்தவற்றை எல்லாம் பிடிவாதமாக பிடித்து வைத்திருப்பவர்கள் பலர். அதட்டலில் மொழிகள் பிடிவாதம் கொண்டாலும் சிலரது பிரியத்தில் மீண்டும் பிடிமானம் பிறக்கும். பிரியம் உண்மையெனில் பிரிவுக்குக் காரணம் தேடாதே. நல்லவை பிடித்தால் பிடித்ததில் பிடிவாதமாய் இரு.

எல்லோருக்கும் பிடித்தவராய் இருங்கள். ஆனால் பிடிவாதமாய் இருக்காதீர்கள். சிலரின் வைராக்கியம் பலரது பார்வையில் வெற்றுப் பிடிவாதம். நாம் வளர வளர பிடிவாத குணத்துக்கு கொஞ்சம், கொஞ்சமாய் ஓய்வளிக்க விரும்புகிறோம். முதுமையில் பிடிவாதத்துக்கு ஓய்வளிக்க இயலாது. மீண்டும் கொஞ்சம், கொஞ்சமாய் மழலையாகிறோம். பிடிவாதம் தளரும்போது தன்மையான மனதை அறியலாம். பிடிவாத மனதை பிடித்தபடியே இருந்தால் பிடிப்பில்லா வாழ்வை உணரலாம். இனியும்தான் பிடிவாதத்தில் பிடிமானமா?

---

## மால் மருகன் அருளால் மகிழ்ந்திருப்பேன்!

*பல்லவி*

*எங்கு சென்று வாழ்ந்தாலும் எந்தன் மனக் கோயிலிலே*
*கந்தன் இருந்தே என்றும் எனைக் காப்பான்! (எங்கு)*

*அநுபல்லவி*

*மங்கலங்கள் பொங்கச் செல்வச்சந்நிதியில் வீற்றிருந்து*
*மயிலேறும் பெருமான் என் துயர் களைவான்! (எங்கு)*

*சரணம்*

*அவன் திருப்புகழினை அருணகிரிபோற் பாட*
*அன்புடனே வந்து எனை அணைப்பான்!*
*அன்பர்க்கு அன்பனான ஆதிசிவன் மைந்தன்*
*அருள் மழையிலே என்னை நனைய வைப்பான்!*
*(எங்கு)*
*நிலை இல்லா வாழ்வினிலே நிம்மதியை அடைய*
*நித்தமும் அவன் கழலைத் தொழுதிடுவேன்*
*மலை போலத் துயர் வரினும் மால்மருகன் - அருளால்*
*மண்ணுலக வாழ்வில் மகிழ்ந்திருப்பேன்!*

- தி. குலசேகரன் -

*மற்றவர்களுடைய தவறுகள் நமக்கு நல்ல பாடங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருவாசகம்
# நீத்தல் விண்ணப்பம்
## பிரபஞ்ச வைராக்கியம்
## (உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

143. தனித்துணை நீநிற்க யான்தருக் கித்தலை யானடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினையேனுடைய
மனத்துணை யேயென்றன் வாழ்முத லேயெனக் கெய்ப்பில் வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்றுய ராக்கையின் திண்வலையே.

**ப-ரை:**

வினையேனுடைய மன துணையே- பிராரத்த வினையுடையேனது உள்ளத்திற்குத் துணையாகவுள்ளவனே, என்தன் வாழ் முதலே- எனது அந்தமிலின்பத் தழிவில் வீடாகிய நல்வாழ்வுக்கு முதற் பொருளாகவுள்ளவனே, எனக்கு எய்ப்பில் வைப்பே- எனக்கு இளைப்புற்றவிடத்து ஒருவனுக்குப் புதைபொருள் அகப்பட்டாற் போலக் கிடைத்தவனே, திண்வலை ஆக்கையின் துயர்- விட்டு நீங்க முடியாத திண்ணிய வலைபோன்ற இவ்வுடம்பின் கண் அகப்பட்டு அது தரும் துன்பத்தினை, தினை துணையேனும் பொறேன்- தினையளவு நேரமும் பொறுக்கமாட்டேன்; அங்ஙனமாகவும், தனி துணை நீ நிற்க- ஒப்பற்ற துணையாக நீ நிற்க அதனை மறந்து, யான் தருக்கி தலையால் நடந்த வினை துணையேனை- யான் என்னும் செருக்குற்று அதனால் தலைகீழாக நடந்த வினையையே துணையாகக் கொண்டிருக் கின்ற என்னை, விடுதி கண்டாய்- கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

மனத்துணையே, என்றன் வாழ்முதலே, எனக்கு எய்ப்பில் வைப்பே, திண்வலை போன்ற ஆக்கையின் துயர் தினைத்துணையேனும் பொறேன், அங்ஙனமாகவும் தனித்துணையாக நீ நிற்க அதனை மறந்து யான் என்று செருக்கித் தலையால் நடந்த வினையையே துணையாகக் கொண்டிருக்கின்ற என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

யான் தருக்கி என்பதற்கு யான் எனத் தருக்கி என இடையே ஒரு சொல் வருவித்துரைக்க. தலையால் நடத்தல்- தலைகீழாக நடத்தல், என்றது முறை மாறி நடத்தல் என்றவாறு "புலையனேனையும் பொருளென நினைந்துன் அருள்புரிந்தனை புரிதலுங் களித்துத் தலையினானடந்தேன்" (செத் 3) என வருதலுங் காண்க. தனித் துணையாகிய நீ நிற்கவும் வினையையே துணையாகக் கோடலானேன் என்பார். "வினைத்துணையேனை" என்றார். வினையே சார்பாக நின்றமையின் இங்ஙனம் கூறினார். "இனவடியாருடன் கூட்டா தேகினாயோ வென்னையுமென் வினையையுமிங்கிருத்தி யெந்தாய்" (திருவிளை. வாதவூரர் 54) என்பது

*ஒரு மனிதனின் பத்து விரல்களே அவனது சிறந்த நண்பர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈண்டறியற்பாலது. நின்றடர்த்திடு மைம்புலனை அடக்கித் தன்னையே நினையும் வண்ணம் அடிகள் மனத்திற்குத் துணையாக நிற்றலின் இறைவனை "மனத்துணையே" என்றார்.

எனது வீட்டின்ப வாழ்க்கைக்கு முதற்பொருளாயுள்ளவன் இறைவனாதலின் "என்றன் வாழ்முதலே" என்றார். "போற்றி யென் வாழ் முதலாகிய பொருளே" (திருப்பள்ளி 1) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. எய்ப்பினில் வைப்பு- ஒருவன் பொருளின்றி இளைப்புற்றவிடத்து கிடைத்த புதைபொருள். இறைவனை எய்ப்பினில் வைப்பு என உருவகஞ் செய்தனராயினும் எனக்கு வைப்புப் போன்றவனே என்பது கருத்தாகக் கொள்க. "நல்லடியார் மனத் தெய்ப்பினில் வைப்பை" (67:2) எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியவாறுங் காண்க.

தினைத்துணை என்புழி தினை சிறிய கால அளவுக்கு உவமையாகக் கூறப்பட்டது. துணை- அளவு. "இனைத்துணைத் தென்ப தொன்றில்லை" (குறள் 87) என்புழிப்போல.

திண்வலை ஆக்கையின் துயர் என மாறிக் கூட்டுக. திண்வலையிலகப்பட்ட பிராணி அதனை விட்டு நீங்கமாட்டாமை போல இவ்வுடம்பின் கட்பட்ட உயிர் அதனின் நீங்கமாட்டாது அவ்வுடம்பினாலுளதாகும் துன்பங்களையெல்லாம் அநுபவிக்கும். இங்கே அடிகள் பிராரத்த வினைக்கீடாகத் தமக்குக் கிடைத்த உடம்பினை நீங்கமாட்டாது அதனாலுண்டாகும் துன்பங் களைப் பொறுக்கமாட்டாதவராய் ஆக்கையின் துயர் தினைத்துணையேனும் பொறேன் என்றார். அங்ஙனமாகவும் அத்துயரை நீக்கவல்ல தனித் துணையாக நீ நிற்கவும் யான் அதனை மறந்து யான் என்று செருக்கடைந்து தலைகீழாக நடக்கத் தொடங்கினேனாயினும் அதனைப் பொறுத்து என்னைக் கைவிடலாகாது என்பார் விடுதி கண்டாய் என்றார்.

இதன் கண், ஆக்கையின் துயர் தினைத்துணையேனும் பொறேன்; தருக்கித் தலையால் நடந்த எனை விடுதி கண்டாய் என்பவற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. 39.

**144. வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு**
**மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண் மதியினொற்றைக்**
**கலைத்தலை யாய்கரு ணாகர னேகயி லாய மென்னும்**
**மலைத்தலை வாமலை யாண்மண வாளவென் வாழ்முதலே.**

**ப-ரை:**

வெள் மதியின் ஒற்றை கலை தலையாய்- வெண்மையான திங்களின் ஒரு கலை பிறையைத் தலையின்கணுடையவனே, கருணாகரனே- அருட்கு இருப்பிடமாகவுள்ளவனே, கயிலாயம் என்னும் மலை தலைவா- திருக்கயிலாயம் என்று சொல்லப்படும் மலையில் எழுந்தருளியிருக்கும் தலைவனே, மலையாள் மணவாளா- மலை மடந்தையாகிய பார்வதி அம்மைக்கு மணவாளனே, என் வாழ் முதலே- எனது வாழ்விற்கு முதற் பொருளாயுள்ளவனே, வலை தலை மான் அன்ன நோக்கியர் நோக்கின் வலைப்பட்டு- வலையில் அகப்பட்ட மானின் மருண்ட பார்வை போன்ற பார்வையினையுடைய மகளிரின் நோக்கமாகிய வலையில் அகப்பட்டு, மிலைத்து அலைந்தேனை விடுதி கண்டாய்- மயங்கி அலைந்த என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

*பொறுப்புமிக்க ஒரு தந்தை நூறு ஆசானுக்குச் சமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியின் ஒற்றைக் கலைத் தலையாய், கருணாகரனே, கயிலாயமென்னும் மலைத் தலைவா, மலையாள் மணவாளா, என் வாழ்முதலே, மகளிர் நோக்கின் வலைப்பட்டு அலைந்த என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

வலைத்தலை என்பதில் தலை ஏழனுருபு. வலைத்தலை மான் என ஏழாம் வேற்றுமை பெயர் கொள்ளுமாயினும் வலைத்தலை அகப்பட்ட மான் எனவே பொருள் கொள்ளப்படும். மான் அச்ச மிகுதியால் இயல்பாக மருண்ட பார்வையுடைத்தாயினும் வலையிலகப்பட்ட விடத்து மருண்ட பார்வை மிக்குத் தோன்றும், அவ்விதம் மிக்க மருட்சியுடைமைபற்றி "வலைத் தலை மானன்ன நோக்கியர்" என்றார். நோக்கியர் நோக்கின் வலை- நோக்கினையுடைய மகளிரது நோக்கமாகிய வலை.

"காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலை கலந்து
வீசினபோ துள்ள மீனிழந்தார்" (74)

எனத் திருக்கோவையாரினும்,

"மாழையொண் கண்ணினார்கள் வலைதனின் மயங்குகின்றேன்"
நாவு 51:6.

"வாணார் நுதலார் வலைப்பட்டடியேன்" சுந் 3:9.

"மானை நோக்கியர் கண் வலையிற்பட்டு" 54:6.

எனத் தேவாரத்தும் வருவன காண்க. மிலைத்து அலைந்தேனை- மயங்கி அலைந்தேனை.

"மறிதே ரொண்கண் மடநல்லார் வலையிற்பட்டு மதிமயங்கி
அறிவே யழிந்தேனையா"
சுந் 52:4.

"வேலங்காடு தடங்கண்ணார் வலையுட்பட்டுன் னெறிமறந்து
மாலங்காடி மறந்தொழிந்தேன் மணியே முத்தே மரகதமே"
சுந் 62:5.

"மானை நோக்கியர்கண் வலையிற் பட்டு வருந்தி"
சுந் 54:6.

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியமையுங் காண்க. இனி மிலைத்தல்- சூடுதல். ஈண்டு அவர் வழியை மேற்கொள்ளல் என உரைப்பினுமமையும். அலைதல்- உலகியல் வாழ்வில் திரிதல்.

வெண்மதி என்பது இனஞ்சுட்டில்லாப் பண்புகொள் பெயர். "செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும் வெண்டிங்களுள் வெயில் வேண்டினும்" (புறம் 38:7) எனப் பிறாண்டும் வருதல் காண்க. சென்னியில் ஒரு கலைப் பிறையைச் சூடினமையின் மதியின் ஒற்றைக்கலைத் தலையாய் என்றார்.

"ஒற்றை வெண்பிறை தோன்றும்... புனிதனார்க்கே"
நாவு 231:2.

"ஒற்றை வெண்பிறையானை யுமையோடொன்றும் பேரானை"
நாவு 232:5.

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

*நேரத்தைப் பயன்படுத்துங்கள். அது உங்களைப் பெருமைப்படுத்தும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மதியின் ஒற்றைக் கலைத்தலையாய்" என விளித்தது, ஒற்றைக் கலையோடு நின்னை வந்து அடைந்த திங்களைத் தலைக் கண் வைத்து அணிந்து காத்தருளியது போலத் தன்னையும் காத்தருள வேண்டும் என்னும் உள்ளுறையுவமையால் இது கருத்துடையடை கொளியணியாகும். இவ்வாறே மற்றைய விளிகளும் கருத்துடையடைகொளியாய் அமைவதை உணர்த்துணர்க.

இதன் கண், "வலைத்தலைமானன்ன நோக்கியர் வலையிற் பட்டு மிலைத்தலைவேனை விடுதி கண்டாய்" என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் போதருதல் காண்க. (தொடரும்...

## இதுவும் கடந்து போகும்!

கொரோனா கால பயணத்தடைகள், கட்டுப்பாடுகளை ஒரு பக்கம் நாம் சந்தித்திருக்கும் அதேவேளை, ஓடி ஓடி உழைத்து ஒரு நிமிடம் கூட சும்மா இருக்காமல் ஏதேனும் வேலைசெய்து கொண்டிருந்த பலருக்கு இந்தக் கட்டுப்பாடுகள் பாரியதொரு சவால் மிக்கவையே! வெளியுலகத்தை பார்க்கமுடியாமல் வீட்டுக்குள்ளேயே ஒரு நாளை கடப்பதென்பது பெரிய கஷ்டம். இப்படியே சில நாட்கள் சென்றால், அது பெரும் தலைவலியை உண்டாக்கிவிடக்கூடும். ஒரு சிலருக்கு, இது ஓய்வுக்கான தருணம் என்பதால், மகிழ்ச்சிதான். ஆனால், பலருக்கு இது மன அழுத்தத்தை அதிகப்படுத்தும் காலகட்டமாக இருக்கிறது. எந்த வேலையையும் செய்யாமல் வெறுமனே அமர்ந்திருக்கும்போது மனமானது பலவற்றைச் சிந்திக்கத் தொடங்கிவிடுகிறது. வீட்டுப் பிரச்சினைகள், தொழில் சார்ந்த சவால்கள், தனிப்பட்ட பிரச்சினைகள் என மண்டைக்குள் எந்நேரமும் ஏதோ ஒன்றைச் சுமப்பதைப் போன்ற உணர்வு தோன்றுகிறது. எவ்வளவு நேரம்தான் தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டும் தொலைபேசியைக் கிளறிக்கொண்டும் இருப்பது? இதுவே பலரின் சலிப்பு கலந்த கேள்வியாக இருக்கிறது. இதற்கு யாரிடமும் பதில் இல்லை. ஏனென்றால், அனைவரது நிலையும் இவ்வாறுதான் காணப்படுகிறது.

சுறுசுறுப்பாய் இயங்கிக்கொண்டிருந்த ஒருவரை கை, கால் எல்லாவற்றையும் கட்டிப்போட்டு வீட்டுக்குள் முடக்கிவிட்டால், அவர் அந்த கட்டுக்களையெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு வெளியே வர முயற்சி செய்வார் இல்லையா? அப்போதுதான் ஆரம்பமாகும், இந்த மன அழுத்தம். தினம் ஒரு புதுவிடயத்தைப் பார்த்தாலும் கேட்டாலும் தான் நமது மனம் புத்துணர்ச்சி அடையும். அதைவிடுத்து செய்வதையே செய்துகொண்டும் பார்த்ததையே பார்த்துக்கொண்டும் இருக்கும்பொழுது பெரிய விரக்தி நிலை ஏற்பட்டுவிடுகிறது. வெளியே சென்றால், உயிருக்கு ஆபத்து; வீட்டுக்குள்ளேயே இருந்தால் மனதுக்கு பாதிப்பு. ஒன்றும் செய்யமுடியாத ஒரு சூழ்நிலையில் அனைவரும் சிக்கித் தவிக்கின்றோம். இதனைக் கடந்துவர வேண்டிய கடமையும் பொறுப்பும் எம் ஒவ்வொருவரிடமும் உள்ளது. வீட்டுக்குள்ளேயே இருப்பதனால் என்ன செய்வதென்றே தெரியவில்லை, நேரத்தை எப்படிக் கடத்துவதென்றே தெரியவில்லை என்று புலம்பிக்கொண்டிருக்காமல், சற்று வேறு கோணத்தில் யோசித்துப் பார்ப்போமே! இது எமக்குக் கிடைத்திருக்கும் ஒரு வாய்ப்பாகக் கருதுவோம். நல்ல புத்தகங்களை வாசிப்போம்; வீட்டில் உள்ளவர்களுடன் சேர்ந்து சமையல் செய்வோம்; இனிமையான இசையைக் கேட்போம்; பூக்கள் காய்கறிகள் வளர்ப்பதில் ஈடுபாடு காட்டுவோம்; சிறு சிறு கைவேலைகள் செய்யப் பழகுவோம்; செல்லப் பிராணிகளுடன் நேரத்தைக் கழிப்போம்; சொந்தமாக கவிதைகள் எழுதுவோம்; வீட்டிலிருக்கும் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவோம்.. ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றை செய்தால்கூட போதுமானதுதான். வீட்டுக்குள்ளேயே இருந்தாலும் புதுப்புது விடயங்களை செய்வதில் அதிக ஈடுபாடு காட்டுவோம்.

இவற்றை புதிய விடயங்கள் என்று சொல்வதைவிட காலத்தின் ஓட்டத்தில் நாம் மறந்த விடயங்கள் என்று கூறுவது தான் சரி. "என்னடா இது" என்று எந்நேரமும் எரிச்சலுடன் இருக்காமல், "இதுவும் கடந்து போகும்" என்றும் நம்மை நாமே புதுப்பித்துக்கொள்ள கிடைத்த ஒரு வாய்ப்பாகவும் கருதிக்கொள்வோம். அறைக்குள்ளேயே முழு நாளும் அடங்கிக் கிடந்து மன அழுத்தத்துக்குள் சிக்கிக்கொள்ளாமல், நம் கண்ணோட்டத்தை வேறு விதமாக மாற்ற முயற்சிக்க வேண்டும். கிடைத்திருக்கும் இந்த ஓய்வு நேரத்தை பயனுள்ள முறையில் செலவிடுவோம். ஏனென்றால், மறுபடியும் ஓடவேண்டிய கால மாற்றம் வரும்போது, நல்ல ஓய்வு நேரம் கிடைத்ததே.. அதில் இதைச் செய்திருக்கலாமே என கவலைப்பட்டு பிரயோசனமில்லை.

*அறிவும் ஒழுக்கமும் வாழ்க்கையின் இரு சக்கரங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜபா

*– திரு கு. சிவபாலராஜா* அவர்கள் –

"நடுவு நில்லாது இவ் வுலகம் சரிந்து
கெடுகின்றது எம் பெருமான்" என்ன ஈசன்
"நடுவுள அங்கி அகத்திய நீ போய்
முடுகிய வையத்து முன்னி(ரு)" என்றானே.

-திருமந்திரம் 337.

மந்திரங்களுக்கெல்லாம் மூலமாக விளங்குவது "ஓம்" என்னும் பிரணவ மந்திரமே. இம் மந்திரத்தையும், பஞ்சாட்சர மந்திரத்தையும் யந்திரக் கோட்பாட்டுக்குள் அமைத்து சந்தனம், குங்குமம், ஜவ்வாது முதலிய வாசனைப் பொருட்களும், மலர்களும் சூட்டி முறை யாக வழிபட்டால் கருதிய பலன் கைகூடும் என்பது அருள்வாக்கு. மந்திரங்களை உச்சாடனம் செய்தல், ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை வாயசைக்காது மனதில் எண்ணுதல் முதலிய செயல்கள், திருமந்திரம் என்னும் கருத்தின் இயல்புகளாய் அமைந்து நிற்பதையும் உணர்தல் வேண்டும். உயிர்கள் யாவும் "ஓம்" என்னும் பிரணவ மந்திரத்தை உச்சரிக்கின்றன. நாசி வழிச் சுவாசம் மட்டும் நடைபெறுவதில்லை. உடலில் உள்ள ஒன்பது வாசல் வழியாகவும் அண்டத்தின் தொடர்புகள் இப் பிண்டத்திலும் இடம்பெறுகின்றன. எனவே, சுவாசம் உடல் வாசல் வழி அனைத்தினாலும் நடைபெறுகின்றது. நாசி வழிச் சுவாசம் மட்டும் ஒரு நாளைக்கு 21600 முறை நடைபெறுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. யோகத்தின் அடிநிலை "பிராணாயாமம்" ஆகும். அதன் முடிவு நிலையாகிய அஜபா மந்திரக் கருத்துக்களை நாம் கவனத்தில் எடுத்தல் வேண்டும். எனவே, நாம் உடலால் செய்து வரும் ஓர் யோகமே "அசைபை" எனப்படும் மந்திரக் கருத்தாகும். உலகில் வாழும் உயிர்கள் யாவும் இந்த யோகத்தைச் செய்து வருகின்றன.

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெல்லாம்
நான் நிலாவி இருப்பன் என் நாதனை.

-அப்பர் திருமுறை.

இவ்வசபா மந்திரத்தை இயல்பாகச் சுவாசித்த நிலையையே அப்பர் சுவாமிகள் இதில் குறிப்பிட்டுள்ளார். சம்பந்தப் பெருமான் அருளிய தேவாரத்தின் இறுதி அடிகள் பின்வருமாறு விளங்குகின்றது.

"நின் தயங்கி ஆடலே நினைப்பதே நியமமே"

இங்கு ஆடல் என்று குறிக்கப்பட்டது அசபா நடனத்தைக் குறிக்கும். நமது நாயன்மார்களும், சந்தானசாரியார்களும் பிராணாயாமம் செய்தவழி அசபா யோகத்தை இலகுவாகச் செய்து அதன் பலன் கைகூடியவர்கள் என்பதை உணர்தல் வேண்டும்.

அஜபா மந்திரம், அஜபா வடிவம், அஜபா யோகம், அஜபா நடனம் ஆகிய நான்கு வடிவங்களில் "அசைபை" என்பது வெளிப்படும். "அசைபை" என்பது தமிழ் பதமாகும். அஜபா என்பது அதன் வடசொல்லாகும். ஜெபம் பண்ணுதல் என்பது வாயினால் சற்று ஓசை யுடன் இறைவனைத் துதித்தலாகும். அசைபை என்பது அப்படியல்லாது, உதடு அசையாமல் மனத்தில் "ஓம்" என்னும் மந்திரத்தை எண்ணுதலாகும். அஜபம் என்றால் ஜெபித்தல் இல்லாதது.

*தன்னம்பிக்கையை இழந்தவன் எல்லாமே இழந்து விடுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாக எழும் மூச்சுக் காற்றில் இயங்கும் மந்திரம் என்பது பொருளாகும். உடம்பில் உயிர் வாழ்வதற்கு அசைபை தேவைப்படு கின்றது. பிராணவாயு நாடி வழி உட்சென்று, பின் வெளியில் வந்தும் இயங்குதல் வேண்டும். இதன்போது "அம்" என மூச்சை உள்ளே இழுத்து "சம்" என மூச்சை வெளிவிடும் இயல்புச் செயலாகும். இதனால் அசைபை மந்திரம் "ஹம்ச மந்திரம்" எனவும் கூறப்படு கின்றது. "அம்" என்னும் தமிழ்ச் சொல் "ஹம்" என்னும் வடமொழிச் சொல்லைக் குறிக்கும் இவை இயல்பாக எல்லோரிடத்திலும் நிகழ்வது. இதனால் நாம் தினமும் யோகம் செய்து வாழ் கிறோம் என்பதையும் உணர்தல் வேண்டும். மூச்சுக் கணக்கு தினமும் 21600 முறை நடைபெறுவதை நாம் உணர்தல் வேண்டும். ஒரு மூச்சு என்பது உள்வரும் வாயுவை வெளி விடுதலோடு முற்றுப்பெறும். எனவே தினமும் 21600 ஹம்ச மந்திரம் இயல்பாகவே எம்மால் மேற்கொள்ளப்படுகின்றது. நாம் சுவாசிக்கும் மூச்சுக் காற்று கணக்கிடப்படவேண்டிய ஒன்று தான்.

ஹம்ச மந்திரச் செயல் முறை பற்றித் தெரிந்துகொள்வோம். இதில் "சம்" என்பதை முன்வைத்து, அதாவது "சஹா" என வைத்து "ஹம்" என்பதைப் பின்னர் "அஹம்" என வேறு படுத்தி வைத்து உச்சரிக்கவும், அப்போது "சோகம்" என வரும். எனவே "சோகம்" என் பதன் பொருள் "அவன் நான் ஆகிறேன்" என்பதாகும். சோகம் என்பது தியான இட மாகிய புருவ மத்தியில் (ஆக்ஞை) நிகழ்வது. இவ்வாறு ஒருவருக்கு ஏற்படும் அனுபவத்தால், அவர் பசுத்துவம் (உயிர்நிலை) நீங்கிப் பதி நிலையை (இறைநிலையை) அடைகிறார். சோகம் சிவோகம் ஆகவும் பாவனை செய்யப் படும். இறைநிலை அடைந்தவனே இவ்வாறு பாவனை செய்வான். இதுவே ஹம்ச மந்திரச் செயல்பாட்டு முறையாகும். அதனால், அவன் சிவமாகி சிவானந்தத்தை அனுபவிப்பான். "தத்துவமசி" முதலிய மகா வாக்கியங்களும் ஆன்மாவுக்கு இதே பலனைத்தான் கொடுக் கின்றன. எனவே ஹம்ச மந்திரச் செயல்பாட் டின் பலனும் ஆன்மாவுக்கு அவ்வாறே கிடைப் பதை உணர்தல் வேண்டும். சைவமுறையில் அமைந்த இதன் பொருளானது "நான் அவன் ஆகிறேன்" என்பதும் கூறப்பட்டுள்ளது. அத னால் இச்சிவோக பாவனையும் ஹம்சமாகிய அசைபையாகவே சொல்லப்படும். பிரணவ மந்திரமாகிய "ஓம்" என்பது போல, ஹம்ச மந்திரம், சோகம், திருவைந்தெழுத்து ஆகிய மந்திரங்களும் முக்கிய இடத்தில் உள்ளன. இம் மந்திரங்கள் எதனையும் இணைத்துப் பயிற்சி செய்யும்போது மூன்றுமுறை சொல்லு தல் வேண்டும். எனவே "அசைபை" என்பது சிவசிந்தனை செய்யும் மந்திரம் என்பதை அறிதல் வேண்டும்.

"ஓம்" என்னும் மந்திரத்தில் இரண்டு எழுத்துக்கள் உள்ளன. எனினும் அதன் மெய் எழுத்தாகிய மகர மெய் கணக்கில் எடுக்கப் படுவதில்லை. இரண்டெழுத்தாயினும் அதை ஓரெழுத்து மந்திரம் என்றே பொருள் கொள் ளல் வேண்டும். திருமூல நாயனாரும் பின் வரும் திருமந்திரத்தில் அதனைத் தெளிவு படுத்தியுள்ளார். ஓரெழுத்தே "ஓம்" என்னும் ஓங்காரம் ஆகின்றது. அதனால் பிரணவத்தைப் போற்றுகின்றேன்.

**போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகல் ஞானத்தைத்**
**தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி**
**சாற்றுகின் றேன்அறை யோசிவ யோகத்தை**
**போற்றுகின் றேன்எம் பிரானென்று நானே!**

-திருமந்திரம் 2988.

"ஓம்" என ஓரெழுத்தாகச் சொல்லப் படுவது சமட்டிப் பிரணவமாம். இதன் பொருள் அருவமாய் நிறைந்துள்ள "இலயசிவம்" ஆகும்.

*சேமிப்பு இல்லாத குடும்பம் கூரை இல்லாத வீட்டிற்குச் சமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசபா வடிவம் பற்றிக் குறிப்பிடும் போது மணிவாசகரின் பாடல் வரிகள் அதற் குச் சான்று பகர்கின்றது.

"இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாழ் வாழ்க"

இறைவன் எப்பொழுதும் எம் உள்ளத் தில் உறைந்துள்ளான். அதனை நாம் உணர் வதில்லை. அவனை உணரும் தியானமே அசபா வடிவத் தியானமாகும். உள்ளத்திலுள்ள அசபை வடிவமாகிய சிவனை நாம் உணர வில்லையாயின், உயிரானது பிறவிப் பயனை அடையாமலே மாய்ந்து போகின்றது. அசபா வடிவம்பற்றி நோக்கும்போது, நமது இதய மாகிய தாமரை மலர் எப்போதும் அப்பழுக் கில்லாத சுத்தமுடையதாக இருத்தல் வேண் டும். சுத்தமான இதயத்திலேயே இறைவன் உறைவான். சுத்தமில்லாத இதயத்திலும் இறைவன் உறைவான். ஆனால் அதை நாம் உணரமுடியாது. எனவே, மனத்தாமரையில் இறைவன் விளங்கித் தோன்ற வேண்டும். அதற்கு அன்பு இருக்கவேண்டும். காமம், குரோதம், உலோபம், மதம், மாற்சரியம் என் னும் அறுவகைக் குற்றங்களும் அற்றவனாக மனிதன் திகழல் வேண்டும். அத்துடன் ஐம்புல ஆசைகளையும் அடக்கியவனாகவும் இருத் தல் வேண்டும். அத்தகைய ஞானமயமான உள்ளத்தில்தான் சிவபெருமான் வீற்றிருந்து அருள்புரிவான். அத்தகையதோர் ஒளி போன்ற மெய்ஞ்ஞானம் பெறுவர். அவ்வாறு மெய்ஞ் ஞானம் பெற்றோரின் உள்ளத்தில் சூரியன், சந்திரன், அக்கினி, நட்சத்திரம் நான்கும் கலந்த ஒளி வடிவம் விளங்கித் தோன்றும். இவ்வடிவமே அசபா வடிவமாகும். இவ்வடிவம் தியாகேசப் பெருமானின் திருவுருவமாகும். தியாகேசரைத் திருமால் தன் இதயத் தாமரை யில் எழுந்தருளச் செய்து பூசித்தார். இனி அசபா யோகம் எனப்படுவதை நோக்குவோம்.

நாம் இயல்பாகவே வாயுவைச் சுவாசித்து வருகின்றோம். "சுவாசம்" "அசபாயோகம்" எனப்படுகின்றது. இதைப்பற்றி அப்பர் பெரு மான், சம்பந்தப் பெருமான் அவர்கள் அருளிய திருமுறைப் பாடல் வரிகள் மேலே தரப்பட்டுள் ளன. அண்டம், பிண்டம் இவை இரண்டனுக் கும் தொடர்பினை உண்டாக்கவே உடலில் ஒன்பது வாசல் தொடர்பினை இறைவன் வைத்து உடலை அமைத்துள்ளான். இவ் வாசல் வழியே பிண்டத்தின் புறத் தொடர்பு கள் நிறைவேறுகின்றன. வாயுவானது அண் டத்தில் காணப்படும் நிறைவான, பொதுவான ஓர் பூதமாகும். இவ் வாயு மெல்லெனச் சென்று இவ்வாயில் வழியே பிண்டத்தின் உட்பகுதிகளை அடையும். உடலில் உள்ள 72000 நாடிகளிலும் பிராணன் ஏற்றம் இருக்கும். இதனால், பிண்டத்துச் சீவன் உயிர் வாழும். எனவே, சுவாச உயிர்ப்பு நிலை பிண்டத்தில் பல வழிகளில் நடைபெறும்.

பிராணாயாமம் என்னும்போது, பிரா ணன் என்னும் வாயுவை நடுநாடியாகிய சுழு முனை நாடியில் ஏற்றுதல் எனப் பொருள்படும். பிராணவாயுவை மூச்சுக் காற்று என்னும் நிலையில் இடதுபக்க நாசி (இடைகலை) வழியே ஒரு பங்கு (16 மாத்திரையளவு) உள் எடுத்து, நான்கு பங்கு கும்பகம் செய்து (64 மாத்திரை) உள்ளடக்கி பின் இரண்டு பங்கு (32 மாத்திரை) அளவு வாயுவை இரே சித்து வெளிவிடுதல் வரையுள்ள முழுச்செய லும் ஒரு பிராணாயாமம் ஆகும். சுழுமுனை நாடி வழியே பிராணனை உச்சந்தலைவரை செலுத்துவது பிராணாயாமத்தின் முடிவுநிலை ஆகும். இப்பயிற்சி ஒழுங்காக நடைபெறில் அசபா யோகம் மிக எளிதாகக் கைகூடும். இதனால், அகத்தில் ஒளிவடிவில் சிவனைக் காணலாம். "அசபா நடனம்" என்பதை நோக் கும்போது, ஒளி வண்ணமாகிய "அசபா"

*சேமிக்கக் கற்றுக்கொள். சிக்கனம் தானாக அமையும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமே திருமாலின் இதயத் தாமரையில் எழுந்தருளி இருப்பது. இவ்வடிவமே திரு மாலின யோக நிலையில் இடது பக்க நாசி வழியாக வாயுவை உள் இழுக்கும்போது, இடது பக்கத் தோள்பட்டை சற்று உயர்ந் தும், கும்பகத்தால் சமநிலையில் நின்றும், பின்னர் வலது நாசியால் (இரேசகம்) வாயுவை வெளிவிடும்போது, வலது பக்கம் சாய்ந்து ஆடும் நிலையேற்படும். இவ்வரிய கருத்தையே உலகினர் தமது குழந்தை விளையாட்டில் "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு" என்பதை நினைவூட்டியுள்ளனர். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடிய பாப்பாப் பாட லான "ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா" என்னும் பாடலும் அசபா நடனத்தை நினைவூட்டுகிறது. திருக்கோயில் களில் நடைபெறும் திருவிழாக்களில் சுவாமி வீதி வலம் வரும் நேரத்தில், சுவாமியை அங்கு மிங்கும் பக்கவாட்டில் அசைத்து அசைத்தாட்டு தல் அஜபா நடனத்தை நினைவூட்டும் செயல் ஆகும். திருமால் பள்ளிகொள்ளும் ஆதிசேடன் என்னும் பாம்பு தனது நெடு மூச்சால் அசைந் தாடும். அதனால் அலை கடலும் அசைந்தாடும். அலைகடல் ஆட்டத்தால் தியாகேசப் பெருமா னும் ஆடுகிறார். பங்குனி உத்தரப் பெருவிழா வில் தேருக்கு எழுந்தருளும் போதும், பக்தர் களுக்குக் காட்சி கொடுக்கும் விழாவிலும் பக்தர்களின் தோள்மீது வலம் இடமாக அசைந் தாடியும், மேலும் கீழுமாகக் குதித்தாடியும், ஓடியாடியும் தியாகேசப் பெருமான் அசபா நடன மாடிக் காட்சி தருகின்றார். இதனால், திரு வாரூர்த் தியாகேசப் பெருமானுக்கு "அசபா நடேசர்" என்னும் திருப்பெயரும் வழங்கப்படுகிறது.

அகத்தியர் ஞானத்தில் அகத்தியர் பாடிய "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்னும் பாடல் அசபா மந்திர யோகத்தைத் தெளிவுறப் புலப்படுத்து கிறது.

**மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்**
**மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டாம்**
**மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்**
**மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே.**

-அகத்தியர் ஞானம்.

மனத்தில் ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை எண்ணினால் வேறு எந்த மந்திரங்களும் செபிக்க வேண்டியதில்லை. மனத்தில் "ஓம்" என்னும் மந்திரத்தை அசை யையாக எண்ணினால் வாசி யோகமும் தேவை அற்றது. வாயுவை மேலெழுப்பவும் வேண்டாம் வாயுவைக் கும்பிக்கவும் வேண்டாம். மனம் செம்மையுற ஓம் என்னும் நினைவுடன் இருப் பின் அந்த மந்திரமே எல்லாவற்றையும் காக் கும் அருள் சக்திமிக்கது என்பதே இதன் கருத்தாம். இப்பாடலில் அசபா மந்திர யோகத்தின் பலன் கூறப்பட்டுள்ளது.

அப்பர் சுவாமிகள் அருளிய பின்வரும் திருமுறை வரிகளை நோக்கலாம். "தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்"

சேக்கிழார் அடிகள் பின்வருமாறு பாடல் பாடியுள்ளமையும் இங்கு நோக்கத் தக்கது.

**நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும்**
**மென்றாலும், துயின்றாலும், விழித்தாலும், இமைத்தாலும்**
**மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை**
**குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணம் மிக்கார்.**

-திருமுறை 12 பாடல் 7.

*கட்டுப்பாடற்றவன் கௌரவம் இழப்பான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்திய முனிவர் பற்றித் திருமூலர் குறிப்பிடும்போது, அகத்தியர் தன் உள்ளத்தில் சூரியன், சந்திரன், அக்கினி, நட்சத்திரம் என்னும் நான்கும் கலந்த ஒளி வடிவான அஜபா வடிவத்தை வைத்துத் தியானிப்பவர் என்றுள்ளார். அதனால், அகத்தில் "தீ" வடிவான சிவத்தைத் தியானிப்பவர் ஆதலால் "அகத்தீயர்" எனப் பெயர் பெற்றுள்ளார். அதாவது, அகத்தில் தீயை உடையவர் எனப் பெயர் உள்ளவர் அவர். அப்பெயர் மருவி "அகத்தியர்" என ஆயிற்று என்பர். இதை உயர்த்தும் திருமந்திரம் "அகத்தியம்" பகுதியில் உள்ள "நடுவு நில்லாது இவ்வுலகம் சரிந்து" என்னும் முதலாவது மந்திரமாகும்.

இத் திருமந்திரத்தில் சீவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும். ஆனால், இங்கு அப்படி அமையவில்லை. இவ்வுலகத்தார் பிராணசக்தியை சுழுமுனை மார்க்கத்தில் பொருந்தி நில்லாமல் உலகமுகமாகக் கீழ் நிலைப்பட்டு பிராண சக்தியை இழக்கின்றனர். இச் செய்தியைத் திருமூல நாயனார் சிவபெருமானிடம் விண்ணப்பம் செய்ததாகக் கூறியுள்ளார். அதற்குச் சிவபெருமான் ஆணை பிறப்பித்துள்ளார். "மூலாதாரத்தின் நடுவில் உள்ள சொரூபமான நாதமே நீ போய் விரைந்து ஓடுகின்ற சீவனின் தலையின் முன் பக்கமாய்ப் பொருந்தி, உலகத்தைச் சமநிலைப்படுத்திக் காப்பாயாக" என்பதை அகத்தியரைப் பொதியமலையில் போய்த் தங்கும்படி பணித்துள்ள புராணக் கதையையும் உணர்த்தியுள்ளது. இலயசிவம், இலயம் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியது என்பது "அ, உ" என்னும் இரண்டு எழுத்தில் "அ" என்பது சிவத்தையும் "உ" என்பது சக்தியையும் குறிக்கும். இவ்விரண்டு எழுத்தும் போக சிவமாய் உலகத்தைத் தொழிற்படுத்தும் அ, உ, ம் என்னும் மூன்று எழுத்துக்களும் சேர்ந்து "ஓம்" என்னும் பிரணவ மந்திரத்தை உருவாக்கும். இந்நிலை "அதிகார சிவம்" என்பர். இம் மூன்று எழுத்துக்களும் அயன், அரி, அரன் என்னும் மூவராய் முத்தொழில் புரியும் நிலையைக் குறிக்கும். "ம்" என்னும் மலையெழுத்தால் உலகம் மயங்கி நிற்பதால் உலக மயக்கமே இங்கு உலகம் சமநிலை கெட்டதற்குக் காரணம் எனவும் கருத்துண்டு. இச் சிந்தனையும் அஜபா யோகம் ஆகும். அதன் காரணத்தை மேலும் ஆராயின், இடது நாசி வழி உள்வரும் பிராணன் 16 மாத்திரை ஒரு பங்கு ஆகவும், கும்பித்தல் 64 மாத்திரையாகவும் (அளவு) அது நான்கு பங்காகவும், பின்னர் இரேசகம் செய்யும்போது 32 மாத்திரையளவு இரண்டு பங்காகவும் காணப்படுதல், அஜபா சமநிலை யோகத்தைக் குழப்புவதால், உலகம் சரிகின்றது. அதாவது 1:4:2 என்னும் விகித அளவில் பிராணன் காணப்படுதலன்றி, அப் பிராணன் சுழுமுனையில் பொருந்தி மேலேறிச் சிரசை அடைய (சகஸ்ரதளம்) முடியாது அல்லற்படும் நிலையையும், அப்பிராணன் சுழுமுனையில் பொருந்தினால் சமநிலை பேணப்படும் எனவும் இங்கு கருத்தமைந்துள்ளது.

"ஓம்" என்னும் பிரணவமும் "சிவயநம" என்னும் அஞ்செழுத்தும் அசைபை முறையில் ஓதுதல் (எண்ணுதல்) பயனுள்ளதொரு முறையாகும். இதுபோல் சிவபெருமான் எழுந்தருளியுள்ள சிற்றம்பலமும், சிதம்பரமும், திருஅம்பலமும், தென்பொதுவும் ஆகிய இவைகளைச் சிந்திப்பதுவும் அசைபையாகக் கொள்ளப்படும் என்று திருமூலர் கூறியுள்ளார். இதில் தென்பொது என்பது புருவத்திற்குமேல் வலப்பக்கமாகும். சிற்றம்பலம் என்பது, சிதாகாய ஒளியையுடைய மண்டலம், சிதம்பரம் என்பது அறிவு விளங்கும் வான். அதுவே "திருவம்பலம்" எனப்படும். ஓங்காரத்தின் (ஓம்)

*அறிவு தலைக்குக் கிரீடம். அடக்கம் காலுக்குச் செருப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுதான் ஐந்தெழுத்து ஆகும். கூத்தப்பிரான் ஐந்தெழுத்து வடிவானவன். அவன் கூத்தாடும் அறிவாகாயம் ஆகிய இடமும், அதனுள் ஆடுகின்ற ஆனந்தக் கூத்தும் எல்லாம் அசபா தியானத்தில் அடங்கும் என நாயனார் அருளி உள்ளார். அடுத்து சிவபெருமான் ஆடும் ஊன நடனம், ஞான நடனம் ஆகிய இரண்டையும் விளக்குகின்றார் நாயனார். ஊன நடனம் என்பது உயிர்களைப் பிறவியில் விட்டு (அனுப்பி) பக்குவப்படுத்தல் ஆகும். ஞான நடனம் என்பது உயிர்கள் பிறவியிலிருந்து விடுபடுவதற்காக நிகழ்த்தும் நடனமாகும். இவ்விரண்டு திருநடனப் பயன்களும் அஜபா தியானத்தால் அடையத்தக்கன என்பதும் அசைபையில் கூறப்பட்டுள்ளது. அதாவது, பிறவியில் நாம் பக்குவமடைதலும், பின்னர் நம் பிறப்பினை அறுத்தலும் ஆகிய இரண்டு நற்பயன்கள் அசபா யோகத்தால் நமக்குக் கிட்டும் என்பது விளக்கமாம்.

மேலும், அசபா யோகம் பற்றி நோக்கில், சக்தி பீஜமாகிய சிரீம், கிரீம் என்னும் வித்தெழுத்துக்களையும், அஜபையாகவே திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளது. அம் மந்திரம் வருமாறு.

**செம்பு பொன் னாகும் சிவாயநம என்னில்**
**செம்பு பொன் னாகத் திரண்டது சிற்பரம்**
**செம்பு பொன் னாகும் சிரீயும் கிரீயும் எனச்**
**செம்பு பொன் னான திருவம்பலமே.**

-திருமந்திரம் 903.

"சிவாயநம" என எண்ணினால் மலக் குற்றம் நீங்கி உடம்பு பொன்னாக மாறும். இங்கே, செம்பு என்பது உயிரையும், "பொன்" என்பது சிவத்தையும் குறிக்கும் சிரீம், கிரீம் என்னும் சக்தி பீஜத்தை நினைத்தாலும் இரச குளிசையால் செம்பாலாகிய பொருள் பொன்னாக மாறுவதுபோல, செம்பாகிய உயிர் பொன்னாக மாறுவது போல, செம்பாகிய உயிர் பொன்னாகிய சிவமாக மாறிவிடும். எனவே, உயிர் சிவமாகி உயிருக்குள் சிவம் விளங்கும் என்பதாம். எனவே, சத்தி பீஜங் களையும் அசைபையாக நினைப்பதால் மேற் கூறியுள்ள பலன் கிடைக்கும்.

"ஓ" என்பது ஓரெழுத்து மந்திரமாகும். "ஓ" என்பது எழுத்தோசையைக் குறிக்கும். ஓம் என்பது மகரமெய் பெற்று, அது இசை யோசையாக மாறி அமையும். அப்போது உலகினர் அதை நேரே உணரும் ஆற்றல் பெறுவர். இசையோசை கருவியாகப் பயன் படும்போது அதை விளங்கிக் கொள்ளலும், அதன் வழிச் செயற்படுதலும் இலகுவாகின்றது. "ஓ" என்று அரற்றினான் என்று சில இடங்களில் அது இசையோசையாகவும் விளங்கும். ஓ என்பது ஓங்காரத்தைக் குறித்தல் மந்திர நூல் மரபு. ஓ என்பதை "ஏகாட்சரம்" என்பர். எழுத்தோசையை ஒலி எனவும், இசை ஓசையை ஓசை எனவும் குறிப்பிடுவர். ஓசையால் சொல்லப்படும் பொருளின் கருத்து விளங்கும். ஓ எனப்படும்போது அதன் கருத்து விளக்கமுறாமை தெளிவாகும். அதே இடத்தில் ஓம் என்னும்போது அது ஒரு மந்திரம் என்னும் கருத்து விளங்கும். அதன்படி சொல் உலகம் முழுமைக்கும் ஓங்கார மந்திரமே முதல் ஆயிற்று. இதன்படி, எல்லாவற்றிற்கும் சிவபெருமான் முதல்வராக உள்ளார். ஓ என்னும்பொழுது சொல் விளங்காமையால் அதை ஊமை எழுத்து என்பர். பிரணவம் என்னும் போது, புதிது புதிதான எண்ணங்கள் மனத்தில் தோன்றும். அதாவது பிராணன்+நவம்= பிரணவம் என்னும் கருத்தில் அமைந்துள்ளது. நவம் என்பது "புதுமை" எனப்படும். எனவே மேற்கூறிய ஓம் என்னும் ஓசை ஒலியில் எமது மனத்தில் புதிது புதிதான எண்ணங்கள் அலை அலையாகத் தோன்றும்.

ஆத்திரம் அறிவுக்கு எதிரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளையாடற் புராண வசனம்

(நாற்பத்தைந்தாவது)

## பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம்

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

வைகையாற்றுக்குத் தெற்கே குருவிருந்ததுறை எனப் பெயர்கொண்ட ஓரூர் இருக்கின்றது. அவ்வூரிலே, தேவகுருவாகிய பிருகற்பதி இருந்து தவஞ் செய்தார். சிவபெருமான் அவருக்கு வரங் கொடுத்துக், குருநாதர் என்னும் பெயரோடு அங்கே எழுந்தருளியிருக்கின்றார்.

அவ்வூரிலே சுகலன் என்னும் பெயரை உடைய ஒரு வேளாளன் இருந்தான். அவன் மனைவி பெயர் சுகலை. அவள் பன்னிரண்டு புதல்வர்களைப் பெற்றாள். அவர்களைத் தாய் தந்தையர்கள், செல்வச் செருக்கினாலே, கண்டியாது, மிகுந்த அன்பினால் வளர்த்தார்கள். வளர்க்கு நாளிலே, தாய் தந்தையர்கள் இறந்துவிடப், பிள்ளைகள் வேடரோடு கூடிக், காட்டிலே வேட்டையாடிக்கொண்டு திரிந்தார்கள். ஒருநாள், அக்காட்டிலே வெய்யில் புகாத செடியின் கீழே தவஞ் செய்துகொண்டிருந்த பிருகற்பதியைக் கண்டு, கைகொட்டிச் சிரித்துக் கற்களை வாரி, அவர்மேல் எறிந்தார்கள். பிருகற்பதி, தமது தவத்துக்கு இடையூறு செய்த அப்பிள்ளைகளைக் கோபித்து, "நீங்கள் வேளாளத் தொழிலை மறந்து, வேடத் தொழிலைப் பூண்டீர்கள். நீங்கள் மண்ணுழுந்தொழிலுடையீர்களாதலாற் பன்றிக்குட்டிகளாகிப் பிறந்து தாய் தந்தையர்களை இழந்து, வருந்தக் கடவீர்கள்" என்று சபித்தார். உடனே அப்பிள்ளைகள் பன்னிருவரும் பயந்து "அடியேங்களுக்கு இந்தச் சாபம் எப்போது நீங்கும்?" என்றார்கள். பிருகற்பதி கோபந்தணிந்து, "சோமசுந்தரக் கடவுளே உங்களுக்கு மாதாவாய் முலை தந்து, உங்களைக் காத்துப், பாண்டியனுக்கு மந்திரிகளாக்கிப், பின்பு முத்தியைத் தந்தருளுவார்" என்றார்.

அவ்வேளாளப் பிள்ளைகள் பன்னிருவரும், அந்தக் குருவிருந்ததுறைக்குப் புறத்தில் உள்ள காடுகளிலே சஞ்சரிக்கும் பன்றிகளெல்லாவற்றிற்கும் அரசாகிய பன்றியினது பெட்டை வயிற்றிற் போய்ப் பிறந்து, குட்டிகளாய் இருந்தார்கள். இருக்கும் நாளில் ஒரு நாள், இராசராச பாண்டியன் வேட்டை விரும்பினனாய்ச் சேனைகள் சூழ, யானை மேற்கொண்டு, மதுரையினின்று நீங்கி, மேற்றிசைக் காட்டிற் சென்று, பல விலங்குகளையுங் கொன்று, மேற்கே போவானாயினான். அப்பொழுது, ஒரு பன்றி, மேற்கூறிய பன்றியரசின் முன் ஓடிப்போய் நின்று, "எங்களரசே! பாண்டியன் இங்குள்ள மிருகங்களெல்லாவற்றையுங் கொன்றுகொண்டு வருகின்றான்" என்று சொல்லிற்று. பன்றியரசு, அதுகேட்டுக், களிப்படைந்து தன் பெட்டையை நோக்கி, "நான் இன்றைக்குப் பாண்டியனோடு சென்று பொருவேன். போரில் வென்று திரும்புவேனோ? இறந்தொழிவேனோ? தெரியாது. நீ உன் குட்டிகளைப் பாதுகாத்துக்கொண்டு இங்கேயிரு" என்றது. அதற்குப் பெண் பன்றி, "என் பிராண நாயகனே! நான் உன்னைப் பிரிந்து இங்கே இருக்கமாட்டேன். நானும் உன்னோடு வருவேன் நீ வென்று திரும்புவையானால், நானும் உன்னோடு திரும்புவேன் நீ இறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவையானால், நானும் உன்னோடு இறந்து விடுவேன். போவோம், எழும்பு" என்று சொல்லி விரைந்தெழுந்து, தன் குட்டிகளையுங் கூட்டிக் கொண்டு புறப்பட்டது.

பன்றியரசு, பன்றிக் கூட்டங்களெல்லாந் தன் சேனைகளாய்த் தனக்குமுன் செல்ல, இடிபோல ஆரவாரித்துக் கொண்டு, யுத்தத்துக்கு நடந்தது. முன் சென்ற பன்றிகளுள்ளே பல, பாண்டியனுடைய சேனை வீரர்களோடு எதிர்ந்து பொருது, அவர்கள் விடுத்த பாணங்களினால் இறந்தன. எஞ்சிய பன்றிகள் பாண்டியனுடைய சேனை வீரர்களுள்ளே பலரைக் கொன்றன; பலரை ஊறுபடுத்தின. பாண்டியனுடைய மந்திரிமார்கள், அது கண்டு, கோபங்கொண்டு, இருப்புலக்கைகளினாலுஞ் சக்கரங்களினாலும் அப்பன்றிகளைக் கொன்றார்கள். அப்பொழுது பன்றி அரசை அதன் பக்கத்து நின்ற பெண் பன்றி பார்த்து, "நம்முடைய சேனைகளெல்லாம் இறந்தன; இனி நாஞ் செய்வதென்னை? நாமும் இங்கே வீணாக இறக்கவேண்டுவதில்லை; தப்பிப் போவதே கருமம்" என்றது. பன்றியரசு பெண் பன்றியை நோக்கி, "நுண்ணறிவுடையராகி நூலொடு பழகினாலும் பெண்ணறிவென்பதெல்லாம் பேதைமையுடைத்து. ஆதலால், உன்னறிவுக்கேற்ற காரியஞ் சொன்னாய். இது அறிவுடையோருக்கெல்லாம் இழுக்குடையதன்றோ! இரண்டு சிங்கம் நிற்கிற துறையிலே ஒரு பன்றி வந்து தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பும். ஒரு பன்றி நிற்கிற துறையிலே இரண்டு சிங்கம் வந்து தண்ணீர் குடித்தற்கு அஞ்சும். நான் இத் தன்மைத்தாகிய திடம் பொருந்திய மரபிலே வந்து பிறந்தேனாதலால், பாண்டியனோடு பொருது வென்று புகழை நாட்டுவேன்; அல்லது இறப்பேன். இப்பூதவுடம்பேயன்றிப் புகழுடம்பு அழிவதில்லை. நீ நில்" என்று சொல்லித் தன் பெட்டையை நிறுத்திவிட்டுப், பாண்டியன் மீது பெருங் கோபத்தோடு எதிர்ந்து சென்றது. பாண்டியன் அதுகண்டு, வியந்து வில்லை வளைத்துப் பாணங்களைச் சொரிந்தான். பன்றியரசு அப்பாணங்களுள்ளே சிலவற்றைப் பறித்து வாயினாற் கறித்தும், சிலவற்றைக் காலினாலே தேய்த்து முறித்தும், சிலவற்றை வாலினாலே முறித்தும் நின்றது. பாண்டியன் மானம் பொறாது, ஓரிருப்புலக்கையைத் தன் யானையின் கையிலே கொடுத்து, அதனைச் செலுத்தினான். பன்றியரசு இடிபோல் ஆரவாரித்து, அவ்வியானையினது துதிக்கையைச் சிந்தித், தன் கொம்பினாலே அவ்வியானையைக் கொன்று வீழ்த்தியது. உடனே பாண்டியன் தேர்மீது பாய்ந்து, சக்கரத்தைச் சுழற்றி விட்டான். பன்றியரசு அதனை விலக்கிக் கொண்டு, விரைந்து பாய்ந்து, அத் தேர் உடையும்படி தகர்த்தது. உடனே பாண்டியன் குதிரைமீது பாய்ந்து, வேலாயுதத்தை விடும்படி சுழற்றினான். அதை விடுக்குமுன், பன்றியரசு அவனுடைய குதிரைக்குப் பின் போய், அதைத் தன் கோட்டினாலே குத்திக் கொன்றது. பாண்டியன் பூமியிலே குதித்து, இருப்புத் தண்டினாலே பன்றியரசைத் தலையிலே அடித்தான். உடனே பன்றியரசு இறந்து, விமான மேற்கொண்டு, தேவவுலகத்தை அடைந்தது.

பெண்பன்றி "என் நாயகன் இறப்ப, நான் இருப்பது கற்போ? நான் போர் செய்து வெல்லேனாயினும், சுவர்க்கஞ் சேரலாம்" என்றெண்ணிப், பாண்டியனை எதிர்த்தது. பெட்டையைக் கொல்வது அரசனுக்குத் தருமமன்று என்று, அவனுடைய வேடவீரர்களுக்குத் தலைவனாகிய சருச்சரன் என்பவன், அப்பெண்பன்றியோடு எதிர்ந்து, நெடுநேரம் பொருதான். பெண் பன்றி அவனைப் பொருது பூமியில் வீழ்த்த, அவன் இருப்புத் தண்டினால் அதனைத் தலையில் அடித்துவிட்டு, விழுந்து

***உறுதியான உள்ளம் உலகை வெல்லும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து, சுவர்க்கஞ் சேர்ந்தான். பெண் பன்றியும் இறந்து சுவர்க்கஞ் சேர்ந்தது. இராசசேகர பாண்டியன் மதுரையை அடைந்தான். பன்றி விழுந்து பருப்பதமாயிற்று. அது அன்று தொடங்கி இன்றுவரையும் பன்றிமலை என வழங்குகின்றது. அம் மலையிலே சித்தர்களும், விஞ்சையர்களும், யோகிகளும், முத்திபெறற் பொருட்டுத் தவஞ் செய்து கொண்டிருப்பார்கள்.

இப்படிச் சொல்லிய அகத்திய மகா முனிவரை இருடிகள் நோக்கி, "சுவாமி! அறிவில்லாத பன்றிமலையின்மீது சித்தர் விஞ்சையர் முதலியோரெல்லாருந் தவஞ் செய்தற்குக் காரணம் யாது? என்று வினாவினார்கள். அதற்கு அகத்திய முனிவர், "ரங்கவித்தியாதரன் என்னுங் கந்தருவன் புலத்திய முனிவருடைய தவத்துக்கு இடையூறாகிய இசை பாட, அவர் அவனைப் பன்றியாம் வண்ணஞ் சபித்தனர். வித்தியாதரன், "அடியேனுக்கு இந்தச் சாபம் நீங்குவது எப்போது?" என்று வினாவப், புலத்திய முனிவர், "இராசராச பாண்டியன் வந்து உன்னைக் கொல்வான்; கொன்றவுடனே நீ இவ்வுருவத்தைப் பெறுவாய்" என்றார். அப்படியே அவன் வந்து இறந்து, பின் முன்னையுருவைப் பெற்றான். அந்தக் கந்தருவனுடைய சரீரமாய்க் கிடந்த பரிசுத்த பருவதமாதலால், அதன்மீது துறவிகளெல்லாருந் தவஞ்செய்யலுற்றார்கள். சோமசுந்தரக் கடவுளும் அங்கே விரும்பி எழுந்தருளியிருப்பார்" என்று விடைகொடுத்தார்.

பன்றியரசும் பெட்டையும் இறந்த பின், பன்றிக்குட்டிகள் பன்னிரண்டுந் திகைத்தோடின; முலைப்பாலை விரும்பி வாடின; பசியால் வருத்தமுற்றன; வெய்யில் சுட வெதும்பி, நிழலைத் தேடின. இப்படி அவைகள் வருந்தும் பொழுது, அக்காட்டிலே மீனாட்சியம்மையோடு விமான மேற்கொண்டு திருவிளையாடல் செய்தருளிய சோமசுந்தரக் கடவுள், அப் பன்றிக்குட்டிகள்மீது திருவுளமிரங்கி, அவைகளுடைய தாய்ப் பன்றியின் வடிவங்கொண்டு, போய் அவைகளைத் தழுவி, மோந்து, முலைப்பால் கொடுத்து, மிகுந்த வலிமையையும் ஞானத்தையும் நற்குணங்களையும் அருளிச்செய்து, அவைகளுக்கு முகம் மாத்திரம் பன்றி முகமாகவும் உடம்பு முழுவதும் மனித உடம்பாகவும் செய்துவிட்டு மறைந்தருளினார்.

## சிவன் தனித்திருப்பது சரியா?

சக்தியுடன் சேர்ந்திருப்பதே சிவத்திற்குப் பெருமை. அப்படி இருக்கும்போதுதான் சிவனுடைய மகிமை கூடி அதிகரிக்கும்; வல்லமை பெறும் எனலாம். அவ்வாறில்லாது தனித்திருப்பது சுடலையில் எனவும் கூறப்படுகிறது. இலங்கையில் திருகோணமலை, மாதகல் போன்ற இடங்களில் தனியே சிவனின் உருவச்சிலையை மட்டும் அமைத்திருப்பதுதான் இலங்கைக்கு தீய பலன்களை அளிக்கின்றதோ எனும் எண்ணம் மேலோங்குகின்றது. சிவனருகே உமாதேவியாரையும் அமர்ந்திருக்கும் வடிவமைப்பினை அமைத்தால் இலங்கை கொரோனா மற்றும் தீயவற்றின் பிடியிலிருந்து காப்பாற்றப்படும் என்ற ஒரு நினைவு எழுவது இங்கே இன்றியமையாத ஒன்றாகிறது.

இச்சிந்தனை சரியோ தவறோ தெரியாது. எனது மனக்கிடக்கையை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். இந்துமத புத்திஜீவிகள் மத்தியில் இதற்கான விளக்கத்தினை அறிந்து தனிச் சிவத்திருவுருவை விடுத்து அருகில் பார்வதி சமேதராராகக் காட்சி தரும்படி அமைக்க நடவடிக்கை எடுத்தால் இலங்கை உய்வுபெறும் எனும் ஆதங்கத்தை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், தவறெனின் மன்னிப்பை வேண்டி நிற்கிறேன்.

~யூ.பி. ஆனந்தம்~

*உழைப்பின் வேரோ கசப்பு, கனியோ இனிப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலந்தருஞ் சொல் திருவாசகம்

– முருகவே பரமநாதன் அவர்கள் –

சொல் சொல்லு பதம் வார்த்தை ஒரு பொருளன. சொல் ஓர் எழுத்து, பல எழுத்துக் களாலானவை. பொருட்பொருத்தமுறச் சேர்ந்தாலது சொல். ஒரு காலத்திலே பரீட்சைக்குச் சொல் இலக்கணம் கூறுவது உண்டு. "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல் மந்திரம்போல் வேண்டுமடா சொல் இன்பம்" என்பது பாரதி வாக்கு. மொழி என்றாற் பாசை. (பாஷை, பாடை) என்று பொருள். மொழியப்படுவது மொழி; எழுதப்படுவது எழுத்து. மொழி இறைவனால் ஆக்கப்பட்டதன்று. தனியொரு மாந்தனால் உருவாக்கப்பட்டதுமன்று. கழிபல ஊழிகாலங்களாக, கணக்கற்ற தலைமுறையினரால் ஆக்கப்பெற்றது என்பர் பாவாணர். தமிழ்மொழிக்கு இலக்கணம் உண்டு. செப்பு மொழி பதினெட்டுடையாள் எனிற் சிந்தனை ஒன்றுடையாள் என்பார் பாரதி.

பன்னிரு ஆழ்வார்கள் தந்த திருநாலாயிரப் பிரபந்தத்தில் அவர்களின் அருளிச் செயல்கள் பெருவிழுக்காடு திருமொழி என்றே அமைந்துளது.

| | |
|---|---|
| பெரியாழ்வார் திருமொழி | -பெரியாழ்வார் பாடியவை |
| நாச்சியார் திருமொழி | -ஆண்டாள் பாடியவை |
| பெருமாள் திருமொழி | -குலசேகரப் பெருமாள் |
| பெரியதிருமொழி | -திருமங்கையாழ்வார் |
| திருவாய் மொழி | -நம்மாழ்வார். |

வாய்மொழிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை பண்டையமுறை. நம்மாழ்வாரின் வாய்மொழிப் பிரயோகம் போன்றது திருவாதவூரடிகளின் திருவாசகம். திருபொது, திருநாலாயிரம் உயர்ந்த பாசுரங்கள். நல்லபாவினங்கள். இப்பிரபந்தத்திலே பயின்றுவரும் தொடர்தான் "நலந்தருஞ் சொல்"

குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
படுதுய ராயின வெலாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலம் தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்

-பெரிய திருமொழி 1-9.

குலம்- விஷ்ணு பக்தர்கள், நிலந்தரம்- நிலமட்டம், நீள்விசும்பு- பரமபதம்.

எட்டெழுத்து மந்திரப் பெருமையை ஆழ்வார் பாசுரங்களில் நிறையக் காணலாம். அதுவே நலந்தரும் சொல். (நலம்- நன்மை, சுகம்) இப்பத்தின் இறுதிப் பாசுரம் ஒரு படிப் பினையைச் சுட்டிக்காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

........................................
துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடைவினைக்கு
நாராயணா வென்னும் நாமம்.

-மேல் 1-10.

நித்திரைக்குப் போம்போதும், துயில் எழும் போதும் அவன் நாமத்தைக் கூப்பிடுங்கள். துன்பம் கவலை வந்தால் அந் நாமத்தை நினையுங்கள். உங்களுக்குக் கவலை இல்லாவிட்டாலும் சிறீமந் நாராயணனின் திருமந்திரத்தை நினைவதால் கேடில்லை. நாம் செய்த தீவினைகளையெல்லாம் கொல்லும் மந்திரம் இந்த எட்டெழுத்து மந்திரம்.

இவ்வண்ணம் பாடிய ஆழ்வார் நோக்கோடு மணிமொழியார் தந்த திருவாசகத்தை ஒப்பீடு செய்யின் திருவாசகமென்ற தொடர் சைவசமயிகட்கு நலந்தரும் மந்திரம் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இ∴து நாவலல்ல, சிறுகதையல்ல, இன்றைய கவிதையல்ல. பொழுதுபோக்கு நூலல்ல, மரணவீட்டு ஒப்பாரியன்று, இப்பிறவியை வேர் அறுக்கும் அனுபூதிநூல். இதை ஆடல் பெருமானாகச் சிவபூசை செய்யவேண்டும். திருவாசக அனுபூதி அல்லது திருவாசக உட்கிடையென ஓர் நூலை ஆக்கியவர் அகத்தியர். மகோன்னதமான இந்நூலை விடுத்து நாம் பஜனை செய்கிறோமே அதைப்பற்றி பகவான் சத்தியசாயி பாபா சொல்வதை உளம் கொள்வோம்.

"மனதை இறை பக்கம் திருப்பு. அதுவே பக்தி எனப்படும். வெறும் பூஜை செய்வதோ, பஜனை செய்வதோ பக்தி இல்லை. கடவுள் பக்கம் மனதைத் திருப்புவதே பிரேமையின் தத்துவம். உனது மனம் உலகியற் பொருட்களை விரும்பாமல் இறைவனை நேசிக்கும்படி கற்றுக்கொடு"

-சாயி அருளமுதம் கோடை 1999. பக்.214.

சமுதாயத்தைத் தூய்மைப்படுத்துவதும் புனிதப்படுத்துவதும் ஆன்மீகம் பேசப்பட்டுப், பரப்பப்படுகிறது. ஆன்மீகம் என்பது என்ன? விலங்குத்தன்மையைக் கொன்று-மனிதத்தன்மையை வளர்த்து, தெய்வத் தன்மைக்கு மனிதனை உயர்த்துவதே ஆன்மீகம். வழிபாடு, பஜனைகள், சடங்குகள் இவை எல்லாம் வெறும் பழக்கவழக்கங்களே தவிர உண்மையான ஆன்மீகம் இல்லை.

-சாயி அருளமுதம் கோடை 1999.

ஆன்மீகம் கடவுளைப்பற்றி மட்டும் பேசுவதல்ல. ஆன்மீகம் நீதிநெறி, தார்மீக நெறி, உலகியல் அனைத்தும் கலந்தது. உண்மையே பேசு- இது நீதிநெறி, வீரியத்துடன் பேசு- இது தார்மீக நெறி, பிரியமில்லாத உண்மையைப் பேசு- இது ஆன்மீக நெறி. இம் மூன்றும் இணைந்ததே மனித வாழ்க்கை- வாழ்வின் இரகசியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்; வாழ்வின் இலட்சியத்தைப் புரிந்துகொண்ட மனிதன் காலத்தை வீணாக்க மாட்டான். -மேலது 189.

இவ்வண்ணம் காலத்துக்கேற்ற சிந்தனைகளைப் பேசிய சுவாமிகள் (பாபா) மணிவாசகப் பெருமானைப் பற்றிச் சில உண்மைகளையும் கூறத்தவறவில்லை.

"அனைத்துச் செயல்களும் பணத்திற்காகவே திட்டமிடப்படுகின்றன. இது நிரந்தரமான ஆனந்தம் தருவதில்லை. நாம் தெய்வீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தத்தைப் பெறவேண்டும். கடவுளின் அன்பைப பெற வேண்டும். ஸத்ஸங்கத்தில் சேரவேண்டும். இதையே மாணிக்கவாசகர் முக்கியமாகக் கற்பித்தார். அவர் பல பாடல் களை இயற்றினார். சத்தியம், சாந்தம் இவற்றை என்றும் விடவில்லை. அவர் கடவுளின் அள வற்ற தன்மையை அறிந்தவர், ஆகவேதான் "சத்தியம், ஞானம், ஆனந்தம் ப்ரம்மா" என் பதை வலியுறுத்தினார். ஞானம் என்பதென்ன? உலகியல் அறிவா, இயற்கை பற்றிய அறிவா, பரம்பொருள் பற்றிய அறிவா? அல்ல. இரண் டற்ற ஒன்றைப் பற்றிய அறிவே ஞானம் அதுவே ஆனந்தம். அதுவே உண்மையான ஞானம்.

ஞானம் உலகியல் அறிவைப்பற்றிய தல்ல. ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி என்றவாறு, இருப்பது ஒன்றே என்றறிவதுதான் ஞானம். அது என்றும் மாறாதது, அளவற்றது, அதுவே சத்தியவடிவங் கொண்டது. மாணிக்க வாசகர் இந்த ஞானமார்க்கத்தைப் பின் பற்றினார், தன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார், எங்கும் பரப்பினார், சாந்தநிலை பற்றிப் போதித்தார். (எனவே) எக்காரணங் கொண்டும் மனம் மாறாதே. -மேலது பக் 140.

ஞான நெறி நின்று, ஞானக் குரலாகப் பாடியது திருவாசகம். இவ் ஏடு சிவ பூசைக்கு உரியது. எனவே இந்நூலை உள்வாங்கிக் கடைப்பிடித்தல் படிப்போர் இலட்சியமாய் இருக்கட்டும். திருவாதவூரடிகளின் திருவாசக நூலில் எழுதப்பட்ட விடயங்களை நாம் கவனிப்பதில்லை. அதிற் சொன்ன கருத்துக் களைக் கடைப்பிடிப்பதில்லை. கடைப்பிடிப் பதே முக்கியம். அதைத் தலையிற் சுமந்து ஆலயத்தைச் சுற்றிவந்து ஒரு பயனும் அடை யப் போவதில்லை. நாம் அதை வழிபடுவதாற் பிரயோசனம் இல்லை. அதில் எழுதப்பட்ட போதனைகளை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

திருவாசகத்தில் நிறைய ஆன்மீகம் பேசப்பட்டிருக்கிறது. குறைந்தவற்றையாவது நாம் செயற்படுத்த வேண்டும். இப் புனித ஏடு குர்ஆன், பைபிள், தம்மபதம் போலப் புனிதமானது. இதை ஆன்மீக நோக்கோடு படிப்போம். விடுதலை காண்போம். துர்ப் பிரயோகம் செய்யின் பாவச்சுமையை தலை யிற் சுமப்போம். அப்பர் சொன்னபடி சிவ நூலை ஏளனம் செய்வோர் இறைவன் தண் டனைக்குள்ளாவர். சிவத்துரோகம் பொல் லாதது. திருவாசகம் புனிதமான தீர்த்தம். அது பாவம் வினை அறுக்கும்.

## சந்திப்பு

ஒவ்வொரு நாளும் நாம் விரும்பியோ விரும்பாமலோ பிடித்தவர்களையோ பிடிக்காதவர்களையோ தற்செயலாகவோ திட்டமிட்டோ சந்திக்கின்றோம். ஒவ்வொரு சந்திப்பிலும் அவர்களிடமிருந்து ஏதோ ஒன்றை நாம் தெரிந்துகொள்கின்றோம். அவர்களின் நிறைகளையோ குறைகளையோ அல்லது அவர்களின் பழக்கவழக்கங்கள், பேசும் விதம், உடை அணியும் விதம் என்பவற்றையோ நாம் அவர்களிடமிருந்து அறிகிறோம். இச்சந்திப்புக்கள் சில நேரங்களில் நமக்கு மகிழ்ச்சியையும் இன்னும் சில நேரங்களில் கவலைகளையும் வேறு சில நேரங்களில் விபரிக்கமுடியாத உணர்வுகளையும் கோபத்தையும், நாம் சந்திக்கும் நபர்களைப் பொறுத்து எமக்கு ஏற்படுகின்றன.

நாம் சந்திக்கும் ஒவ்வொருவரையும் ஒரே விதத்தில் சந்திப்பதில்லை. நண்பர்களோடு மகிழ்ச்சியாகவும், குடும்ப உறவினர்களோடு அன்பாகவும், தொழில் செய்யும் இடத்தில் மரியாதையோடும், அறிமுகமற்றவர்களோடு முறையாகவும் இப்படி இடத்துக்கும் நபர்களுக்கும் ஏற்ற முறையில் எமது சந்திப்புக்கள் வேறுபடுகின்றன.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடங்களும் அழகானவை. எனவே, எமது சந்திப்புக்களை சிரித்த முகத்துடன் ஆரம்பித்து, சோகமோ கவலையோ அவர்களது மனநிலைக்கு நாம் மாறாமல் எமது மனநிலைக்கு அவர்களை மாற்றி, எமது சந்திப்புக்களை மகிழ்வானதாக்கி ஒவ்வொரு நிமிடங்களையும் அழகானவையாக்குவோம்.

*செய்ய முடிந்தவன் சாதிக்கிறான். செய்ய முடியாதவன் போதிக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 54

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 அந்தரத்தில் சுற்றும்பூமி அதன்நிலையே இறைவன்கையில்
இந்நிலத்தில் சிறிதோர்துண்டை இலட்சத்தால் வாங்கும்மாந்தர்
தன்நிலையை நிலையாய்எண்ணித் தரித்தாற்றும் செயல்கள்கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்.

02 கண்ணகமாய்க் கடவுள்தந்த எண்ணரிய எழிலாமிந்த
மண்ணகத்தே வீடுகட்டி மகிழ்ந்திருக்க வொண்ணாமாந்தர்
விண்ணகத்து மீன்கள்தன்னில் வீடுகட்ட எண்ணல்கண்டு
புன்னகைக்கும் இறைவன் தன்னை யாரறிவார் பூமியல்லால்.

03 தான்தரிக்க இடமேயின்றி தத்தளிக்கும் பூமிமாதா
நாம்தரிக்க இடமும்தந்து வான் வளி தீ நீரும்தந்து
இன்பமுற வாழுமென்ன இயற்கையைநாம் உதைத்தல்கண்டு
புன்னகைக்கும் இறைவன் தன்னை யாரறிவார் பூமியல்லால்.

04 ஓய்ந்திருக்க நாழியின்றி ஓயாமல் சுழலும்பூமி
சாய்ந்திருக்கச் சரசம்பண்ணச் சந்தர்ப்பம் தந்ததாலே
ஆய்ந்ததற்கு மேல்நாமென்று எண்ணிடலும் செயலும்கண்டு
புன்னகைக்கும் இறைவன் தன்னை யாரறிவார் பூமியல்லால்.

05 பால்கொடுக்கும் பசுவின்மடியை பற்றிநாம் முற்றும்கறந்து
தீன்கொடுக்க மறுத்துப்பின்னர் தீங்கிழைக்கும் தன்மைபோல
மண்மேல்நாம் வாழ்ந்துகொண்டே மண்நாசம் செய்தல்கண்டு
புன்னகைக்கும் இறைவன் தன்னை யாரறிவார் பூமியல்லால்.

06 தீப்பிழம்பைக் கக்கும்போதும் திசையெல்லாம் நடுங்கும்போதும்
நாம்பிழைக்க வழிகள்செய்யும் நல்லதாய் பூமிதன்னை
வீம்புக்கு இழுக்கும் போதும் விதவைபோல் நடத்தும் போதும்
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்.

*தேவைப்படுவதைப் பெறுவதற்கு தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டே இருங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 ஈர்ப்பென்றோர் பந்தம்வைத்து இடையறாது எம்மைத்தாங்கி
இயற்கையென்றோர் வனப்புவைத்து இன்புற்றே வாழுமென்ன
போர்க்கோலம் பூண்டேநாமும் பூமிதனைச் சிதைத்தல் கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்.

08 தொப்புள்கொடி உறவதனால் உயிர்காக்கும் தாயைப்போல்
பொறபாத உறவுவைக்க எம்மைக்காக்கும் பூமித்தாயை
அற்பத்தனம் செய்தே நின்று கருவழிப்போர் நிலையைக்கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்.

09 பூமியிலே பிறக்கின்றோம் பூமியிலே வளர்கின்றோம்
புதைந்திட்ட போதுமிறை அடிபுக்கார் என்றோ சொல்வோம்
வாழ்கின்றபோதிலதனை உணராமல் வாழ்தல் கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்.

10 தன்னைப்போல் நாமும்எதையும் தாங்கியே வாழ்வோமென்று
நம்பியே எம்மைத்தாங்கி வளர்த்ததாய் பூமிதன்னை
இம்சைக்கு உட்படுத்தி இடிவீழ வைத்தல் கண்டு
புன்னகைக்கும் இறைவன்தன்னை யாரறிவார் பூமியல்லால்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*பிறந்துவிட்டோம் என்று வாழாதே. இனி பிறக்கப்போவதில்லை என்று நினைத்து வாழுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துப் பரிமாற்றத்துக்கு பயன்படும் பழமொழிகள்

– வடகோவை பூ.க. இராசரத்தினம் அவர்கள் –

பழமொழிகள் என்பவை வாழ்வின் அனுபவப் பிரிவுகள். வாழ்ந்தவர்களும் வளர்ந் தவர்களும் வாழவேண்டியவர்களுக்கு வழங்கி வரும் சத்தான சாறுகள். பழமொழி வாழ்வுடன் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பை உள்ள வாறு அறிந்து, அதை வாழ்வுக்கு ஏற்ற வகை யில் பயன்படுத்திக் கொள்வதே எமது கடமை ஆகும்.

மக்களின் பேச்சு வழக்கில் நிலவி, சூழ்நிலைக்குப் பொருந்தக் காலங்காலமாய் கருத்துப் பரிமாற்றத்துக்குப் பயன்பட்டுவரும் அனுபவ உரைகளே பழமொழிகள் எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. எதுகை மோனை போன்ற கவிதையின் சந்த இயைபினையும் தம்முன் கொண்டு விளங்குவதால், பேச்சு வழக்கில் மிகச் சரளமாக நடைபோடுகின்றன பழமொழிகள்.

பண்டைத் தமிழ் இலக்கண விற்பனர் தொல்காப்பியர், பழமொழிகளை முதுமொழி என்று பொருத்தமுடன் குறிப்பிட்டுள்ளார். பழ மொழியைப் பழைய மொழி எனக் கருதுவது தவறாகும். பழம் (முதிர்ந்த)+ மொழி = பழமொழி என்று விளங்கிக் கொள்ளுதல் நன்று. அனேகமாக நேரடியாகக் கூறாது மறைமுகமாகக் கூறுவதற்கும் குத்தலாகக் கூறுவதற்கும் சிலர் பழமொழிகளைப் பயன் படுத்துவது உண்டு. பேச்சு வளக்கிற்கே இவை பெருமளவில் உபயோகப்படுத்தி வரு வதை வைத்து பழமொழி என அழைக்கப் படுகிறது என்ற கருத்தும் நிலவுகிறது. பழமொழியை உருவாக்கியவர் யார் என்று சொல்வதற்கு சான்றுகள் இல்லை எனலாம். ஆனால் மொழிகளுக்குள் புகுந்து பிரபல்ய மாக வலம் வருகிறது.

உலகத்திலுள்ள எல்லா மொழிகளி லும் பழமொழிகள் உண்டு என ஆய்வுகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. எப்படி இருந்தபொழுதிலும், கிரேக்க நாட்டில் பழ மொழிகள் தோன்றி வளர்ந்தன என ஆய்வாளர் கள் குறிப்பிட்டுள்ளார்கள். தத்துவ ஞானி சோக்கிரட்டீஸ் பழமொழிகளை விரும்பி பயன் படுத்தியதாகத் தகவல்கள் உண்டு.

மத, இன வேறுபாடுகளைக் கடந்து, மக்களின் கருத்துக்களையும் பாகுபாடின்றி சேர்த்தவிதம் ஒரு தனி அழகு. சில எளிய நடையில் இருந்தாலும் ஆழமான சிந்தனை யைத் தூண்டும் வல்லமை அவற்றிற்கு உண்டு. இன்று அழியாவரம் பெற்றவையாக ஒலிக்கின் றன. மொழிகள் பல்சுவையான ஆழ்ந்த கருத் துக்களை, படைப்புக்களை வழங்கிய வண் ணம் உள்ளன. பழமொழிகள் இல்லாத நாடே இல்லை. பழமொழிகள் கட்டுரைகளை அலங் கரிக்கின்றன. பேச்சாளர்கள் சாதாரண மக் களுக்கு விளக்கம் கொடுக்கும்பொழுது பழ மொழிகளை உபயோகிப்பது வழக்கிமாகி விட்டது.

பழமொழிகள் குறுகிய வாக்கியங் கள், நீண்டகால அனுபவங்களிலிருந்து பெறப் படுகின்றன. பழமொழிகளின் முக்கியத்துவம் உணரப்பட்டமையால் ஒரு நாட்டுப் பழமொழி பல நாடுகளில் உபயோகிக்கப்படுகின்றன. கிரேக்கருக்கும் தமிழருக்கும் வாணிபத் தொடர்பு

*காயங்களின்றி காலம் எதையும் கற்றுக்கொடுப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமையால் கிரேக்க மொழிப் பழமொழி கள் தமிழிலும் உண்டு. கிரேக்கம் போன்ற ஆதி மொழிகளின் சொற்களை எடுத்துக் கொண்டு, இன்று சர்வதேச மொழியாக வளர்ந்து நிற்கும் ஆங்கில மொழியில் அநேக பழமொழிகள், தமிழ்ப் பழமொழிகளின் மொழி பெயர்ப்பு போலவே விளங்குவதற்குரிய காரணமாகும்

பல மொழிகளிலுள்ள பழமொழிகள் சிலவற்றை ஆராய்ந்து பார்ப்பது பொருத்த மாகும். "குறை குடம் கூத்தாடும்" என்பது சாதாரணமாகப் பழக்கத்தில் இருக்கும் பழ மொழியாகும். "காலிப் பாத்திரம் ஓசை மிகச் செய்கிறது" என்ற பழமொழி உண்டு. மேலும் "வினை விதைத்தவன் வினையை அறுப்பான்" என்கிற சாதாரணமான தமிழ்ப் பழமொழியை உதாரணமாக எடுக்கலாம். எப்படி விதைக் கிறாயோ அப்படி அறுக்கிறாய் என்கிற பழ மொழி ஆங்கிலத்தில் தமிழுக்கு நேருக்கு நேராகவே கிடைக்கிறது.

மேலும் "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" ஆங்கிலத்தில் "வெய்யிலின் போதே உலர்த்திக்கொள்" எனக் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வுலகிலே வாழும் நல்வாழ்வு பற்றி யும் பழமொழிகள் மூலம் நல்ல கருத்துக் களைத் தெரிவித்திருக்கிறார்கள். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" "மூத்தோர் சொல் அமிர்தம்", "ஊருடன் பகைக்கின் வேரு டன் கெடும்" பழமொழிகள் வரையப்படாத சட்டங்களாக மதிக்கப்படுகின்றன.

"மனிதன் சேர்க்கும் செல்வம் தேனி சேர்க்கும் தேன்போல மற்றவர்கட்கும் பயன் பட வேண்டும்" தீபெத்து தேசப் பழமொழி.

"அறிவும் ஒழுக்கமும் வண்டியின் இரு சக்கரங்கள்" யப்பானிய தேச பழமொழி. அனைத்து மொழிகளிலும் காணப்படுகின்ற பிரதானமான சில பழமொழிகளைத் தொகுத்து, சர்வதேசப் பழமொழிகளைக் கொண்ட ஒரு அகராதியை அமைத்தல் நன்று. மொழி பெயர்ப் பாளருக்கும், ஆய்வுகளை மேற்கொள்பவர் களுக்கும் உதவியாக அமையும். இப்படியாக "பழமொழித்திரட்டு" என்ற நூல் தமிழ் நாட்டில் இருப்பதாக அறிகிறேன். மேலும் "பழமொழிக் கதைகள்" என்னும் நூல் வெளியிடப்படவுள்ள தாகவும் அறிகின்றேன்.

ஆங்கிலத்தில் புகழ் பெற்ற நாடக ஆசிரியர் சேக்ஸ்பியர் தம்முடைய நாடகங்க ளில் பழமொழிகள் பலவற்றை கையாண்டார். எதுகை, மோனை என்னும் செய்யுள் நயங் களைக் கொண்ட பழமொழிகள் அவரின் நாடக உரைகளில் மிகவும் பொருத்தமாக உள்ள தாக விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

தமிழ் நாட்டுப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, சேக்ஸ்பியரின் நாடக பாணியைப் பின்பற்றிச் செய்யுள் வடிவில் "மனோன்மணி யம்" என்னும் நாடகத்தை தமிழில் இயற்றி உள்ளார். இதில் 60 பழமொழிகளை நாடகத் தின் உரையாடல்களோடு பயன்படுத்தி வெற்றி அடைந்தார்.

பழிமொழிகளில் நாம் வாழ்வியல் தத்துவங்களைக் கண்டு நுகரலாம். எமது ஆக்கங்களிலும் பேச்சிலும் பழமொழிகளைக் கையாண்டு சுருங்கக்கூறி பெருமளவில் விளங்க வைக்கலாம். நாகரீகப் போக்கால் சமுதாயச் சூழ்நிலை மாறி வருகிற தற்கால நிலையில் பழமொழிகள் பேச்சில் அருகி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. நல்ல பழமொழிகளை, அறிவுரை வழங்கும் பழ மொழிகளை, நீதி நெறிகளைப் புகட்டும் பழ மொழிகளை இலக்கிய உத்வேகம் பெற உதவுவது காலத்தின் தேவையாகும்.

*இந்த உலகம் உன்னைத் திரும்பிப்பார்க்க வேண்டுமென்றால் நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| மோகன் கடை | ஆவரங்கால் | 1புட்டி பருப்பு, 1புட்டி மா, 1மூடை அரிசி |
| பே. லோகேஸ்வரி மூலம் மகாலட்சுமி அம்மா இன்பேஸ்வரி நினைவாக | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| பே. லோகேஸ்வரி மூலம் பே. சன்னதிராசா, பே. பேரின்பசிவம் நினைவாக | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| பொ. கஜேந்திரன் | மல்லாகம் | கடலை, பருப்பு, 1மூடை அரிசி |
| திரு ரவிச்சந்திரன் குடும்பம் | சுவிஸ் | 100 பிராங் |
| தங்கலெட்சுமி குமாரசாமி நினைவாக | கொழும்பு | 10000. 00 |
| அ. ஸ்ரேயா | லண்டன் | 15000. 00 |
| K. கிருத்திகா | சுன்னாகம் | 5000. 00 |
| ந. வாமதேவன் | ஆனைப்பந்தி | 1000. 00 |
| M. இந்திரநாதன் குடும்பம் | கல்வியங்காடு | 1000. 00 |
| சு. கோசலைகோபன் | இமையாணன் | 1000. 00 |
| ஆ. சிவநாதன் | நெல்லியடி | 1000. 00 |
| இ. சிவலோகநாதன் | பிரான்ஸ் | 10000. 00 |
| ம. மகரசேனன் | சிறுப்பிட்டி | 5000. 00 |
| K. ஸ்ரீ | கொக்குவில் | 5000. 00 |
| த. சுகந்தி | பிரான்ஸ் | 5000. 00 |
| யசோதரன் ஹேமப்பிரியா | மந்திகை | 10000. 00 |
| சிவானந்தம் சோமினி | கரணவாய் | 5000. 00 |
| இ. தயாநிதி | கிளிநொச்சி | 500. 00 |
| ஜெயந்தி கிருஸ்ணலீலா | உடுப்பிட்டி | 5000. 00 |
| க. செந்தூரன் | லண்டன் | 10000. 00 |
| பொ. தவராசா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| மா. விஸ்வநாதன் | புத்தூர் | 1000. 00 |
| இ. ராசநாயகம் (துர்க்கா மரக்காலை) | சண்டிலிப்பாய் | 5000. 00 |

*எத்தனை கைகள் என்னைத் தள்ளிவிட்டாலும் என் நம்பிக்கை என்னைக் கைவிடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| யோ. இந்திரலோகன் | சிங்கப்பூர் | 120000. 00 |
| இ. முரளிதாஸ் | வியாபாரிமூலை | 5000. 00 |
| ஆ. கதிர்காமநாதன் | கனடா | 4மூடை அரிசி |
| திரு பேரின்பநாயகம் குடும்பம் | திருநெல்வேலி | 1000. 00 |
| ஐ. ராசலிங்கம் | கனடா | 1000. 00 |
| கி. சத்தியசீலன் | கிளிநொச்சி | 2000. 00 |
| சி. இந்திரகுமாரி | கனடா | 5000. 00 |
| V. தேவபாலன் | கனடா | 5000. 00 |
| திரு கஜேந்திரா குடும்பம் | கொழும்பு | 15000. 00 |
| அல்லிமலர் தெய்வேந்திரன் நினைவாக | உடுவில் | 5000. 00 |
| M. விக்னேஸ் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| லிங்கன் கூல்பார் | யாழ்ப்பாணம் | 60000. 00 |
| V. சிவநேசன் | உடுவில் | 500. 00 |
| வே. கிருபாகரன் | கொழும்பு | 10000. 00 |
| ந. தெய்வேந்திரராஜா | வல்வெட்டி | 2000. 00 |
| இ. திருச்செந்தூரன் | முரசுமோட்டை | 6000. 00 |
| கோ. உருத்திரா | மானிப்பாய் | 1500. 00 |
| N. ரட்ணம் | தும்பளை | 10000. 00 |
| திரு நிஷாந்தன் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| மா. லோகேஸ்வரன் | இணுவில் | 2000. 00 |
| கு. கமலகுமார் | திருநெல்வேலி | 1000. 00 |
| இ. ஜெயராசா | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சி. ஹர்சினி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சாரதாம்பிகை செல்லமுத்து நினைவாக | சுவிஸ் | 5000. 00 |
| ச. பிரணவன் | லண்டன் | 5000. 00 |
| சி. இனோஜன், சி. ஹர்சினி, சி. மைகிஷன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| ந. இளமுருகன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| கௌ. அக்ஷயா | புத்தூர் | 1000. 00 |
| ப. திருமகள் | வவுனியா | 1000. 00 |
| யோ. கேதீசன் | திக்கம் | 10000. 00 |
| ஏகாம்பரம் ரெக்ஸ் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| M. கோபிகிருஷ்ணா | மலேசியா | 1000. 00 |
| சு. யுத்தேஸ் | தெல்லிப்பழை | 5000. 00 |
| ச. கவிஷாந் | கனடா | 1000. 00 |
| திரு தங்கவேல் குடும்பம் | கனடா | 500. 00 |
| திரு சிவானந்தமூர்த்தி குடும்பம் | கனடா | 500. 00 |

*நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தைப் பார் ஓடுவது முள் அல்ல உன் வாழ்க்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சுகந்தன் சஞ்சனா | சித்தங்கேணி | 2000. 00 |
| K. ஸ்ரீஸ்காந்தன் | அளவெட்டி | 2000. 00 |
| வி. சனோஸ் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| செ. விமலாதேவி, ஜெ. ரோசினி, ஜெ. இந்திரா | கனடா | 5000. 00 |
| ந. புலேந்திரன் | கனடா | 5000. 00 |
| சர்மினி சாந்தஜி | கனடா | 1000. 00 |
| து. செந்தில்குமார் | கொழும்பு-5 | 2000. 00 |
| தே. சர்வேந்தன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| மா. சிவஞானம் | இணுவில் | 5000. 00 |
| க. சபாநாதன் | இணுவில் | 2000. 00 |
| M. செல்வராஜ் | கண்டி | 1000. 00 |
| இ. தயாநிதி | கிளிநொச்சி | 500. 00 |
| திரு நவசுதன் குடும்பம் | நீர்வேலி | 1000. 00 |
| தேவன் ஸ்ரோர்ஸ் | ஆவரங்கால் | 1புட்டி பருப்பு 1மூடை அரிசி |
| முருகன் அடியார் | | 5000. 00 |
| ர. நிதுஙரி | அளவெட்டி | 5000. 00 |
| சி. சஞ்சயன் | சுழிபுரம் | 2000. 00 |
| S. கணேஸ் | புன்னாலைக்கட்டுவன் | மரக்கறி 1மூடை அரிசி |
| Dr வே. ஜெயந்தினி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வி. கபில், M. மேரிராஜா | அளவெட்டி | 25k பருப்பு, 2புட்டி அரிசி 3000. 00 |
| ஸ்ரீ. ஜெயராணி | சங்கானை | 5000. 00 |
| தி. பிரகலாதன் | சாவகச்சேரி | 5000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| சி. சசிதரன் | பிரான்ஸ் | 5000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| அ. ஹரிப்பிரணவன் | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| வி. ரூபசேயோன் | லண்டன் | 10000. 00 |
| த. கேசவதாஸ் | பருத்தித்துறை | 5000. 00 |
| திரு சிவனொளிபாதம் குடும்பம் | சிலாபம் | 25000. 00 |
| வி. துஷிதரன் | சுன்னாகம் | 2000. 00 |
| வி. ரஜிதரன் | சுன்னாகம் | 2000. 00 |
| ஸ்ரீ. ரஞ்சினி | கனடா | 5000. 00 |
| திரு இன்பநாதன் குடும்பம் | கனடா | 3000. 00 |
| திரு பிரதீபன் குடும்பம் | கனடா | 3000. 00 |
| தணிகாசலம் பரஞ்சோதி குடும்பம் | | 1000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜபம்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

இறைவனை வழிபடும் மார்க்கங்களில் ஜபம் ஒன்றாகும். ஜபம் என்பதன் பொருள் இறைவனின் திருநாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிக்கும் ஆன்மீகப் பயிற்சியே என்பதாகும்.

எமது மனதில் பக்தியை தோற்றுவித்து மனதை இறைவனிடம் ஒருமுகப்படுத்துவதே ஜபத்தின் நோக்கம். ஜபம் எமது உள்ளத்தில் இறைபக்தியை ஏற்படுத்தும்.

நாம் ஜபிப்பது மந்திரமாகவோ தேவ நாமம் ஆகவோ சுலோகமாகவோ இருக்கலாம். ஜபம் செய்யும்போது நாம் பயன்படுத்தும் மந்திரம் திறவுகோல் போன்று மூலச் சொற்களாக அமைகின்றன.

ஜபம் செய்யும் வழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. எமது சமயம் எத்தனை பழமையானதோ அத்தனை பழமையானது ஜபம். எல்லா மதங்களுமே ஜபத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளன.

நாம் மற்றைய எண்ணக் கோவைகளிலிருந்து விடுபட்டு இறை நினைவுடன் வாழ்வதற்கு ஜபம் நல்லதோர் சிறந்ததோர் மார்க்கமாகும்.

ஒரு சாதகன் ஜபம் செய்யச் செய்ய அது படிப்படியாக அவனைத் தியானத்தில் ஆழ்த்துகின்றது. மந்திரங்கள் புனித சக்தியை வெளிப்படுத்துகின்றன. பக்தியை ஊட்டுகின்றன, தியானத்தில் லயிக்க வைக்கின்றன. இதனால் ஆத்ம தரிசனம் கிட்டுகின்றது. சடங்குகள், பூஜைகள், துதிகள் யாவும் காயத்திரி மந்திரத்துள் அடங்கியுள்ளன. காயத்திரி பிரணவத்துள் அடங்கியுள்ளது. பிரணவம் சமாதியுள் ஒடுங்குகின்றது. பகவானது பல்வேறு திருநாமங்கள் பகவானைக் காட்டும் அற்புத கருவிகளாக அமைகின்றன. அவ்வாறெனின் இறை நாமத்தை இடையறாது ஜபிப்பதில் எத்தனை உயர் பலன் கிடைக்கிறது, என்பதை சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்!

இவற்றைவிட ஒரு பூசை செய்பவருக்கு வேண்டிய ஒழுக்கம், மனக் கட்டுப்பாடு, மன வலிமை, நிலையான ஆசனம், ஆயத்தங்கள் ஆகியவை ஜபம் செய்வதற்கு தேவைப்படுவதில்லை. இடம், காலம், நேரம், சூழல், ஆசனம் எதையுமே பொருட்படுத்தாது நாம் இறை நாமத்தையோ மந்திரத்தையோ வேத வாக்கியங்களையோ ஜபிக்கலாம். அது நம்மைத் தூய்மைப்படுத்தி விடும். அத்தனை சக்தி வாய்ந்தது ஜபம். இதற்கு எமக்கு மனோ வலிமை அவசியம்.

இறைவனின் நாமத்தை உனது ஒவ்வொரு மூச்சோடும் உச்சாடனம் செய்தால், உன்னால் உனது கடைசி மூச்சின் தரம் எது என்று உனக்கே தெரியாது.

இது கபீர் தாகூர் கூறும் கருத்தாகும். சமயங்கள் வேறுபடலாம். ஆனால் அவரவரது இறை நாமத்தை ஜபிப்பதும், மந்திரங்கள் ஓதுவதும், எல்லா மதங்களிலும் வழக்கத்தில் உள்ளதை நாம் காண்கின்றோம்.

எமது மதத்தை நோக்கின் பிரணவ மந்திரம், "ஓம் நமசிவாய" என்னும் பஞ்சாட்சர மந்திரம், காயத்திரி மந்திரம், "ஓம் சரவணபவ" என்னும் திருமந்திரம் வேத வாக்கியங்களான "அகம் பிரமாஸ்மி", "தத்துவமசி", "ஸ்ரீ ராம் ஜயராம்", "ஹரே கிருஷ்ணா" யாவும் எம்மால் எந்நேரமும் ஜபிக்கத் தக்கனவாம்.

வேதாந்தம், யோக சாஸ்திரங்கள், சாஸ்திர நூல்கள் யாவும் எமது மனதை ஒரு வழிப்படுத்த உதவுகின்றன. ஜபம் மனதைத் தூய்மைப்படுத்தும் அரும் பெரும் சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது. அத்தோடு பூஜை சடங்குகள் போல் ஆரவாரமற்ற சூட்சுமமான வழிபாடாகவும் அமைகின்றமை ஜபத்தின் தனிச் சிறப்பாகும். வேதாந்த நூல்களில் தியானத்திற்கு அடுத்து ஜபம் இடம்பெறுகின்றது.

தியானம் பழகமுடியாதவர்கள் ஜபத்தினையும் அதிலும் மனம் செலுத்த முடியாதவர்கள் பூசை போன்ற சடங்குகளையும் வழிபாட்டில் பின்பற்றலாம்.

மந்திரம் மந்திரம் என்கிறோமே! அதன் விளக்கம் என்ன என்பதைச் சற்றுப் பார்ப்போமா? மந்திரம் என்பதற்கு "ஜபிப்பவனைக் காப்பாற்றி மோட்சம் அளிப்பதே மந்திரம்" எனப் பொருளாகின்றது. மந்திரம் இறை சக்திக்கு நிகரான ஒலியாகும். மந்திரம் உச்சரிப்பதால் ஏற்படும் ஒலி அலைகள் நம்முள் தெய்வ சக்தியைத் தோற்றுவிக்கும் தன்மை வாய்ந்தன. அத் தெய்வ சக்தி, ஜபிப்பவனுக்கு இறை ஞானத்தைக் கொடுக்கின்றது.

தெய்வம், அதன் நாமம், அதன் உருவம், அதன் மந்திரம் அத்தனையும் ஒன்றுக் கொன்று சமமான சக்திவாய்ந்தவை. ஞானிகளும் ரிஷிகளும் ஆத்ம ஞானம் பெற்ற சமயத்தில் அந்தந்த மந்திரங்களை ஒளி வடிவிலும் ஒலி வடிவிலும் தரிசித்து ஆத்ம ஞானம் பெற்றார்கள் என்பது வரலாறு.

எவ்வாறு ஒரு சிறிய ஆலம் விதையில் பிரம்மாண்டமான ஒரு பெரிய ஆலமரமே அடங்கியுள்ளதோ அதேபோன்று ஒரு மந்திரத்தில் மிகப்பெரிய ஆத்ம ஞானம் சூக்குமமாகப் படிந்துள்ளது.

ஒரு சாதாரண மனிதனுக்கு வெறும் சப்தமாகவே ஒலிக்கும் மந்திரம் ஆத்ம சாதகன் ஒருவனுக்கு ஆத்ம ஞானத்தை அளிக்க வல்ல சர்வ சக்தி வாய்ந்த சொல்லாக அமைகின்றது.

ஜபிக்கும் மந்திரங்கள் பற்றி இன்னுமொரு உண்மையினை யாம் அறிந்துகொள்ள வேண்டும். தன் மூலத்தை சமஸ்கிருதத்தில் கொண்டிருக்கும் மந்திரத்தை வேறு எந்த மொழியிலும் மொழி பெயர்த்தல் முடியாது, கூடாது. அப்படியே செய்தாலும் அது உரிய பலனைத் தராது என்பது அனுபவ மகான்களது வாக்கு.

சாதாரண மனிதர்களுக்கு ஓம் ஹ்ரீம் போன்ற சக்தி வாய்ந்த சொற்கள் பொருளற்ற வெறும் சொற்களாகத் தோன்றினாலும், அதன் சக்தி மூலம் நாம் உபாசிக்கும் தெய்வம் நமது ஜபத்திற்குப் பயன் அளிப்பது நிச்சயம்.

தியானம் முடியாதவர்கள் ஜபமும், ஜபத்தில் மனதைச் செலுத்த முடியாதவர்கள் பூஜை சடங்குகளிலும் ஈடுபட்டு இறைவழிபாடு செய்யலாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

இருப்பினும் நாமும் தினமும் வழிபாட்டின்போது சிறிதளவு தன்னும் ஜபம் செய்ய முற்படுவோமா? முயன்றால் எதுதான் முடியாது?

**ஓங்குக ஒப்பற்ற சேவை**

ஆற்றோரம் வீற்றிருக்கும் ஆறுமுகன் ஆச்சிரமம்
நேற்றிராவில் நானிங்கு நிர்க்கதியாய் வந்தபோது
தேற்றி உணவுதந்த தேராளன் சுவாமியெம்
ஊற்றான மோகனதாஸ் வாழி.

~மா. கணநாதன்~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத் தொண்டாற்றி உயர்வடைந்தவர்களின் வரிசையில் திலகவதியாரும் திருநாவுக்கரசரும்

– *திரு மூ. சிவலிங்கம்* அவர்கள் –

சைவமும் தமிழும் சகல சீர்வளங்களும் மேலோங்கிய திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூரில் வாழ்ந்த புகழனார் மாதினியார் தம்பதிகள் தவப்பேறு பெற்றவர்கள். இவர்களின் இனிய இல்லற வாழ்வின் தவப் பயனாக அவதரித்தவர்கள் திலகவதியார் மருணீக்கியார் என்னும் இறையருட் செல்வர்கள்.

பெற்றோர் இருவரும் தம் பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே அரவணைத்து ஊட்டி வளர்த்ததுடன் சைவநெறி மூலம் சமய பக்தி, ஆலய தரிசனம், ஆலயத் தொண்டு, சைவப் பண்பாடு மற்றும் சமூகப் பற்றையும் நன்கு புகட்டினர். இவர்கள் தமிழ்க் கல்வி கற்று அறச் சிந்தனைகளையும் நன்கு உணர்ந்தனர்.

திலகவதியார் 12 வயதானதும் பெற்றோர் தமது வேளான் குலத்துதித்த போர் வீரருக்கு திருமண நிச்சயார்த்தம் செய்தனர். பெற்றோர் இருவரும் குறுகிய காலத்தில் இறைபதமடைந்தனர். பிள்ளைகள் இருவரும் உறவினரின் அரவணைப்பில் வாழ்ந்தனர். சில மாதங்களில், திருமணமாகாதபோதும் நிச்சயதார்த்தம் செய்திருந்த கலிப்பகையார் போர் முனையில் மாண்டார். கலிப்பகையார் இறந்ததையறிந்த திலகவதியார் தாமும் உயிர்விட முன்வந்தார். தம்பியின் வேண்டுதலும் எதிர் கால இறைபணியும் உந்தியதால் திலகவதியார் விதவைக் கோலத்துடன் சிவநெறி போற்றும் தவநிலையில் இருந்தார். கல்வியுடன் எதிர்காலம் பற்றியும் மனித வாழ்வின் நிலையாமையையும் நோக்கிய மருணீக்கியார் சமய சமூக நோக்கில் தண்ணீர்ப்பந்தல் அமைத்தார். வெயில் கால நிழலுக்காக தெருவோரம் நிழல் மரங்களை நாட்டிச் சோலையாக்கினார். நீர் நிலைகளைத் தோண்டினார். நலிவுற்றவர்களின் தேவைகளை வழங்கினார்.

## சமய மாற்றம்

அக்காலத்தில் மெய்ச் சமயம் எது என அறியமுடியாத நிலையில் மருணீக்கியார் கொல்லாமை என்னும் தத்துவத்தைப் பேணும் சமண சமயத்தைத் தழுவினார். இவரின் கல்வி அறிவும் விவேகமும் மிகுந்ததால் சமண சமயத்தின் குருமுதல்வராக "தருமசேனர்" என்னும் பெயருடன் விளங்கினார். தருமசேனர் 40 வருடங்களுக்கு மேல் தமது சிறப்பினால் சமண சமயத்தை உயர்வடையச் செய்தார்.

## திலகவதியாரின் ஆலயப்பணி

சைவநெறியில் வாழ்ந்த திலகவதியார் பெற்றோர் கணவன் மூவரும் உயிர்நீத்தபின் தானும் உயிர்விட எண்ணினார். தம்பி மருணீக்கியாரின் வேண்டுதலால் அவரின் நன்மை கருதி இளம் விதவைத் துறவியாக வீட்டில் வாழ்ந்தவர். தமக்குதவியாக இருந்த மருணீக்கியார் சமண சமயத்தைத் தழுவிச் சென்றதால் தாமும் துறவியாக ஆலயத் தொண்டில் இணைந்தார். யாவரும் விலகியதால் இளம் விதவைத் துறவியாகத் தமது வீடு மற்றும் சகல சொத்துக்களையும் உறவினரையும்

*திறமை உள்ளவரின் முன்னேற்றத்தை யாராலும் தடுக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறந்தார். தாம் வழிபடும் திருவீரட்டானேசுரர் ஆலயத்தை நாடினார். இச் சிவாலய திரு மடத்தை வதிவிடமாக்கித் தவக்கோலம் பூண் டார். இதன் பேறாக இச் சிவாலயம் பிரகாசிக்க ஏதுவானது.

திலகவதியார் தமது நாளாந்தப் பணி யாக அதிகாலையில் சிவசிந்தனையுடன் துயிலெழுந்து காலைக் கடன்களை நிறைவு செய்வார். ஆலயஞ் சென்று திருவிளக்கேற்றி வழிபடுவார். இறைபுகழ் பாடியவண்ணம் ஆல யத்தை நன்கு கூட்டிச் சுத்தஞ் செய்வார். பசுஞ்சாணி கொண்டு ஆலயத்தை மெழுகிய தும் புனித நீராடி ஆசாரசீலமாக ஆலய நந்தவனஞ் செல்வார். பல்லினப் பூக்களையும் கொய்து அதனை மாலைகளாக்கி இறை வனுக்குச் சூடுவதற்காக வழங்குவார். பின்னர் தூய சிந்தனையுடன் இறைவனைப் புகழ்ந்து பாடி நன்கு வழிபடுவார்.

திலகவதியாரின் புனிதத் தொண்டினால் வீரட்டானத்து ஈசனின் ஆலயம் புனிதமாகத் துலங்கியது. அவரின் தொண்டினைப் பாராட் டிய ஆலய பரிபாலகர் பூசகர் ஆகியோர் பூசை யின்போது நிவேதனஞ் செய்யும் திருவமு தைத் திலகவதியாருக்கு மூன்று வேளையும் வழங்கினர். இவ்வாறு திலகவதியார் நித்திய பணியாக நாற்பது வருடங்களுக்கு மேல் சிறப்பாகத் தொண்டாற்றி முதுமையடைந்தார். இவர் தமது பணியால் ஆலயம் சிறப்படை வது போல மருணீக்கியாரும் உடனிருந்தால் ஆலயம் மேலும் சிறப்படையும் என எண்ணி னார்.

இறையருளின் உந்துதலால் ஒரு நாள் மாலை திலகவதியார் மனமுருக வீரட் டானேசுரரை வணங்கும்போது தமது தம்பி யும் சைவ சமயத்திலிருந்தால் சைவம் வளருமே என வேண்டினார். அன்றிரவு "உன் தம்பி முற்பிறவியில் முனிவராக இருந்தபோது செய்த தவறுதலுக்காக இப்பிறவியில் சமண சமயத்தில் ஆழ்ந்தான். அவனுக்குச் சூலை நோய் கொடுத்து ஆட்கொள்வோம் என இறை வன் திலகவதியாரின் கனவிற் தெரிவித்தார். இறைவன் கனவில் தெரிவித்த பேரருளை வியந்த திலகவதியார் தமது வேண்டுதலுக்கு இரங்கியதையிட்டு அகமகிழ்ந்தார்.

அதே சமயம் சமணரான தருமசேன ருக்குக் கொடிய சூலைநோய் தாக்கியது. இதனால் அவர் மிகவும் வருந்தினார். அச் சமயம் சமணமதக் குருமார் தமது திறமைக் கேற்ப பல சிகிச்சைகளையும் கையாண்டனர். பயனேதுமின்றிச் சூலைநோய் மேலும் கூடி யது. சமணர்கள் தம்மாலாகாதெனக் கூறி அவ்விடம் விட்டகன்றனர். செய்வதறியாது வருந்தியவர் தமது சகோதரியை நாடினார்.

## திலகவதியார் அணுகுமுறை

ஏற்கெனவே தமது வேண்டுதலுக் காகத் தம்பிக்குச் சூலைநோயை ஏற்படுத்திய வீரட்டானேசுரரை எண்ணித் திருவைந் தெழுத்தை ஓதியபடி திருநீற்றினால் நோய் கண்ட இடங்களில் பூசினார். இதனால் அவரின் நோயின் வெம்மை சற்றுக் குறைந்தது. தம்பியை வீரட்டானேசுரர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று இறைவனை வணங்கச் செய்தார். தமது சகோதரியின் தூண்டுதலால் தனது நோயைக் குணமாக்குமாறு வீரட்டானே சுரரிடம் வீழ்ந்து வணங்கியவர்.

**"கூற்றாயினவாறு விலக்ககிலீர்**
**கொடுமை பல செய்தன நானறியேன்**
**ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்**
**பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றாது என் வயிற்றின் அகம்படியே**
**குடரோடு துடக்கி முடக்கியிட**
**ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில**
**வீரட்டானத்துறை அம்மானே"**

*விலை கொடுத்தாலும் பெறமுடியாத ஒரே பொருள் அனுபவம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடினார். இவர் பாடியதும் இவரை வருத்திய சூலைநோய் அகன்றது. மேலும் இறைவனை வேண்டிப் பலமுறை வணங்கினார். அச்சமயம் "நீ மொழிக்கு தித் திக்கும் தீந்தமிழில் பதிகம் பாடினாய் அத னால் "நாவுக்கரசு" என்ற பெயர் உலகெங்கும் நயப்புற வழங்குவதாக" என்று அசரீரி வாக்கு உரைத்தது. அன்று முதல் இவர் திருநாவுக் கரசர் என்னும் திருநாமத்துடன் சைவாலயங் கள் தோறும் இறைவனை வணங்கிப் பாடியும் ஆலய வளாகங்களில் புல் பூண்டுகளை அகற்ற உளவாரத்தொண்டு செய்தும் இன்புற்றார்.

## திருநாவுக்கரசரின் பாடற் சிறப்பு

இறைவனாற் தடுத்தாட்கொள்ளப்பட்ட திருநாவுக்கரசர் இறைவனின் உணர்வினால் சைவ உலகின் வழிபாட்டிற்காக முதன் முதல் பாடிய பதிகங்கள் உட்படப் பல்லாயி ரம் பாடல்களைப் பாடினார். அவற்றுட் பல பாடல்கள் சிதைவடைந்தபோதும் தற்போது படிக்கக்கூடிய 3045 பாடல்களை நம்பியாண் டார் நம்பி திருமுறைகளாக வகுக்கும்போது இவரின் பாடல்களை நாலாம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக வகுத்துள்ளார். பன் னிரு திருமுறைகளில் 1,2,3 திருமுறைகள் திருஞானசம்பந்தரினால் பாடப்பெற்று திருக் கடைக்காப்பு என அழைக்கப்படுகிறது. சுந்தரர் பாடிய 7ஆம் திருமுறைப் பாடல்கள் திருப் பாட்டு என அழைக்கப்படுகின்றது. மேற்கூறிய ஏழு திருமுறைகளும் தேவாரம் எனவும் பாடி யவர்கள் தேவார முதலிகள் எனவும் அழைக் கப்படுகிறனர். இவற்றுள் திருநாவுக்கரசர் பாடிய 4,5,6 ஆம் திருமுறைப் பாடல்களே "தேவாரம்" என்னும் சிறப்புடன் அமைந்து உள்ளன.

திருநாவுக்கரசு சுவாமிகள் தமது 81 வயது மட்டும் பல்லாயிரம் பாடல்கள் பாடி இறைவனை மகிழ்வித்தார். இவர் பாடிய பாடல்களில் இவரின் சிறப்பான தொண்டின் சில பாடல்களின் மகிமையையும் தொடர்பை யும் அறிவோம்.

திருநாவுக்கரசர் சைவ சமயத்தைத் தழுவியதால் தமது சமணம் அழிந்துவிடுமென எண்ணிய சமணத் துறவிகள் தமது பல்லவ மன்னனிடம் முறையிட்டனர். தருமசேனர் தமது தலைவராக இருந்து கற்ற மந்திர தந்திரங்களி னால் சமண மதத்தைவிட்டுச் சென்று சைவ சமயத்தை வளர்க்கிறார். அதனால் அவரை அழைத்துத் தண்டிக்குமாறு தெரிவித்தனர். பல்லவ மன்னன் தமது மந்திரிமாரை அனுப் பித் திருநாவுக்கரசரை அழைத்து வரப் பணித் தான்.

மந்திரிமார் திருநாவுக்கரசரிடம் சென்று அரசனின் கட்டளைப்படி வருமாறு அழைத் தனர். அவர் "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்..." என்னும் தொடரில் பாடி அரசனிடஞ் செல்ல மறுத்தார். மந்திரிமார் அவரைப் பணிந்து கேட்டதால் இனிவரும் வினைகளுக்கெல்லாம் இறைவன் இருக்கி றான் எனக் கூறிச் சென்றார்.

## திருநாவுக்கரசரின் நீற்றறைத் தண்டனை

திருநாவுக்கரசர் பல்லவ மன்னனின் சபையை அடைந்தார். அச்சமயம் பல்லவ மன்னன் சமணத் துறவிகளை நோக்கி இவ னுக்கு என்ன தண்டனை செய்யலாமெனக் கேட்டான். துறவிகள் இவனை நீற்றறையில் (சுண்ணாம்புக் காளவாய்) போடும்படி கூறினர். உடனே சினங்கொண்ட கொடுங்கோலன் விசாரணை ஏதுமின்றித் துறவிகளின் சொற் படியே தமது காவலாளிகள் மூலம் நீற்றறை யில் திருநாவுக்கரசரை அடைத்து தகுந்த பாதுகாப்புகள் பலவும் செய்தனர்.

*மனம்விட்டுப் பேசுவதைவிட சிறந்த அறிவு வேறு இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீற்றறையில் அடைக்கப்பட்ட நாவுக்கரசர் தில்லையம்பலத்தில் திருநடனம் புரியும் பெருமானின் திருவடி நிழலைத் தம் தலைமேல் வைத்து ஈசனடியார்க்கு ஈண்டு வரும் துயருண்டோ? என்று சிந்தித்தவாறு அவ்விடத்தில் தொழுதவண்ணம் வீற்றிருந்தார். இறையருளின் பேறாக வெம்மைமிக்க நீற்றறை இளவேனிற் காலத் தென்றலாக வீசியது. இதன் குளிர்ச்சி கழுநீர் மலர்ப் பொய்கையாகவும் மொய்க்கும் வண்டின் ஓசை யாழ் மீட்கும் இனிய ஒலியாகவும் தோன்றி இறைவனின் திருவடி நிழலாகக் குளிர்ந்தது. இதனையே சிந்தித்த திருநாவுக்கரசர் இறைவனை மனமுருக வேண்டிப் பாடிய பாடல் இதுவாகும்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்னும் முதல் பாடலாகக் கொண்ட பதிகத்தைப் பாடினார். இறைவனின் திருவடி நிழலையே தலைமேற்கொண்டு மெய்யுருகப் பாடியவேளை இறைவன் அருள் பொங்க நீற்றறை தன் செயலிழந்து பொய்கையாகக் காட்சி தந்தது. குறிப்பிட்ட காலம் திருநாவுக்கரசர் சிவ சிந்தனையிலிருந்ததால் எழுகோலம் பூண்ட சைவசமயத்தின் மகத்துவத்தை இறைவன் பாரெல்லாம் வைத்த திருவிளையாடலேயாகும்.

ஏழு நாட்களின் பின் மன்னன் சமணர்களை அழைத்து நீற்றறையைத் திறக்கச் செய்தான். அச்சமயம் சிவானந்தப் பொலிவுடன் நாவுக்கரசர் எவ்வித உடல் மாறுபாடுமின்றி உவகையுடன் காணப்பட்டமைகண்டு அனைவரும் வியந்தனர். அச்சமயம் கொடிய சமணர்கள் மன்னனை நோக்கி இவன் முன்னர் எங்களின் சமய மந்திரங்களைக் கற்றவன். அந்த மந்திர சக்தியால் இதனைச் சாதித்தான். இவனை உயிருடன் விடக்கூடாது என்று கூறி இவனுக்கு நஞ்சூட்டிக் கொல்ல வேண்டுமென்றனர்.

### நஞ்சு கலந்த பாற்சோறு

பகுத்தறிவற்ற கொடுங்கோலன் இவனுக்கு நஞ்சு கலந்த பாற்சோற்றைக் கொடுக்குமாறு கூறினான். எப்பழிக்கும் அஞ்சாத அவர்கள் அரசகட்டளைப்படி நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்ண வைத்தனர். நாவுக்கரசர் "நஞ்சும் அமுதாகும் எங்கள் நாதன் அடியார்க்கே" என்று கூறி நஞ்சுணவை உண்டார். பாற்கடலில் ஆலகால விஷத்தையுண்ட சிவபெருமானுக்கு அமுதமானதுபோல நாவுக்கரசருக்கும் நஞ்சுணவு இறைவனருளால் தீங்கெதனையும் விளைவிக்க வில்லை. இதனால் இறையுணர்வு மேலோங்கிய திருநாவுக்கரசர்

"துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத்தோதி நாளும் அரனடிக்கு அன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோறு ஆக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமுதாக்கு வித்தார் நனிபள்ளி அடிகளாரே"

என்ற முதற் பாடலுடன் பதிகத்தையும் பாடினார்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலநாயனார் வரலாறு

– திருமதி சந்திரலீலா நாகராஜா அவர்கள் –

சிவபூமி எனப் போற்றப்படும் நம் நாட்டின் தொன்மைவாய்ந்த சமயமாகத் திகழ்வது சைவசமயமாகும். மக்கள் உள்ளத்தில் தெய்வம் உண்டு என நல்கி அன்பு நெறியில் ஒழுகப் பணித்து அறிவுநெறியை வளர்ப்பன சைவ சமய அருளாளர்கள் அருளிய பன்னிரு திருமுறைகளாகும். திருமுறைப் பனுவலாகிய அருள் நூல்களுள் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது தமிழ் மூவாயிரமாகிய திருமந்திரம் ஆகும். திருமந்திர மாலை என்னும் இத் திருமுறை சைவ சித்தாந்த சாத்திர நூலாகவும், இறைவன் திருவருளைப் போற்றிப் பரவும் தோத்திர நூலாகவும் தனிச்சிறப்புடையது. வேதநெறியாகிய உலகியல் ஒழுக்கத்தையும், சிவாகம உண்மைகளையும் தமிழால் விளக்குகிறது.

திருமந்திர மாலையாகிய இப்பனுவலை அருளியவர் இறையருளால் எண் வகைச் சித்திகளும் பெற்று, எல்லா உயிரிலும் அருளுடையவராய் மூவாயிரம் ஆண்டு சிவயோக நிலையிலிருந்து "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனும் குறிக்கோளுடன் வழங்கியவர் திருமூலநாயனார். இவரை, "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்" என நம்பியாரூரராகிய சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் போற்றியுள்ளார். அருண்மொழித் தேவராகிய சேக்கிழாரடிகள் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் இவரது வரலாற்றை இருபத்தெட்டு பாடல்களாக விரித்துள்ளார்.

திருக்கையிலாயத்தில் காவல் பூண்டவர் திருநந்திதேவர். அவரது திருவருள் பெற்ற மாணாக்கர் திருமூலர். தன்னுடன் எட்டுப்பேர் அவ்வாறு உள்ளனர் என்கிறார்.

**"நந்தி அருள் பெற்ற நாதரை நாடின்**
**நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி**
**மன்று தொழுத பதஞ்சலி, வியாக்கிரமர்**
**என்றிவர் என்னோடு எண்மருமாமே"**

அகத்திய முனிவருடன் தங்குவதற்கு பொதிகை மலையை அடைய கைலாயத்தினின்று தென்திசை வந்தார். வரும் வழியில் பல தலங்களை தரிசித்து காஞ்சியில் திருவேகம்பத்து இறைவனைப் போற்றினார். பின் சிவன் திருக்கூத்தாடும் தில்லையில் தரிசனம் செய்து தங்கினார். அங்கிருந்து புறப்பட்டு திருவாவடுதுறை கோயிலை வலம் வந்து வழிபட்டார். பின் செல்லும் வழியில் காவிரிக் கரையிலுள்ள சோலையில் மேயும் பசுக்கள் கதறியழுவதைக் கண்டார். அந்தணர்கள் வாழும் சாத்தனூரில் ஆநிரை மேய்க்கும் குடியிற் பிறந்த ஆயனாகிய மூலன் பசு நிரையை மேய்த்தவன். அவன் வினைகள் தீர்ந்து கூற்றுவன் அவனது உயிர் கவர நிலத்தில் வீழ்ந்து வெற்றுடலாய்க் கிடந்தான். பசுக்கள் உடலைச் சுற்றி மோப்பனவும், கதறுவதுமாக வருந்தின.

ஆநிரைகளின் துயரத்தை நீக்குவதற்கு ஆயன் உயிர்பெற்றெழல் வேண்டும். அது சாத்தியமில்லை என்பதால் தனது உடலை பாதுகாப்பாக மறைத்து வைத்துவிட்டு பர காயப் பிரவேசம் (கூடுவிட்டு கூடு பாய்தல்) எனும் முறையில் தனது உயிரை மூலனது உடம்பினுள் செலுத்தி திருமூலர் எனும் நாமத்துடன் எழுந்தார். மூலனுடலில் சென்றதால் திருமூலரால் பசுக்கள் துயர் நீங்கி அன்பினால் நக்கி மோந்து களிப்புடன் துள்ளியோடி

*தன்னம்பிக்கையே உலகில் மிகச் சிறந்த ஆயுதம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லை மேய்ந்தன. வயிரார மேய்ந்தபின் காவிரித்துறையில் நீர் பருகிக் கரையேறின. திருமூலர் பசுக்களை நிழலில் இளைப்பாற் றினார்.

மாலைப்பொழுதில் பசுக்கள் கன்று களை நினைத்து சாத்தனூரை அடைந்தன. தொடர்ந்து சென்றவர் பசுக்களை வீடுகளில் சேர்த்து தனித்து நின்றார். ஆயன் மனைவி கணவன் வீடு வரவில்லை என பயந்து தேடிச் செல்கையில் திருமூலர் நின்ற இடத்திற்கு வந்தாள். கணவனின் உடம்பில் தோன்றிய உணர்வு மாற்றத்தைக் கண்டு தளர்ச்சியின்றி வீட்டுக்கு அழைத்துச் செல்லும்பொருட்டு உடலைத் தொட நெருங்கினாள். திருமூலர் தம் மைத் தீண்டாதபடி விலகினார். தனியனாகி அஞ்சிக் கலங்கினாள். அன்புடைய மனை வியை வெறுப்பதால் துன்பம் செய்துவிட்டீர் எனப் புலம்பினாள். தவச்செல்வரான திரு மூலர் அவளைப் பார்த்து "நீ எண்ணியபடி உன்னுடன் எத்தகைய உறவுமில்லை" எனக் கூறி ஊரின்கண் பொது மடத்தில் சிவயோகத் தில் அமர்ந்தார்.

மூலன் மனைவி தன் கணவனின் வேறுபாட்டால் மனம் கலங்கி இரவு உறங் காது துயருற்றாள். பொழுது விடிந்ததும் ஊரில் உள்ள பெரியோரை அணுகி கணவன் நிலையை உரைத்தாள். பெரியோர் திரு மூலரை நோக்கினர். சிவயோகத்தில் தெளிவு பெற்று சீவன் முத்தரைப்போன்று முற்றுணர் வுடைய முனிவராக உள்ளார். உன்னுடன் குடும்ப வாழ்வில் ஈடுபடார் என்றுரைத்தனர் ஊரின் பெரியவர்கள். மனைவி அளவற்ற துயரத்தால் விழ அவளைத் தேற்றி வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

சாத்தனூரில் சிவயோகத்தில் அமர்ந் திருந்த திருமூலர் யோகம் கலைந்து பசுக்கள் வந்த வழியே சென்று உடம்பை மறைத்து வைத்த இடத்தில் தேடிக் காணாமல் மெய் யுணர்வுடைய சிந்தையில் ஆராய்ந்து தெளிந் தார். சிவன் உயிர்கள்பால் வைத்த கருணை யினால் அருளிய சிவாகமங்களைத் திருமூல ரின் வாக்கினால் தமிழில் எடுத்து உரைக்கக் கருதிய இறைவன் தன் உடலை மறைத்தார் எனத் தெளியவுணர்ந்தார். சாத்தனூரிலிருந்து தன்னைத் தொடர்ந்த ஆயர் குலத்தவருக்கும் தனக்கும் எவ்விதத் தொடர்புமில்லை எனத் தெளிய வைத்தார். அவ்விடத்தை விட்டு நீங்கி திருவாவடுதுறை கோயிலை அடைந்து அம்மையப்பரை வணங்கி மேற்றிசையிலுள்ள அரசமரத்தின் கீழ் தேவாசனத்தில் அமர்ந்து நெஞ்சத் தாமரையில் வீற்றிருந்தருளும் செம் பொருளாம் சிவப்பரம்பொருளுடன் உணர் வினால் ஒன்றியிருந்தார்.

இறைவனால் மறைக்கப்பட்ட பழைய உடம்பு பயன் தராது.

**"நந்தியருளாலே நாதனாம் பேர்பெற்றோம்**
**நந்தியருளாலே மூலனை நாடினோம்**
**நந்திஅருளாவது என்செயும் நாட்டினில்**
**நந்தி வழிகாட்ட நானிருந்தேனே"**

சிவயோக நிலையில் அமர்ந்தவர் பிறவித் துயர் நீங்கி உலோகத்தார் உய்யும் பொருட்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை நெறியாக ஞான மணம் பரப்பும் திருமந்திரமாலையாகிய செந்தமிழ் பனுவலை ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவா யிரம் பாடல்களை யாத்தார்.

அவரது முதலாவது பாடல் வருமாறு:

**"ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்**
**நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து**
**வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழு உம்பர்ச்**
**சென்றனன் தானிருந்தான் உணர்ந்தெட்டே"**

திருமூலர் அருளிய நூல்கள் மூன்று என்பர். அதற்கு ஏதுவாக

*எதிர்ப்பு இல்லையென்றால் வாழ்வில் ஏற்றமே இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூலனுரை செய்த மூவாயிரந் தமிழ்
மூலனுரை செய்த முந்நூறு மந்திரம்
மூலனுரை செய்த முப்பது உபதேசம்
மூலனுரை செய்த மூன்றும் ஒன்றாமே"

எனினும் அவர் அருளியது திருமந்திரம் ஒன்றேயாகும். மூலனுடலிற் புக்க சிவயோகியார் திருவாவடுதுறைத் திருக்கோயிலையடைந்து சிவபோதியாகிய அரச மரத்தின் கீழ் பல்லாண்டுகள் இறைவனை ஞானத்தால் தொழுது சிவயோகத்தில் அமர்ந்திருந்தார்.

"சேர்ந்திருந்தேன் சிவமங்கை தன் பங்கனைச்
சேர்ந்திருந்தேன் சிவனாவடு தண்டுறை
சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலிற்
சேர்ந்திருந்தேன் சிவன் நாமங்கள் ஓதியே"

இறைவன் தன் பழைய உடலை மறைத்து ஆயனுடலிற் புகச்செய்தருளிய படைப்பு தொழில் அவரது அருளை தமிழ் பாக்களால் புனைந்து உய்யும் பொருட்டேயாகும்.

"பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

திருமந்திரம் அருளிய காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதே. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் நம்பிரான் திருமூலர் அடியார்க்கும் அடியேன் எனப் போற்றியிருப்பதாலும், சம்பந்தர், நாவுக்கரசர் பாடிய திருப்பதிகங்களில் திருமந்திரப் பாடல்களின் சொற்றொடர்களும் பொருள்களும் எடுத்தாளப்பட்டிருப்பதாலும் இவரது காலம் ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகும்.

தனது கடைசிப் பாடலான "வாழ்கவே வாழ்க என் நந்தி திருவடி" இல் குருவை பல இடங்களில் நினைவு கூர்ந்து சிவன் திருவடியன்றி பிறிதொன்றையும் நினையாது வாழ்த்துக் கூறினார்.

"வாழ்கவே வாழ்க என் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலம் அறுத்தான் பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத்தவன் தாள்
வாழ்கவே வாழ்க மலம் இலான் பாதமே"

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற அவரது திருவுள்ளத்தை நினைந்து அவரது வழிகாட்டலைப் பின்பற்றி நடைமுறைப்படுத்துவது எமது கடமையாகும்.

---

கடவுள் ஆனந்தமயமானவர். சச்சிதானந்த வடிவம்! நிரந்தரமான ஆனந்தம். எந்த வடிவமும் எடுக்கக்கூடியவர். இப்படி அப்படி என யாரும் நிர்ணயித்துக்கூற இயலாதவர். ஆகையால் தெய்வத்தை நாம் விடாது சிந்திக்க வேண்டும். ஆனந்திக்க வேண்டும். நிர்மலமான இதயத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதன்மூலம்தான் தெய்வத்துவத்தை அனுபவிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் உட்பொருளும் நவீன உட்பிரவேசமும்

(தொடர்ச்சி...

– *செல்வி ச. சரணியா* அவர்கள் –

"அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை கேடு"

மேற்கண்ட தெய்வப்புலவரின் வரிகள் விளக்கும் மேலான நன்மை பயக்கும் அறமானது ஆலயங்களில் எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றது எனும்போது அங்கே அறக்காவலர்கள் முதல் இடம் வகிக்கின்றார்கள். இவர்களோடு ஆலயங்களிலே நடாத்துகின்ற அறநெறிப் பாடசாலைகள், அன்னதான மடங்கள், இலவச சஞ்சிகை வெளியீடு, விவசாய நிலங்கள் வழங்குதல், கல்விக்கான சிறு தொகையை அர்ப்பணித்தல், விடுதி அமைத்து இலவசமாக நடாத்துதல் இவ்வாறு பல வழிகளில் ஆலயங்கள் அறத்தை வளர்த்து வருகின்றன.

மேலும் அனர்த்தங்களினால் மற்றும் வறுமையால் வாடும் மக்களுக்கு ஆலயங்களினால் பெறும் நிவாரணங்கள் மக்களிடத்தே அறத்தைக் காட்டி நிற்கின்றது. ஆலயம் சமுதாய மையமாகத் திகழ்கின்றது. அதிலும் அறம் போதிக்கும் புனித இடமாக விளங்குகின்றது. ஆகவே ஆலய கட்டுமானங்களில் அநாவசியச் செலவினைக் குறைத்து அல்லது முற்றிலுமாக நிறுத்தி மக்களுடைய வறுமை போக்கி எம்மதத்தின் உண்மையான இலக்கின் வழி செல்வோம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

என்ற குறளடியார் வாக்கிற்கிணங்க அக்கால மக்கள் தமது வாழ்வை சீராக வாழ்ந்தார்கள். இன்று அறம் ஒடுங்கி அதன்மேல் மேடைபோட்டு மறம் நின்று ஆடுகின்றது. இதற்கு நம் முன்னோர் வழி வந்த அறத்தை இழந்து நிற்கின்றோம் என்பதே காரணம். இதை உணர்ந்து இழந்த அறத்தை முதலில் ஆலயங்களின் ஊடாக மீட்டெடுப்போம். இவ்வாறு மீட்டெடுக்கும்போது இந்து ஆலயங்கள் வழியாகப் பெறும் அறத்தினை எமது மனங்களில் விதைத்து; துளிர்த்து; விருட்சமாக மாறும் என்பதில் ஐயப்பாடு இல்லை.

மேலும் சித்தத்தினை சிவன்பால் வைத்து இறைவனின் ஆணையில் ஈடுபடுவோரான சிவாச்சாரியாரின் தகைமைகள், பண்புகள், ஆளுமை மற்றும் ஒழுக்கமும் ஆலயத்தில் இன்றியமையாதது ஆகும். இதனை ஈரடியில் குறளடியார்

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்.

என்று உயிர்க்கு நன்மை செய்பவராக அன்பு காட்டுபவர்களாக சிவாச்சாரியார்கள் விளங்குவதாகக் கூறியுள்ளார். இவர்களுடைய ஒழுக்கம் தொடர்பான கருத்தாடல்கள் பல இலக்கியங்களில் விளக்கப்பட்டுள்ளது. இவற்றுள் வேதம் ஓதுதல், வேள்வி செய்தல், வேள்வி செய்வித்தல், தானம் கொடுத்தல் ஆகிய கடமைகளையும்; ஒழுகுபவர் சிவனுக்குச் சமனாக இருத்தல் வேண்டும். இவ்வாறான சிவாச்சாரியார்களின் பண்புகள், கடமைகள், ஒழுக்கங்கள் என்று அணுஅணுவாக சைவசித்தாந்தம், வேதங்கள், சாஸ்திர தோத்திர நூல்கள் துலக்கி உள்ளது.

*ஆயிரம் பேரிடம் யோசனை கேள். ஆனால் முடிவை நீ மட்டும் எடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாச்சாரியார்கள் இலட்சணங்கள் எனும்போது குடுமியினை சௌளத்தின் பின் சீவி முடிந்தவராக மீசை தாடியற்றவராகவும் இல்வாழ்வு நன்கு வாழ்பவர்களாகவும் இருத்தல் ஆச்சாரம் ஆகும். இன்றைய காலகட்டங்களில் நாம் காணும் இத்தகைய சிவாச்சாரியார்கள் குறைவே. இளம் சிவாச்சாரியார்கள் என்ற வகையில் தெய்வீக பயபக்தியோடு கடமையாற்று பவர்கள் அருகியே செல்கின்றனர் என்பது எமது அனுபவத்தில் கண்ட காட்சிகள் பல சான்றாக உள்ளன.

மேலும்,

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

என்று தெய்வப்புலவர் கூறவருவது என்னவென்றால் வேதத்தை மறந்தாலும் ஓதலாம். ஆனால் அவர்கள் ஒழுக்கம் கெட்டால் ஈடுசெய்ய முடியாது என்று சிவாச்சாரியர்களின் ஒழுக்கத்தை வலியுறுத்துகின்றார். ஆனால் இன்று இத்தகைய இலட்சணங்களையும், ஆன்மீக தெளிவு, பக்தி உணர்வு, சமயப்பற்று என்பன அனேக சிவாச்சாரியார்களிடத்தே இல்லாதொழிந்து போகின்றது. இது நான் மட்டுமல்ல சமயத்தையும் சமய விழுமியங்களையும் கட்டியெழுப்ப எண்ணும் ஒவ்வொருவரும் கண்ட துன்பமாகும்.

மேலும் ஆலய அனுஷ்டானங்களை கருமணிகளாய் பேணி பாதுகாக்கவும் அனைத்து உட்பொருட்களின் தத்துவார்த்த கருத்தையும் புரிந்து ஒழுக்கசீர் நடத்தைகளையும் கொண்டு பக்தர்களாய் பணிய நாம் மறுத்து நிற்கின்றோம். பக்தர்களே! எம்மோடான ஆலய அனுட்டான கடமை மற்றும் ஒழுக்கங்களை அடுத்த கட்டுரையில் ஆராய்வோம். (முற்றும்)

## இது எவ்வளவு?

தன் வகுப்பறையில் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்திக்கொண்டிருந்த ஒரு மாணவனைப் பார்த்து கரும்பலகையில் "1000" என்று எழுதிவிட்டு, அவனது கணித ஆசிரியர், "இது எவ்வளவு" என்று கேட்டார். நம்பிக்கையுடன் இருந்தாலும் கேள்வியின் எளிமையைக் கண்டு சற்று அவமானமாக உணர்ந்து, "ஓராயிரம்" என்று அவன் பதிலளித்தான்.

இப்போது ஆசிரியர் கூடுதலாக ஒரு பூஜ்ஜியத்தை அந்த எண்ணின் வலப்பக்கம் "10000" என எழுதிவிட்டு, "அது எவ்வளவு" என்று அவனிடம் மீண்டும் கேட்டார்.

"பத்தாயிரம்" என்று உடனடியாகப் பதில் வந்தது.

இப்போது இன்னொரு பூஜ்ஜியத்தை அந்த எண்ணின் இடப்பக்கம் போட்டு 010000 என்று எழுதிவிட்டு, "அது எவ்வளவு" என்று கேட்டார்.

"அதே பத்தாயிரம்" என்று அவன் பதில் சொன்னான்.

ஆசிரியர் அவனைப் பார்த்து கண் சிமிட்டிப் புன்னகைத்தவாறே, "ஒரு முக்கியத்துவமற்ற எண் ஒரு முக்கியம் வாய்ந்த எண்ணை பின் தொடர்ந்து செல்லும்போது, அதன் மதிப்பு கூடுகிறது. அதே எண் அந்த முக்கியத்துவம் வாய்ந்த எண்ணுக்கு முன்னால் செல்ல முயற்சிக்கும்போது, அதற்கு மதிப்பேதும் இல்லை. அது போன்றதுதான் ஆசிரியருக்கும் மாணவனுக்கும் இடையே உள்ள உறவும். ஒரு மாணவன் தன் ஆசிரியரைப் பின் தொடர்ந்து சென்றால், அவனது மதிப்பு கூடுகிறது. அதுவே தலைகீழாக அமைந்தால்? பதில் உனக்கே தெரியும்" என்று முடித்தார்.

*தேடல்கள் இல்லா வாழ்க்கையும் இல்லை. தேவைகள் இல்லாத நாட்களும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமான் புகழ் பாடுவோம்

– *திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்* அவர்கள் –

இறைவனை எவ்வளவு பக்தியுடன் வழிபடுகிறோமோ அவ்வளவிற்கு அவனருள் எமக்குக் கிட்டும். நாளாந்தம் வழிபாடாற்றினாலும் அதனை மேலும் அதிகரிப்பதற்காகவே விசேடமாக இறைவனை வணங்கவேண்டிய தினங்கள் அல்லது காலங்களை மதங்கள் ஏற்படுத்தியுள்ளன. அவை சிறப்பு நிறைந்த காலமாக அமைவது வழமை. அத்தகைய காலங்களில் இறைவனைப் பரவித் துதி செய்யும் வழக்கத்தைக் கைக்கொள்வது எமது ஆன்ம ஈடேற்றத்திற்கு வழி வகுக்கும்.

எமது சைவ சமயத்தில் இவ்வாறு அமைந்த விரதநாளே சிவராத்திரியாகும் சிவ ராத்திரி தினத்தில் பகற்பொழுது வழிபாட்டின் பின்னர் இரவு முழுவதும் விழித்திருந்து சிவ பிரானை வழிபாடு செய்வார்கள். நான்கு சாமமும் விசேட அபிசேகங்கள் பூசைகள் செய்தும் பஜனைகள் செய்தும் நாள் முழுவதும் இடையறாது சிவத்தியானத்திலேயே ஈடுபட்டிருப்பார்கள். அவ்வேளையில் வட மொழி மந்திரங்களையும் தமிழ்மொழியில் திருமுறைகளையும் ஓதி சிவபிரானைத் துதிப்பார்கள். இருவேறு மொழிகளில் அமைந்திருந்தாலும் இவை இறைவனின் பெருமைகளைக் கூறியும் ஆண்டவனின் திருவுருவை வருணித்தும் போற்றித் துதிப்பவையாகவே இருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. உணர்ச்சி மேலிடும்போது யார்மேல் அது ஏற்படுகின்றதோ அவரைப்பற்றி அடுக்கடுக்காக மனதில் தோன்றுவதையெல்லாம் கூறுவது மனித வழமை. ஒருவர்மீது கோபமேற்பட்டால் அவரைத் தூற்றக்கூடியதாக வாயில் பிறக்கும் சொற்களையெல்லாம் கொட்டித் தள்ளி விடுவோம். குழந்தையொன்றைக் கொஞ்சும் போது பாசமழையை சொற்களாய் பொழிவதும் எம் வழமைதானே. அதேபோன்றுதான் பக்தியின் உச்சத்தில் இறைவனையும் போற்றுகின்றோம். அவற்றைக் கூறியோ பாடியோ வணங்கும்போது மனம் சிவபிரானிடம் ஐக்கியப்படும். அவ்வாறு துதிக்கும் மந்திரங்களும் பாக்களும் ஒரே கருத்தைக் கொண்டிருப்பதையும் நாம் கவனிக்கக்கூடியதாகவுள்ளது. மொழி வேறானாலும் உணர்ச்சிப் பெருக்கு ஒரே வகையானதுதானே. அதனால் இவ்வாறான ஒற்றுமையைக் காணமுடிகிறதுபோலும். அத்தகைய சிலவற்றை வகை மாதிரிக்கு இங்கு பார்ப்போம்.

சிவபிரானைப் போற்றித் துதிக்கும் மந்திரங்களான பஞ்சாட்சர மந்திரங்களுள் ஒன்று வருமாறு.

**நாகேந்திரஹாராய த்ரிலோசனாய**
**பஸ்மாங்கதராய மகேச்வராய**
**நித்யாய சுத்தாய திகம்பராய தஸ்மை**
**நகாராய நம சிவாய.**

இதன் பொருள் "நாகங்களின் தலைவனை மாலையாகச் சூடியவரும் மூன்று கண்களை உடையவரும் திருநீறு அணிந்தவரும் ஈஸ்வரர்கள் அனைவருக்கும் தலைவரானவரும் நித்தியமானவரும் பரிசுத்தமானவரும் திசைகளை உடையாக அணிந்தவரும் நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திர உருவானவருமான அந்த சிவபிரானை வணங்குகின்றேன்" என்பதாகும்.

இவ்வாறு ஆண்டவனின் திருநாமங்களை அடுக்காகக் கூறி வணக்கம் கூறுவதை விட ஒவ்வொரு நாமமாகச் சொல்லிவணங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமும் இருக்கின்றது. நூற்றெட்டு ஆயிரத்தெட்டு என இறைநாமங்களை எண்ணிக் கணக்கிட்டுக் கூறி அர்ச்சிக்கும் வழமையும் உள்ளது. எம் நாட்டுக் கோவில்களில் இந்த முறை நடைமுறையிலிருக்கின்றது. உதாரணமாக

**ஓம் ஷிவாய நம**
**ஓம் மகேஷ்வராய நம**
**ஓம் சம்புவே நம**
**ஓம் பிநாகினே நம**
**ஓம் ஷஸி சேகராய நம**

எனத் தொடரும் நாமார்ச்சனையைக் கூறலாம்.

இதே போன்று தமிழிலுள்ள திருமுறைப் பாடல்களும் பக்திப்பாடல்களுங்கூட பெரும்பாலும் இறைநாமங்களைத் தொடராகச் சொல்ல சில ஒவ்வொரு நாமமாகக் கூறி போற்றுவதையும் காணலாம். திருவாசகத்தில் இதற்குச் சிறந்த உதாரணங்களைக் காட்டலாம். "நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என ஆரம்பிக்கும் சிவபுராணம் சிவபிரானின் பெருமைகளை ஒவ்வொன்றாகக் கூறி "வாழ்க" என்றும் "வெல்க" "போற்றி" எனவும் தொடர்ந்து துதித்து பின்னர் "உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா விமலா விடைப்பாகா" என அந்தப் போற்றுதல்கள் இல்லாது இறைவனது பெருமையை மட்டும் அடுக்காகத் தொடர்கிறது. இதே போன்ற கீர்த்தித் திருவகவல் திருவண்டப்பகுதி அப்பரடிகளின் போற்றித் திருத்தாண்டகம் முதலிய பல திருமுறைப் பாடல்களிலும் உதாரணங்கள் பலவற்றை எடுத்துக்காட்டவியலும்.

இரு மொழிகளிலும் இறைவனைத் தொழும்போது அவனது நாமங்களைச் சொல்வதிலும் ஒத்த தன்மையைக் காணமுடியும்.

**போற்றி போற்றி புயங்கப் பெருமான்**
**போற்றி போற்றி புராண காரண**
**போற்றி போற்றி சயசய போற்றி**

என போற்றித்திருவகவல் முடிவுபெறுகிறது. சிவபிரானின் பாம்புகள் அணிந்த தோற்றம் "புயங்கப்பெருமான்" என்று போற்றப்படுகிறது.

பொங்கரவா நின் பாதம் போற்றி என்று பணிகின்றார் நாவுக்கரசப்பெருமான். இவை "நாகேந்திரஹாராய" எனப் போற்றுவதை நினைவூட்டுகின்றன. ஞாயிறும் திங்களும் அக்கினியும் பரமசிவனின் மூன்று கண்களாகத் திகழ்வதாகக் கண்டு வழிபடுவர்கள் நாங்கள். திரிலோசனாய திரியம்பகம் என்றெல்லாம் மந்திரங்கள் எம்பெருமானைப் போற்றுகின்றன. தமிழிலும் இதேபோல முக்கண்ணன் துதிக்கப்படுகிறான். "முத்தனே முதல்வா முக்கணா முனிவா" என்று வரும் அருட்பத்து வரிகள் இங்கு நோக்கத்தக்கன. இதே அருட்பத்து "பால்கொள் வெண்ணீற்றாய்" என்றும் சிவபெருமானைப் பாடிப் பணிகிறது. அப்பர்பெருமான் "பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்" என திருப்பூவணத்துப் புனிதரைப் பரவுவதையும் மணிவாசகர் திருவண்டப்பகுதியில் எம்பிரானை "நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி" எனப் போற்றுவதையும் காணலாம். இவை பஸ்மாங்ககாராய என்ற பஞ்சாட்சர மந்திரத்தை ஒத்திருப்பது சுட்டிக்காட்டத் தகுந்ததாகும். மந்திர சக்தி கொண்ட திருநீற்றின் மகிமையை சம்பந்தப் பெருமான் திருநீற்றுப் பதிகத்திலும் பாடி உள்ளார்.

பரம்பொருளான பரமசிவன் தேவர்களுக்கெல்லாம் தலைவனாவார். தேவாதி தேவனான அவர் அதன் காரணமாக மகேஸ்வரன் என்று போற்றப்படுகிறார். நாவுக்கரசப் பெருமான் "வானோரேத்தும் பெம்மானை" என்றும் "தேவர்கள்தம் கோனை" எனவும் மாணிக்கவாசக சுவாமிகள் "வானோர்க்கரிய மருந்தே" என்றும் வழுத்திப் பாடியதும் இப்

*எதையும் எதிர்கொள்வேன் என்ற மனநிலை மட்டுமே நம்பிக்கையைக் கொடுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளிலேயேயாகும். அந்த முழுமுதற் பொருள் நித்தியமானது. பரிசுத்தமானது. இந்த அண்ட சராசரங்களாய் வியாபித்து நிற்கிறது. ஆதியும் அந்தமுமில்லாத சோதியாக நின்ற பிரணவப்பொருள் அது. எங்கும் நீக்கமற நிற்கும் அந்த வியாபகத்தின் ஆடையாக எது தோற்றந்தரும்? இந்த அண்ட சராசரமாய் நிற்கும் அதைச் சுற்றியிருக்கும் திக்குகள்தான் அதன் ஆடையாய்த் தோன்றும். ஆகவே அவன் திகம்பரன்- திக்குகளை ஆடையாகக் கொண்டவன் ஆவான். அதனாலே "மெய்யா விமலா" எனவும் "நித்தியனே" "நிமலனே" என்றும் பலவாறு வாழ்த்தி வணங்குகின்றனர். பஞ்சாட்சரம் ஆழ்ந்த தத்துவப் பொருள் கொண்டது. அதனை விளக்குவதோ விளங்குவதோ இலகு அல்ல. அதன் மகத்துவம் இயம்புதற் கரியது. கல்லிலே கட்டி கடலிலே போட்ட போது நாவுக்கரசர் நமச்சிவாயப் பதிகம் பாடி கரை சேர்ந்தார். பரம்பொருளும் பஞ்சாட்சரமும் ஒன்றே. "நமச்சிவாய வாழ்க" என்றே சிவபுராணம் தொடங்குகிறது. பஞ்சாட்சர மந்திரத்தையும் சிவபெருமானை வழிபடும் பாடல்களையும் மந்திரங்களையும் சிவராத்திரி போன்ற சிறப்பான காலங்களில் பக்தியுடன் பாடி நற்பேற்றினை பெறவேண்டும். அவமே பொழுதைப் போக்காது சிவசிந்தனையுடன் அவன் புகழ் பாடி வணங்குவோம்.

## நேரம் உங்கள் கையில்

இன்றைய நவீன உலகில் காலம் நாளுக்கு நாள் சுருங்கி, ஒரு வருடம் ஒரு மாதம் என்கிற அளவில் காலம் குறுகிவிட்டதாகத் தோன்றுகிறது. எம்மவர் நேரமில்லை என்று புலம்புகிறார்கள். ஆனால், கிடைக்கின்ற நேரத்தை சரியான முறையில் பயன்படுத்துவதில்லை. இழந்த நேரத்தை ஒரு நிமிடத்தையும் சரி, காலத்தையும் சரி எப்படி முயற்சித்தாலும், திரும்பப் பெறமுடியாது. ஆகவே, இதோ உங்களுக்கு சில வழிமுறைகள்.

முதலில் அனைவரும் காலையில் எழும்பும் பழக்கத்தை கடைப்பிடியுங்கள். காலையில் எழுந்தவுடன் இன்று செய்யவேண்டிய வேலைகளை அட்டவணைப்படுத்திக் கொள்ளுங்கள். அதில் எந்த வேலை முக்கியமோ, அவ்வேலையை முதலில் செய்து படிப்படியாக அன்றைய நேரசூசிக்கு தகுந்தாற்போல் செயலாற்ற முயற்சியுங்கள். இப்படி ஒவ்வொரு நாளும் செய்வதால் நேரமும் மிச்சமாகும். எவ்வித வேலையும் விடுபடாது. எந்த வேலையை செய்யத் தீர்மானிக்கும்போதும் இன்றே செய்யவேண்டுமென்ற முழு நம்பிக்கையுடன் செயற்படலாம். ஆகவே, ஒவ்வொரு நாளும் அதிகாலை நித்திரை விட்டெழப் பழகிக்கொள்வோம். அப்போதே அதிக நேரம் நம் கைவசம் எஞ்சியிருக்கும். எந்த வேலையையும் சுறுசுறுப்புடன் செய்தால் வெற்றி நிச்சயம். அலுவலகத்திலோ வீட்டிலோ நண்பர்களுடன் வீண் அரட்டை அடிப்பதைத் தவிர்த்தால் அந்நேரம் மிகப் பெறுமதியாக அமையும். யாருடனாவது தொலைபேசியிலோ நேரிலோ பேச நேர்ந்தால் சுருக்கமாக பேசுங்கள் கடிதங்கள் எழுதும்போதும் சுருக்கமாகவே எழுதுங்கள். இதனால் வாசிப்பவர்களுக்கு தெளிவாக இருப்பதோடு, எழுதுபவருக்கும் வாசிப்பவருக்கும் நேரம் மிச்சப்படும். எழுதப்படும் கடிதங்களை அன்றே தபாலில் சேர்க்க முயற்சியுங்கள்.

ஓய்வு நேரங்களில் வீண் விளையாட்டுகளில் ஈடுபட்டு நேரத்தைச் செலவழிக்காதீர்கள். செய்தித்தாள்கள் மற்றும் வார இதழ்கள் போன்றவற்றை படித்தால் பல பொதுவான தகவல்களைப் பெற்று நம் நுண்ணறிவை மேம்படுத்திக்கொள்ளலாம். தினந்தோறும் காய்கறி வாங்கச் செல்லாமல், வாரத்தில் ஒருநாள் சென்று அவ்வாரத்துக்கு தேவையானவற்றை வாங்கினால், நேரமும் பணமும் மிஞ்சும்.

எந்நிலையிலும் பதற்றப்படாமல் ஒரே சீரான வேகத்தில் மகிழ்ச்சியுடன் நம் வேலைகளை செய்யப்பழகிக்கொண்டால் "நேரமில்லை" என்ற பேச்சுக்கே இடமின்றிப் போய்விடும்.

*துயரங்களை நினைத்து துன்பப்படுவதைவிட உயரங்களை நினைத்து உத்வேகப்படுத்திக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லில் உதித்த கருணாமூர்த்தியும் இன மொழி சமயம் கடந்த இறை பக்திப் பரவச நிலையும்

— திரு த. செல்வசோதி அவர்கள் —

ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்னர் வாழ்ந்த அரசர்கள் கற்கோவில்கள் கட்டியும், கற்சிலைகள் வடித்தும் தங்களது பெயரை நிலைநிறுத்தியதுடன் வரலாற்றில் இடம் பிடித்துமுள்ளனர். இக்கோவில்களின் புராதன, வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்கள், சிலைகள் என்பன அந்நாட்டின் பிரதேசங்களின் இன, மொழி, சமய, பண்பாட்டு மரபுரிமை வரலாற்றுச் சின்னங்களாக அமைந்து காணப்படுவதுடன், குறித்த சமூகத்தின் வரலாற்று இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கான சான்றாதாரமாயும் அமைந்து காணப்படுகிறது. 6ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் பகுதியாகக் காணப்பட்ட "பாமியன்" என்ற பிரதேசம் (தற்போதய ஆப்கானிஸ்தானின் பாமியன் மாகாணம்) இந்து பௌத்த வரலாற்றுப் பிரதேசங்களாகக் காணப்பட்டதுடன் ஆச்சிரமங்கள், துறவிகளின் மடங்கள் அமைந்த பிரதேசங்களாகவும் விளங்கியுள்ளது. இங்கே உலகின் மிகப்பெரிய புத்தர் சிலைகளான 180 அடி உயரம்கொண்ட "வைரோசனர்" சிலையும், 120 அடி உயரம்கொண்ட "சாக்கியமுனி" சிலையும் காணப்பட்டுள்ளன. இவை "பாமியன் புத்தர் சிலைகள்" என அழைக்கப்பட்டது. அதுமட்டுமன்றி இச்சிலைகள் இந்திய - கிரேக்க கட்டடக் கலைகளின் கலப்புப்பாணிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியதுடன் "காந்தாரக் கலை" என்ற பெயரையும் கொண்டிருந்தன. அதுமட்டுமன்றி இச்சிலைகள் உட்பட இப்பிரதேசம் உலக மரபுரிமைச் சின்னங்களாக ஐக்கிய நாடுகள் சபையின் "யுனெஸ்கோ" அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டும் இருந்தன. 2001ஆம் ஆண்டில் அந்நாட்டின் அன்றைய நிர்வாக ஆட்சியாளர்களால் குறித்த சமயக் குழுமத்தின் வரலாற்றை அடியோடு அகற்றவேண்டும் என்ற குறுகிய சிந்தனையின் அடிப்படையில் இவ் இரு பாமியன் புத்தர் சிலைகளும் 2001ஆம் ஆண்டில் தகர்க்கப்பட்டன.

"காந்தாரக்கலை" என்ற அம்சத்துடன் காணப்பட்ட இவ் இரு புத்தர் சிலைகளும் அங்கு தகர்த்தெறியப்பட்ட சந்தர்ப்பத்தில் இங்குள்ள குறித்த சமய குழும மக்கள், இளைஞர்கள், மாணவர்கள் மனவேதனையில் வன்முறையினை தெரிவுசெய்தபோது, வன்முறைக்கு இடமளிக்காது குருணாகல் மாவட்டம் இரம்படகல்ல, வித்தியாசாகர விகாராதிபதி வண. எகொடமுல்லே அமரமோலி தேரர் செயற்பட்டமையும், இவ்விடயத்தினை மும்மொழிகளில் உள்ள "கல்லில் உதித்த கருணாமூர்த்தி" எனும் நூலில் குறிப்பிட்டமையானது வரவேற்கத்தக்கது. அதேவேளை பொறுமையினால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை என்பதனை நிரூபித்துள்ளதுடன் வரலாற்று சாதனையும், வெற்றியும் அடைந்துள்ளது. இவ் இரு புத்தர் சிலைகளும் தகர்த்தெறியப்பட்ட செயற்பாட்டின் விளைவாக இந்நாட்டில் மனமுடைந்திருந்த சமயக் குழுமத்தினரின் இறை

*உன் மனம் வலிக்கும்போது சிரி. பிறர் மனம் வலிக்கும்போது சிரிக்கவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திப்பரவசத்தின் வாயிலாகவும், இறம் பொடை ஆஞ்சநேயப் பெருமானது அருட் கடாட்சத்துடனும், இன, மொழி, சமய நல் இணக்கத்திற்கு முன்னுதாரணமாகச் செயற் பட்ட குருணாகல் ரிதியகம, இரம்படகல்ல, வித்தியாசாகர விகாரையின் விகாராதிபதி வண. எகொடமுல்லே அமரமோலி தேரரின் முயற்சியின் பயனாகவும், தேரர் அவர்கள்:

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியராகப் பெறின்"**

(திருக்குறள் 666)

எனும் திருக்குறளிற்கு ஆதார சாட்சி யாகவும் திகழ்ந்து, தேசபந்து தே. ஈஸ்வரன் அவர்களது மனதினை கருணாமூர்த்தியாகிய சித்தார்த்த கௌதம புத்தபெருமான் ஆட் கொண்டு, இந்திய சிற்பாசிரியரான பத்மஸ்ரீ முத்தையா ஸ்தபதி அவர்களது கைவண் ணத்தில் விகாரைக்கு அருகில் காணப்பட்ட கருங்கல் கற்பாறையில் ஒரே கல்லில் செதுக் கப்பட்ட உலகின் மிகப்பெரிய சமாதிநிலை புத்தர்சிலை 67.5 அடி உயரம் கொண்டதாக குருணாகல் மாவட்ட ரிதியகம இரம்படகல்ல, வித்தியாசாகர விகாரையில் அமையப்பெற்றுள் ளது. கருணை மழை பொழியும் இப் புத்த பெருமானது உருவச்சிலையின் ஆரம்பப் பணிகள் 2002 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 13ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 27 சிற்பாசிரி யர்களின் அர்ப்பணிப்பான கடமை உணர்வின் பயனாக, 2015ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30ஆம் திகதி மக்கள் வழிபாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. அங்கு தகர்த்தெறியப்பட்ட புராதன புத்தர் சிலைகளிற்கு இணையாக இது வரை உலக வரலாற்றில் அமையப்பெற்றிராத புத்தபகவானது சிலை இலங்கையில் அமையப் பெற்றதானது கருணாமூர்த்தியின் இறைபக்திப் பரவசத்தினதும் சமய, இன, மொழி நல் இணக்கத்திற்கும் முன்னுதாரணமாக அமையப் பெற்றதுடன் வரலாற்றில் பதியப்பட்டு காலத் தால் நின்று நிலைத்து உலகப்புகழும் பெற் றுள்ளது.

இப் புத்தபெருமானது செதுக்கல் பணியின் ஆரம்பப்பகுதியான முகம் செதுக்கி முடிந்த நிலையில் குறித்த விகாரைக்கு புத்த பெருமானைத் தரிசிக்கவந்த கண்டியைச் சேர்ந்த வயோதிபப் பெண்மணி உட்பட பலர் செதுக்கப்படும் கருணாமூர்த்தியின் முகத் தினைப் பார்வையிட்டு இறை பக்திப்பரவசத் தின் காரணமாக தன்னிடமிருந்த தங்கச் சங்கிலி, நெக்லஸ், 4 தங்க வளையல்கள் போன்றவற்றினைத் தன் கைக்குட்டையில் வைத்து இக்காலத்தில் விகாராதிபதியிடம் வழங்கியமையானது மனம்கொள்ளத்தக்கது.

இவ்வாறான தமது நகைகளை ஆல யத்திற்கு வழங்கிய நிகழ்வொன்று வரலாற்றுச் சிறப்புமிக்க பொலிகண்டியில் 1928ஆம் ஆண் டில் இடம்பெற்றுள்ளது. இதனை இவ்விடத் தில் குறிப்பிட்டே ஆகவேண்டும். பொலிகண்டி கந்தவன ஆலயத்தில் உலகில் மிகப்பெரி யதும், இலங்கைத் திருநாட்டிற்கு கிடைத்த அரிய பொக்கிஷமும், கந்தவனக் கந்தன் கருணைமழை பொழிவதும், அருட்கடாட்சம் நிறைந்ததும், முருகனை - அழகன் என குறிப்பிடுவதைப்போன்று அழகுடையதுமான ஐம்பொன்னினாலான மகவல்லி, கஜவல்லி சமேதராய் இந்திரமயிலில் அமர்ந்து இருக்கும் 4' அளவிலான உயரம்கொண்ட சண்முகப் பெருமான் விக்கிரகம் காணப்படுகிறது. இது 1928ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆலய அறங் காவலரால் ஆலய வளாகத்தில் வைத்து வார்ப் பிக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. அவரது நேர்த்தியின் பொருட்டு வார்ப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படினும் கந்தபுராணத்திற்கு அமைய சூரபத்மனை சங்காரம் செய்வதற்கு சண்முகப் பெருமானே எழுந்தருளுகின்றார். ஆகமவிதி

*உன்மீது உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் கடவுள் நேரில் வந்தாலும் பயனில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத செல்வச்சந்நிதியில் கூட சண்முகப் பெருமானே எழுந்தருளுகின்றார். எழுந்தருள லும் வேண்டும் அதுமட்டுமன்றி சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் எழுதிய நூல் "சுப்பிரமணியர் கொண்ட திருப்பெருவடிவம்" எனும் பெயரிலும் காணப்படுகிறது. இங்கு திருப்பெருவடிவம் என்பது சண்முகப் பெருமானையே குறிப்பிடுகிறது. அப்போதய அறங்காவலர் இறைபக்தியுடனும் சூரசம்காரத் திற்கு எழுந்தருளுவதற்கு சண்முகப்பெருமான் இல்லாத நிலையிலேயே இதனை வார்ப்பிக்க எண்ணியமையானது அவரது தூர நோக்கான சிந்தனைக்கும் திட்டமிடலுக்கும், கந்தபுராணத் திற்கும் எடுத்துக்காட்டாகும். இவ்வாறு 1928 ஆம் ஆண்டில் ஐம்பொன் சண்முகர் விக்கிர கம் கந்தவன ஆலய வளாகத்தில் வைத்து வார்ப்பிக்கப்பட்டபோது இப்பிரதேச மக்கள் அனேகமானோர் ஏராளமான பொன்னை, தமது நகைகளை, இவ் விக்கிரகம் வார்க்க தயாரான கலவையில் சேர்த்தனர். சிலர் தாம் அணிந்திருந்த திருமாங்கல்யத்தைக்கூட (தாலி) இதில் சேர்த்தமையானது நோக்கற் பாலதே. இவ்வாறு கந்தவன சண்முகருக்கு திருமாங்கல்யத்தை சேர்த்த பெண்மணிகளில் ஒருவராக வடமராட்சி நவிண்டிலைச் சேர்ந்த ஒருவரும் அடங்குகிறார். இவர் இவ்வாறு செய் தமையானது உறவினரிடையே அக்காலப் பகுதியில் ஆச்சரியத்தையும், சஞ்சலத்தையும் ஏற்படுத்தியதாகவும், பின்னர் "கந்தவனத் தானை வழிபட்டே திருமணம் நிறைவேறிய தாயும் எனவே தாலி அவருக்கே உரிய தானது ஆச்சரியப்படுவதற்கு அல்ல" என அனைவரும் சமாதானம் அடைந்ததாகவும் எமது பேத்தியார் கூறியது நினைவில் உண்டு.

"கனவிற் றொட்டது கைபிழை யாகாது
நனவிற் சேர்ப்பநின் னளிபுனல் வையை
வருபுன லணிகென வரங்கொள் வோரும்
கருவயி றுறுகெனக் கடம்படு வோரும்"

(பரிபாடல்)

இங்கே பெண்கள் காதலரோடு இருப் பதாகக் கண்ட கனவு பொய்யாகாமல் நன வாக வேண்டுமென (திருமணம் நிறைவேற) வேண்டி வழிபட்டதாக பரிபாடலில் குறிப்பிடு வதாக கலாநிதி ச. மனோன்மணி அம்மா அவர்கள் நூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்கள்.

குறித்த பொலிகண்டி கந்தவன ஆலய ஐம்பொன் சண்முகப்பெருமான் சூர சம்காரத்திற்கு முன் இந்திரனை மயிலாகக் கொண்டு "இந்திர மயிலாகவும்", சூரசம்காரத் திற்குப் பின் சூரனை மயிலாகக்கொண்டு "சூரமயிலாகவும்", முருகப்பெருமான் பரம னிடம் மாங்கனி பெறவேண்டி உலகை வலம் வந்தது "கலபக சுகமயில்" எனும் அதிவேகம் கொண்ட மயிலுமாகும்.

இக் காலத்தில் (2002 - 2015) கண்டி யைச் சேர்ந்த வயோதிபப் பெண்மணி கருணா மூர்த்தியாம் சித்தார்த்த கௌதம புத்தபெரு மானுக்கு தாம் அணிந்திருந்த தங்க நகை களை மனமுவந்து வழங்கியமையும் அக் காலத்தில் (1928) நவிண்டிலைச் சேர்ந்த பெண்மணி கருணை பொழியும் கற்பூரக் கந்தப் பெருமானுக்கு திருமாங்கல்யத்தையே வழங்கி யமையானதும் இறைபக்திப் பரவசமானது சாதி, சமய, மொழி, இன, பால் வேறுபாடுகளிற்கு அப்பாற்பட்டது என்பதை ஆதாரத்துடன் நிரூபித்துள்ளது.

---

குறைவாகப் பேசு! அதிகமாக வேலை செய். பழங்காலத்தில் முனிவர்கள் மௌனவிரதம் கடைப்பிடித்தனர். ஏன் மௌனம் கடைப்பிடிக்க வேண்டும்? அதிகமாகப் பேசுவதால் பொய் கூற நேரிடும். உள்ளே மறைந்திருக்கும் இரகசியங்களையும், எண்ணங்களையும் வெளியிட நேரிடும். ஆகையால் அக்காலத்தில் மக்கள் மௌனம் கடைப்பிடித்தனர்.

*தளராத இதயம் உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று எதுவும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் – 08

## கர்மயோகம்

*– திரு பூ. சோதிநாதன்* அவர்கள் –

### 01. செயலின்மை சாத்தியம் இல்லை

பகவத்கீதையின் மூன்றாம் அத்தியாய விடயம் புகழ்மிக்க கர்மயோகக் கோட்பாடு ஆகும். கீதை முழுவதிலும் உள்ள மிகச் சிக்கலான பகுதிகளுள் ஒன்று இந்தக் கர்மயோகக் கோட்பாடு ஆகும். கீதையிலுள்ள பூரண செய்தியின் அடிப்படைத் தத்துவங்களைப் புரிந்து கொள்வதற்கு ஒரு திறவுகோலைத் தருவதனால் இக்கோட்பாடு முக்கியமான ஒன்றாக அமைகின்றது. சாங்கியம் என்ற புரிந்துகொள்ளலின் அடிப்படையிலேயே செயல் அமைய வேண்டும் என்பது நாம் முன்னரே கண்ட விடயமாகும். அந்த விடயத்தைக் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் காணலாம். புரிந்துகொள்ளலின் அடிப்படையில் செயல் அமைய வேண்டும் என்பது எவ்வாறு சாத்தியம் ஆகும்? கீதையின் மூன்றாவது அத்தியாயத்தில் அச்சாத்தியப்பாடே விளக்கப்பெறுகிறது. செயலைப் பொறுத்தவரையில் மனித மனங்களிலே சில தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. உதாரணமாக, நாம் சில சமயங்களில் செயல் செய்துவந்தது இனிப் போதும் என்று உணர்கிறோம். மனிதர் அவ்வாறு எதையும் செய்யாமல் இருக்க உணரும் சில சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனால் பகவத்கீதை அவ்வாறு எதனையும் செய்யாமல் இருப்பது சாத்தியம் இல்லை என்றே கூறுகின்றது.

### 02. தவறான புரிந்துணர்வு

எல்லாம் பிரபஞ்சச் செயல் என்ற ஒரு முக்கியமான காரணத்திற்காக எதையும் எவரும் செய்யாமல் இருப்பது என்ற ஒரு விடயம் சாத்தியம் இல்லை. பிரபஞ்சம் எப்பொழுதும் செயற்பட்டுக்கொண்டே இருக்கின்றது. அந்தப் பிரபஞ்சத்தினால் ஒருபோதும் செயலற்று இருக்க முடியாது. எனவே பிரபஞ்ச விதியை மீறி எவர் ஒருவரும் செயலற்று இருக்க முடியாது. நாம் ஒவ்வொருவரும் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாக இருப்பதனால் அவ்வாறு செயலற்று இருக்க முடியாது. பிரபஞ்சம் முழுமையிலும் செயற்படும் விதியே எவர் ஒரு மனிதரும் நடந்துகொள்ளும் முறையையும், இவ்வுலகில் எந்த ஒன்றும் இயங்கும் முறையையும் நிர்ணயிக்கின்றது. எனவே நீயோ நானோ இதை அல்லது அதைச் செய்யப்போவதில்லை என்று கூறுவது தவறான புரிந்துணர்வாகவே அமையும். தனிமனிதனில் இருந்து பிரபஞ்சத்தையோ பிரபஞ்சத்தில் இருந்து தனிமனிதனையோ பிரிக்க முடியாது. இப்பிரபஞ்சத்தில் எதுவும் செயலற்று இருக்கமுடியாது என்பதனால் எவரெனினும் செயலற்று இருக்கவும் முடியாதே. இதனால் எவரும் செயலைப் பொறுத்தவரையில் அமைதி பேணுவதற்கு வாய்ப்பு இல்லை. செயலின் தன்மைபற்றிய தவறான புரிந்துணர்வின் காரணமாகவே செயலற்று இருத்தல்

*இலட்சியம் இருக்கும் இடத்தில் அலட்சியமே இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்து உருவாகி உள்ளது. எமது கைகளும் கால்களும் அசையவில்லை என்றாலும், நாம் ஒரு வார்த்தையேனும் பேசவில்லை என்றாலும் நாம் செயலற்று இருக்கிறோம் என்றே எண்ணுகிறோம். ஆனால், செயல் என்பது உடல் உறுப்புக்களின் அசைவு மட்டுமே என்று கருதவேண்டிய அவசியம் இல்லை.

## 03. செயல்

எமது உறுப்புக்கள் இயங்கும் செய்முறைமூலம் எம்மிடத்திலும், எமது சூழலிலும் நாம் ஏற்படுத்தும் ஓர் அதிர்வே செயலாகும். உடலில் உள்ள ஒவ்வொரு கலமும் செயல்படுகிறது. அத்துடன் எமது மனம் ஒருபோதும் செயல் அற்று இருப்பது இல்லை. சிந்திப்பதும் செயல் செய்வதுதானே. எனவே, உண்மையில் செயலற்று இருக்கவேண்டும் ஆயின் சிந்திப்பதையும் நிறுத்த வேண்டும். அத்துடன் ஆழ்ந்த நித்திரையில் மனம் செயல் அற்று உள்ளது எனக் கூறும்போது கூட உண்மையில் அது ஓர் வேறு நுண்முறையில் செயற்படுகின்றது. நித்திரை பற்றிய உளவியலானது நித்திரையில்கூட உண்மையில் மனம் செயல் அற்று இருப்பது இல்லை என்பதை எமக்கு அறியத் தருகிறது. நம்மால் முற்றும் செயல் அற்று இருக்க முடியும் என்ற ஒரு கணத்தைச் சிந்திப்பது சாத்தியம் இல்லை. சிறிய அணுவில் இருந்து உயர்ந்த பால்வெளி அண்டம்வரை எதுவும் செயல் அற்றுச் சோம்பி இருப்பதை நம்மால் காணமுடியாது. அர்ச்சுனனது செயற்படப்போவதில்லை என்ற தீர்மானத்திற்கு கிருஷ்ணனுடைய விடையில் அமைந்துள்ள பல அம்சங்களுள் எல்லாமே செயற்படுகின்றன என்ற இதுவும் ஒன்றாகும். "செயலின்மை" என ஓர் விடயம் இல்லை; உனது இருப்பில் இருந்து உனது செயல் பிரிக்கப்படக் கூடியது அன்று. ஒவ்வொரு எல்லைக்கு உட்பட்டதும் அதன் எல்லைக்கு உட்பட்ட நிலையாலேயே செயற்படுகிறது. செயல் என்பது எல்லைக்கு உட்பட்டவற்றின் தன்மையினது அத்தியாவசியமான ஒரு விளைவு ஆகும்.

## 04. எல்லைக்குள் எல்லையின்மை

எல்லாமே ஏன் செயற்பட்டுக்கொண்டு இருக்க வேண்டும் என ஒருவர் ஆச்சரியப்படத்தான் வேண்டும்? ஏன் முழுப் பிரபஞ்சமும் எதனையோ நோக்கி வளர்ந்து கொண்டும் இயங்கிக் கொண்டும் இருக்கவேண்டும்? அந்த விடயம் மிக எளிமையானது. எல்லைக்கு உட்பட்டதன் பிரதான பண்பான எல்லை இல்லாத தன்மை காரணமாக அது தனது எல்லைக்கு உட்பட்ட தன்மைகளை வெற்றிகொள்வதற்குப் போராடுகின்றது. எனவே உண்மையில் நாம் எல்லைக்கு உட்பட்டவர்கள் அல்லர். உண்மையில் அந்த எல்லைக்கு உட்பட்ட உணர்வே வளர்ச்சி என்னும் செயல்மூலம் அவ்வெல்லைக்கு உட்பட்ட தன்மையினை மாற்றிக்கொள்ள முயற்சி செய்கின்றது. எச்செயலும் எல்லைக்கு உட்பட்டவாறு தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றது அன்று. ஒவ்வோர் எல்லைக்குட்பட்ட மனிதராலும் மேற்கொள்ளப்படும் அதிர்வு அதன் செயலிலேயே உள்ளது. நாம் பல்வேறு அடுக்குகள் கொண்ட ஆளுமையினால் உருவாக்கப் பெற்றிருக்கின்றோம். எமது அந்த ஆளுமையின் ஒவ்வொரு அடுக்கும் எல்லைக்குட்பட்ட தன்மைகளை வெற்றிகொள்ள அதிர்ந்துகொண்டு இருக்கின்றது. நாம் எல்லை அற்றதில் எம்மை நிலைப்படுத்திக் கொள்வதன் மூலம் எல்லா எல்லைக்கு உட்பட்ட தன்மைகளையும் முற்றாக அழிக்கும் நோக்கோடு

*அவசரமாகத் தவறு செய்வதைவிட தாமதமாகச் சரிவரச் செய்வதுமேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைக்கு உட்பட்ட தன்மையில் இருந்து மேலும் மேலும் வளருகின்றோம். நாம் எல்லையற்றதில் நம்மை நிலைநிறுத்திக்கொள்ளும் வரை செயல் புரிபவர்கள் ஆகவே இருப்போம்.

## 05. செயலாற்ற வேண்டியவர்களே நாம்

இந்தப் பிரபஞ்சத்தில் செயலற்ற தன்மை என ஒரு விடயம் இல்லை. எனவே செயலின்மை என்ற வார்த்தையே அர்த்தம் அற்றது. அத்துடன் ஓர் உருவத்தின் செயலினது ஆரம்பம் இன்மை செயலின்மை எனக் கருதப்பட முடியாது. கீதையின் மூன்றாம் அத்தியாயத்தின் ஆரம்பத்திலேயே சிந்தித்துக்கொண்டு உடல் ரீதியாகச் செயலற்றிருப்பது வன்மையாகக் கண்டிக்கப் பெறுகின்றது. அவ்வாறு இருப்பது ஒரு மனிதனைப் பொறுத்து ஏமாற்று மனப்பான்மை மட்டுமன்றிப் பொதுவாக உண்மை நிலைகளைப் பொறுத்தவரையில் தவறான அணுகு முறையும் ஆகும். உடல் ரீதியாகச் செயல் ஆற்றும் உளரீதியாகச் செயலாற்றிக்கொண்டும் இருக்கின்ற மனிதர்களுக்குப் பகவத்கீதை ஆசிரியரது கருத்து அதுவாகும். மனச் செயற்பாடும் உண்மையான செயற்பாடாகும். எமது முயற்சியோ சுதந்திரமோ எமது மனம் வேலை செய்யும் முறையிலேயே தங்கி உள்ளது. அதனை விடுத்து அது எமது உடலின் அசைவில் மட்டும் தங்கி இருக்கவில்லை. எனவே, பிரபஞ்ச அமைப்பின் காரணமாகச் செயல்பற்றிய இம் முக்கிய கருத்து, ஒவ்வொருவரும் செயல் ஆற்றுவதனையும் செயலாற்ற வேண்டி இருப்பதனையும் கூறுகின்றது.

## 06. வேள்வி யாகக் கர்மம்

பிரபஞ்ச விதியினால் நாம் வற்புறுத்தப்பெற்று அதன்படி செயல் ஆற்ற வேண்டுமெனின் அந்தப் பிரபஞ்சம் என்னும் இயந்திரத்தின் கருவிகள் ஆகிவிடுவோம். அவ்வாறு ஆகினால் நாம் எவ்வித ஆதரவும் அற்றவர்களாகவே தோன்றுவோம். நாம் அவ்வாறு ஆதரவு அற்றவர்கள் தானா? எம்மிடம் ஏதேனும் சுதந்திரம் இல்லையா? யோகம் என்றால் என்ன? அந்த வகையான தவிர்க்கமுடியாத செயலில் உள்ள பந்தத்தில் நின்றும் எச் சூழலிலும் நாம் நீங்கமுடியாது எனின், ஏன் எதற்காக எந்த முயற்சியையும் செய்ய வேண்டும்? அதற்கான விடையே கர்ம யோகத் தத்துவம் ஆகும். கர்மம் அல்லது செயல் பந்தத்தை உருவாக்கக் கூடும் என்றாலும் கர்மயோகம் பந்தத்தை ஏற்படுத்தப் போவதில்லை. உள்ளார்ந்த நோக்கத்தை அல்லது தனிப்பட்ட குறிக்கோளை நிறைவேற்றும் செயலே பந்தத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால் வேறொரு வகையான செயல் பந்தத்தை ஏற்படுத்துவது இல்லை. அந்த வகையான செயலைப் பகவத்கீதை யக்ஞ கர்மம்- அதாவது வேள்வி அல்லது யாகம் என்று அழைக்கிறது. செயலையே யாகமாகச் செய்வதே அதன் அர்த்தம் ஆகும். யாகம் என்பது தியாகமே. படைப்புக் காலத்தில் இறைவன் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு செய்தியோடு கூடவே படைத்துள்ளான் என்று கிருஷ்ணன் ஒரு புராணக்கதை வடிவிலே கூறுகின்றான். "குழந்தைகளே! நான் உங்களை ஒரு கடமையோடு கூடவே படைத்துள்ளேன்" என்று படைப்புக் காலத்தில் எமது இறைவன் எங்களோடு பேசி உள்ளான் எனத் தோன்றுகின்றது. ஒரு மனிதனாகப் பிறப்பது என்பது பிரிக்கமுடியாதபடி கடமையோடு பிறப்பதே ஆகும். நாம் கடமையில் இருந்து விடுதலை பெற்றவர் எனின் தனி மனிதன் என்ற நிலையில் இருந்தும் விடுதலை பெற்றவர்களாகவே இருப்போம். (தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குங்கும மகிமை

– திருமதி பொ. திலகவதி அவர்கள் –

பொட்டுக்களில் பல வகையான பொட்டுக்கள் உள்ளன. அவையாவன, குங்குமப் பொட்டு, ஸ்ரார்ப்பொட்டு, மச்சப்பொட்டு, பிறைநிலவுப் பொட்டு, சர்ப்பப் பொட்டு, ஸ்வஸதிப் பொட்டு, ஸ்ரிக்கர்ப்பொட்டு ஆகும். இப் பொட்டுக்களில் தரக்குறைவான தயாரிப்புப் பொட்டுக்களைப் பயன்படுத்தினால் பெண்களின் நெற்றியில் தழும்புகளும் வேறு பல சருமப் பிரச்சினைகளும் ஏற்படும். மகளிர் தம் விருப்பப்படி தாங்கள் உடுத்திக்கொள்ளும் புடவையின் நிறத்திற்குரிய வண்ணமயமான ஸ்ரிக்கர் பொட்டுக்களைத் தினம் தினம் பயன்படுத்துகிறார்கள். பார்ப்பதற்கு அழகாக இருக்குமே தவிர அவற்றால் எந்தவித நற்பலன்களும் இல்லை. அதற்கு மாறாகப் பலவித வாழ்க்கைப் போராட்டங்கள், பிரச்சினைகள், காலதாமதமான திருமணம், திருமணம் ஆன பெண்ணிற்கு குழந்தையின்மை, குடும்பத்தில் சந்தோசமின்மை, குடும்பத்தகராறு, குழப்பங்கள், மனக்கவலை, பணக்கஷ்டம் போன்றவை இவர்களை ஆட்கொள்ளும். இவர்களுக்கு நண்பர்களைவிட விரோதிகள்தான் அதிகமாக இருப்பர்.

பொட்டுக்களில் சிறந்த பொட்டு குங்குமப் பொட்டாகும். மாங்கல்யதாரண வைபவத்தில் குங்குமம் முதலிடம் பெறுகிறது. குங்குமம் அணிந்தால் வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் சிவ சக்தியின் பூரண அருள்கடாட்சமும் கிடைக்கும். பராசக்தியின் அடையாளமாகச் செந்நிறக் குங்குமம் காணப்படுகிறது. சக்தியின் செயலாற்றலையும் இறைவனின் திருவருளாகிய பராசக்தியின் துணைகொண்டும் செயல் புரிகிறோம் என்பதைக் குங்குமம் உணர்த்துகிறது. திருமணம் ஆன பெண்கள் குங்குமம் அணியவேண்டும். தலைமுடியை வகுத்து அதற்கு நடுவிலுள்ள சீமந்த ரேகையில் குங்குமம் அணிவது தான் திருமணமானவள் என்றும், அதனால் பிற ஆண்கள் தன் மேல் ஆசை வைக்கவேண்டாம் என்றும், தான் வேறொருவரின் மனைவி என்றும் வெளிப்படுத்துவதற்கே ஆகும். சீமந்தக் கோட்டில் குங்குமம் இடுவதை முன்னோர் மிகக் கௌரவமானதாகக் கருதி வந்தனர்.

குங்குமத்தை மோதிர விரலால்த்தான் இடவேண்டும். கோயிலில் குங்குமத்தைப் பெறுகையில் வலது கரத்தில் வாங்கி இடது கரத்திற்கு மாற்றக்கூடாது. வலது உள்ளங் கையில் பெற்று அந்நிலையிலே மோதிர விரலை வளைத்துத் தொட்டு குங்குமத்தை நெற்றியில் இடவேண்டும். பெண்கள் நெற்றியில் கிழக்குத்திசை நோக்கி குங்குமம் வைத்தால் மாங்கல்ய பலம்பெற்று சுமங்கலியாகவே வாழ்வார்கள். வடக்குத் திசை நோக்கி வைத்தால் வம்ச விருத்தி, பூமி லாபம், பொருள் சேரும். சிவசிவ என்று திருநீறு அணிந்தபின் சிவகாமி என்று சிந்தித்து குங்குமம் இட்டால் சக்தி, பக்தி, முக்தி, சித்தி என்பன வரும். பவவினைகள் தீரும். குங்குமம் அணிந்த பெண்கள் வாழ்வில் சிவசக்தியின் பூரண அருள்கடாட்சமும், தெய்வ பக்தியும் திடமான எண்ணங்களும் எல்லோரையும் அரவணைத்துச் செல்லும். உயர்ந்த சிந்தனையும் சாமர்த்தியமும் கொண்ட அதிர்ஷ்டசாலிகளாகவும் திகழ்வார்கள் என்பது திண்ணம்.

எனவே நாம் அன்னையின் நினைவோடு நெற்றியில் குங்குமம் வைத்து எம்மிடம் உள்ள தீய இருளை அகற்றி பிரகாசமான வாழ்வு பெற்று கொரோனா, ஒமிக்ரோன் போன்ற நோய்களிலிருந்து தப்பி வாழ்வோமாக.

*முயலும் வெல்லும், ஆமையும் வெல்லும். ஆனால் முயலாமை என்றும் வெல்லாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்திக்கின்றோம்



யாழ். மாநகர சபை சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும், யாழ் மாநகர சபை ஆணையாளரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் சேவைகளோடு இணைந்தவருமான திரு த. ஜெயசீலன் அவர்களின் அன்புத் தயார் திருமதி மேனகா தனபாலசிங்கம் அவர்கள் கடந்த 14.02.2022 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா நிரந்தரமாக இறைவனின் பாதாரவிந்தங்களில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

# துயர் பகிர்கின்றோம்

சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகளுக்கு தன்னாலான பங்களிப்பை நல்கிவருபவரும், ஆசிரியருமாகிய திரு க. கைலைநாதன் அவர்களின் தயார் திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்கள் கடந்த 18.02.2022 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சந்நிதி வேலவனது பாதார விந்தங்களில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.



தூய்மையே எல்லா நல்லெண்ணங்களுக்கும் அடிப்படை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதுமடா சாமி போய்வா!

வந்ததும் போதும்; தந்ததும் போதும்;
நொந்ததும் போதும்; போதும்சாமி போய்வா!
விந்தையோடு மருந்துகொண்டு பிறந்துவா!
சந்தையெல்லாம் கொரோனா! சங்கடம் தீர்க்க வா!

முந்தைய வினைகளைக் கொண்டு வராதே
மந்தைகளாய் மனிதரை எண்ணி விடாதே
கந்தைத் துணியுடையோரை ஒதுக்கி விடாதே
குந்திலிருந்து புதினம் பார்க்கமட்டும் வராதே!

போதையில் நாடு மிதக்கிறது அதைப்
புரிந்து தடுக்க எழுந்து வா சாமி!
பாதையில் விபத்துக்களே விதியாகிறது
புதினம் பார்க்க வராதே! புதுமை செய்திடு!

எண்பத்தையாயிரம் குடும்பங்கள் தவிக்கின்றனவே!
ஏன்? தலைவனை இழந்து தத்தளிக்கின்றனவே!
கண்பட்ட மாதிரி கோவில்கள் மூடிக்கிடக்கின்றன,
கலண்டராய்ப் பிறக்காதே கரைசேரப் பிறந்துவா!

அரசியலும் ஆன்மீகமும் விளம்பரமாப் போய்ச்சுது,
ஆன ஒரு தலைமை இல்லாமல் போய்ச்சுது,
புரவிப் புயல் மழை தந்த பாடம் புரிந்து நீ
புதுவிதி கொண்டு வா! பேறாக வேண்டும் பூமி!

-கே.எஸ். சிவஞானராஜா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: QD/146/NEWS/2021

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org